331

குங்குமம்



கவியரசி ஸ்ரீமதி சரோஜினிதேவி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 APR
MADRAS

விற்பனையாளர் : பெஸ்ட் & கம்பெனி (லிமிடெட்), சென்னை.

VISIT

MEERANS

for Textiles of every description.

Distributors of Buckingham & Carnatic Mill goods, Mettur Mill goods, Bombay & Ahmedabad goods.

STOCKISTS OF:

TWEEDS—

FURNISHING

FABRICS—

HOSIERY—

FOREIGN

IMPORTED

GOODS.

S. MEERA SAHIB & BROS.,

38, EVENING BAZAAR ROAD,

MADRAS

It's Recognised

V. T. STORES

Direct Importers of :

Branded Grocery, Standard Provisions, Patent Medicines Toilet Wares, Paris Perfumeries, Smoking Requisites, Confectionery and Presentation Novelties and everything that the home needs.

Always Shop at :

V. T. ABDUR RAHMAN & CO.

The Well Known Grocers, General Merchants and Mess Purveyors

275—A, CHINA BAZAR ROAD,
G. T., MADRAS



E. A. WATCH CO., MADRAS

குடந்தை

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

நீங்கள் பூரண திருப்தியுடன் அணிந்து கொள்ளும் நவநாகரீகமான கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள் நிறைந்த எங்கள் (ஷோ ரூம்) கடைக்கு விஜயம் செய்யுங்கள். நீங்கள் விரும்பும் ஆடைகளை வாங்கிக் கொள்ளலாம்.

அறிவிப்பு—எந்தவிதமான ஆர்டர் சேலைகளையும் குறித்த காலத்தில் தயார் செய்து கொடுப்போம்.

உங்கள் ஆதரவைக் கோரும்:

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்,
கொள்ளேகால் பட்டுச் சேலைகள் தயாரிப்பவர்கள்.

99 (மாடி) பெரிய தெரு, கும்பகோணம்

Props. S. R. G. & SONS.

அரசாங்கம், நகர பரிபாலன சபைகள், ரயில்வே முதலிய ஸ்தாபனங்களுக்கு உயர்தரமான மரச் சாமான்கள் சப்ளை செய்பவரான

கே. எஸ். வெங்கடேஸ்வரா

அண்டு பிரதர்ஸ்

[10, பிராட்வே, சென்னை.]

உங்கள் வீடுகளை சுகமான ஆசனங்களாலும் அழகிய சாமான்களாலும் நிரப்ப காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

குங்குமம்

ஆசிரியை : எஸ். விசாலாக்ஷி

சர்வதாரி—பங்குனி

சிமிழ் 1. திலகம் 6

"குங்குமம்" காரியாலயம்

'முரளி'

பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு,

சென்னை 10.

பெண்களுக்குச் சேவை செய்வதே குங்குமத்தின் முக்கிய நோக்கம்

பொருளடக்கம்

			பக்கம்
	அட்டைப்படம்: நடராஜா	...	
1.	கவியரசி சரோஜினிதேவி—தலையங்கம்	...	7
2.	நிழல் தரும் எழிலி—ஸ்ரீ திருப்புகழ் மணி	...	11
3.	பொய்யும் மெய்யும்—ஸ்ரீமதி எஸ். வி.	...	14
4.	ஆனந்தாஸ்ரமும் தாய்மையும்—சாது ஸ்ரீ முருகதாஸ்	...	17
5.	ஹிந்து சட்டம்—"தராசு"	...	22
6.	பெண் கண்டக்டர்—ஸ்ரீமதி வே. சாரதா	...	26
7.	அதிசய ரேடியோ—ஸ்ரீமதி பாலாம்பிகை	...	32
8.	பிரேமி—"புனர்வசு"	...	38
9.	தேவியின் கிருபை—ஸ்ரீமதி விசாலாக்ஷி சுப்ரமணியம்	...	44
10.	நம் நிலமையும் நாகரீகமும்— ஸ்ரீமதி ஜானகி கிருஷ்ணன்	...	51
11.	நமது புராதன நாகரீகச் சிறப்பின் விமரிசை— ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி	...	56
12.	ராகங்களைப்பற்றிய சில வரலாறுகள் ஸ்ரீ டி. பார்த்தசாரதி டி. டி. எஸ்.	...	61
13.	சுகாதாரக் கல்வி—த. ந. ஸ்ரீ. ராகவாச்சாரி	...	
14.	சோவியத் ருஷ்யா கூட்டுறவுக் கடைகள்— காரமடை கே. நஞ்சயன்	...	69
15.	வசீகரம்—குமாரி சியாமளா	...	79
16.	சுகப்பிரசவம்—மெடிகோ		

விசேஷ பகுதிகள்: பெண்கள் பார்லிமெண்ட், கேள்வி பதில், சமையல், சிறுவர்பகுதி.

கவியரசி

பிறப்பும் வளர்ப்பும்

பெண்களின் திலகமாகிய ஸ்ரீமதி சரோஜினி தேவி நிஜாம் காலேஜின் தலைமை ஆசிரியரான டாக்டர் அகோரநாத் சடோபாத்தியாயாவுக்கு 1879-ல் ஹைதராபாத்தில் பிறந்தார். சென்னை சர்வகலாசாலை மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையில் தனது பனிரெண்டாவது வயதில் தேறினார்.

அவருக்கு பதினோரு வயதிருக்கும்போது ஆல்ஜிப்ரா கணக்கு ஒன்றுக்கு விடைவராமல் தவித்துக்கொண்டிருக்கும்போது ஒரு பாட்டைக் கவனம் செய்துவிட்டாராம். அன்றைய தினத்திலிருந்து கவி புனைவதில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டாராம். ஹைதராபாத் நிஜாம் உதவிச் சம்பளம் கொடுத்து ஸ்ரீமதி சரோஜினி தேவியை இங்கிலாந்துக்கு அனுப்பினார். மூன்று வருடங்கள் கிங்ஸ் காலேஜில் வாசித்துப் பட்டம் பெற்றார். புடவைக் கட்டிக்கொண்டு பரீக்ஷைக் கொடுத்தவர் இவரே முதல் ஸ்திரீயாவர்.

வைதீக சமூகம் கதிகலங்கியது

ஸ்ரீமதி சரோஜினி தேவி பிராமணக் குலத்தைச் சேர்ந்தவர். ஜாதி பேதத்தை அகற்ற தனது பதினெட்டாவது வயதில் மேஜர் எம். ஜி. நாயுடுவை காதல் மணம் செய்து கொண்டார். ஆந்திர நாட்டின் மருமகள்.

சிரஞ்சீவி

அரும்புகளான லக்ஷ்யங்கள் புஷ்பித்து பாடல்களாக சந்தோஷக் களஞ்சியத்தை நிரப்புவதற்குமுன் தன்னால் காலனையணைக்க முடியாதென்று ‘மரணம்’ என்னும் கவியரசியின் பாடலில் கண்டுள்ளபடி பலதரம் காலதேவனுடன் போராடி இருக்கிறார். சிரஞ்சீவித்வம் பொருந்திய பல கவிதைகளைப் புனைந்திருக்கிறார். ‘தங்க

வாசல்,' 'தீபஒளி,' 'காலப்புறவை,' முதலிய கவி மலர்கள் ஆங்கிலக் கவிகளையும் கவர்ந்தன.

வங்காளிக்குப் பிறந்தார். தென்னிந்தியாவை புக்ககமாகக் கொண்டார். இந்தியாவின் வாசற்படியான பம்பாயை தமது வாசஸ்தலமாகக் கொண்டார். ஆட்சி புரிந்த இடமோ ஐக்கிய மாகாணம். எழுபது வருஷ காலமும் தேசத்தின் பல பாகங்களிலிருந்து கொண்டு உலகம் முழுதும ஒளி வீசிக்கொண்டிருந்தது இந்தப் பெண் மாணிக்கம்.

எட்மன்ஸ் கோஸே, ஆர்தர் ஸைமண்ட்ஸ் முதலியோர் கவியரசியின் கவிதா சிருஷ்டிகளுக்கு உற்சாகமூட்டினர். அறிவுச்சுடரால் இருளைப் போக்கி பலவிடங்களில் பிரசன்னமாயிருந்து அண்ணாமலை தீபம் போல பிரகாசித்துக் கொண்டிருந்தார் கவியரசி.

உவமையற்றவர்

நீண்டகாலம் நடந்த சுதந்திரப் போராட்டத்தில் கதாநாயகியைப் போலிருந்தார். மகாத்மாவுக்கு ஜீவநாடி போலிருந்து தேசப்போராட்டத்திற்கு உதவிப் புரிந்தார். இந்திய தேசியக் காங்கிரஸுக்குத் தலைமை வகித்த முதல் பெண்மணி. விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்று போர் புரிந்தார். காங்கிரஸ் நிர்வாக சபையின் கனமான தூண்போல் பல வருடங்கள் சேவை செய்தார். 1925 அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அவர் பல கிராமங்களுக்குச் சென்று கிராமவாசிகளுடைய அன்பையெல்லாம் அபகரித்துக்கொண்டு விட்டார். வசீகரம் பொருந்திய தோற்றமும், குயிலினுக்கிணையான குரலும், அன்பொழுகும் வார்த்தைகளும், கண்டோரை வசப்படுத்தின. நிகரில்லாத கீர்த்திகளைப் பெற்றிருந்தும் வினயம் மிகுந்தவர்.

துக்கம்

குதூகலமும், சிரிப்பும், ஹாஸ்யமும் நிறைந்த அன்னைக்கு அவர் மகனின் மரணம் அதிர்ச்சியைக் கொடுத்

கிரீடம் PURE ALUMINIUM THE CROWN முத்திரை

பரிசுத்தமான அலுமினியத்திற்கு உத்தரவாதம்

க்ரீட முத்திரை தரித்த அலுமினிய பாத்திரங்கள்தான் மிகவும் சிறந்தவை.

பார்வைக்குப் பளப்பளப்பாகவும், கையாளுவதற்கு சௌகரியமாகவும், சோப்பாலோ, மிருதுவான மண்ணாலோ, சாம்பலாலோ சுத்தம் செய்வதற்கு எளிதாகவும் அவை இருக்கின்றன.

அலுமினியம் குறைந்த எடையுள்ளதாலும், சீக்கிரம் சூடாவதாலும், ஈயம் பூசவேண்டிய அவசியம் இல்லாமையாலும், இவை மலிவாக இருக்கின்றன.

மனித சுகாதாரத்திற்கு கொஞ்சம்கூட கெடுதல் செய்யாதவை. மேலும் ஆகாரங்களின் தரத்தை உயர்ந்த நிலையில் வைத்திருக்கக் கூடியவை.

மற்றெல்லா கழிவுபட்ட உலோகங்களைவிட பழைய தேய்ந்துபோன அலுமினியம் அதிக விலைக்குப் போகிறது.

எச்சரிக்கை: மலிவான அலுமினியத்தைக் குறித்து உஷாராயிருங்கள். ஏனெனில் அது அசுத்தமா யிருப்பதுடன் சமையல் பாத்திரங்களுக்கு விரும்பத் தகாததாகவு மிருக்கிறது.

ஜீவன்லால் 1929) லிமிடெட்

கீர்த்திவாய்ந்த "கிரௌன் பிராண்டு" அலுமினிய சாமான்கள் தயாரிப்பவர்கள்.

கல்கத்தா, பம்பாய், சென்னை, ராஜமன்றி,
டில்லி, ஏடன், ரங்கூன்.

தது. கண்கலங்கி சின்னாட்கள் வெளிக் கிளம்பாமலேயே இருந்தார்.

சீர்திருத்தவாதி

நிஜாம் தலைநகரில் பர்தா முறையை அகற்றுவதில் அலாதி அக்கரைக் கொண்டார் சரோஜினி. இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர். ஐக்கிய மாகாணத்திலுள்ள முஸ்லீம்கள் அவரை ஒரு உறவினராகவேக் கொண்டாடினர்.

ஹாஸ்யம்

மகாத்மாவை ஒரு விளையாட்டுக் குழந்தையைப் போல் பாவித்து அவர் உண்ணாவிரதமிருந்தபோது சிசுருஷை செய்து வந்தார். ஹாஸ்யம் ததும்பும் பேச்சால் பல தலைவர்களைத் தலை வணங்க வைத்திருக்கிறார்.

நாட்டின் சேவை

எழில் தரும் மரம் போன்ற சரோஜினியை தேசம் சும்மா விட்டதா? இல்லை. 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் அவரை ஐக்கிய மாகாண கவர்னராகப் போட்டதும் நாட்டின் சேவையாகக் கருதி அந்த மகத்தான பொறுப்பை அவர் மேற்கொண்டார். அவர் சொல்லுக்கு எங்கும் மதிப்பிருந்தது.

வீராங்கனையின் பிரிவு

கடைசி நேரத்திலும் தன் பக்கத்திலிருந்த நர்ஸை சிறிது நேரம் பாடச் சொன்னாராம். உன்னதக் கவியரசி மறைந்து விட்டார். ஆனால் அவர் காட்டிய பாதையில் என்றென்றும் மாதர்கள் சென்று கொண்டிருக்க ஆண்டவன் பலம் தரவேண்டும். பரந்த மனப்பான்மை, தேசபக்தி, ஊக்கத்துடன் கடமையைச் செய்தல் முதலிய நற்குணங்களில் செல்ல வழிகாட்டியாக சரோஜினி தேவி ஆத்மீகமாக எல்லார் மனதிலும் குடிகொண்டுள்ளார்.

அவர் கவிதைகளைப் போலவே அவர் லட்சியங்களும் அமரத்வம் பெற்று நமது உள்ளத்தில் குடிகொள்ள இறைவன் அருள்வாராக.

நிழல் தரும் எழிலி

ஸ்ரீ திருப்புகழ் மணி

மேகத்தின் வர்ணத்தை மாயன் மேனியில் வைத்தார். முருகன் தன் ஊர்தியாம் மயிலில் வைத்தார். ஆனால் எழிலியின் வண்ணத்தை இருவரும் தம் எண்ணத்தில் வைத்தனர். பணியும் அடியார்க்கு மேகம்போல் உதவும் இயல்பு ஆண்டவன் இயல்பு. அது என்னே!

முதிர்ந்த கோடை. ஆறு, தடாகங்கள், வாய்க்கால்கள் எங்கும் வரட்சி. ஒரு சொட்டு நீர் கிடையாது. பாதையில் செல்கின்றான் ஒரு வழிப்போக்கன். மணல் தணல் போல் சுட்டுத்தள்ளுகிறது. நிழல் அண்டையில் கிடையாது. மரமெலாம் பட்ட மரம்போல இலைகளற்றுக் குச்சியாய் நிற்கின்றன. தவிக்கின்றான். என்னதான் செய்வான்? பாவம்! தன்னையுமறியாமல் ஆண்டவன் நாமத்தைக் கதறுகின்றான். அவ்வேளையில் ஒரு மேகம் தென்திசையில் காணப்பட்டது. காற்றின் வேகத்தால் ஏவப்பட்டு சூரியனின் தீக்கிரணங்களை மறைத்தது. வழிப்போக்கன் 'அப்பா!' என்று பெருமூச்சு விட்டான். "இந்த மேகம் நல்லவேளையாய் நிழலைக் கொடுத்தது" என்றான்.

நிழலினால் அடைந்த பயன் மேலும் மீண்டுவரும் தீக்கிரணங்கள் தடைப்பட்டதுதான். சுகம்தான். மேகமோ அத்துடன் நிற்க வில்லையாம். கூட்டமாகச் சேர்ந்து மழையாய் கொட்டிவிட்டதாம். ஏற்கனவே இருந்த தாபத்தையும் போக்கிவிட்டது. பூமி குளிர்ந்தது. வழிப்போக்கன் செய்த புண்ணியம்.

எந்த காய்ச்சலால் வழிப்போக்கன் வருந்தினானோ, அதே காய்ச்சலால்தானே மேகம் தண்ணீரை முகந்தது. சமுத்திரத்தில் இருக்கும் உப்பு நீரையா முகந்து கொண்டு வருகின்றது மேகம்? அல்லவே! உப்பை யகற்றி அப்புவை சுத்தமாய் பேதித்து காருண்டமேகம் ஆகாசக் கங்கையென்று சொல்லக் கூடிய துல்யமான தண்ணீரைக் கொட்டுகின்றது. இதை ஒரு பெரியார் வர்ணிக்கின்றார்.

"மேகத்தின் வண்ணம் இகபரத்தாசை யகற்றிய பெரிய

யோகிகளின் வண்ணம்'' என்றார். கடல் நீரைக்கொண்டு, உப்பைத் தவிர்த்து, நல்ல நீரைப் பொழிகின்றது மேகம். அந்த நீர் பூவுலகுக்கும், வானுலகுக்கும் கங்கைபோல் தூயவாய் விடுகின்றதாம். நீரில் இருக்கும் துவரைக் கெடுத்து அதை சுத்தமாக்கி விடுகின்றதாம். இது யோகிகளின் இயல்பு என்றார். தீயக் கர்மங்கள் செய்து, தீவினையினால் பீடிக்கப்பட்டு ஈட்டிய பொருள்களைச் சுத்தம் செய்யவும் வகையுண்டோ? உண்டு என்கின்றார்.

தீவினையால் ஈட்டிய பொருளை, தீவினையின் கொடுமைக் கேற்ப, அதில் சரியான ஒரு பாகத்தை ஆசையற்ற யோகிகள் கைப்படும்படி அவரிடம் தானம் செய்து விட்டால்—அதாவது அவர்கள் முகமாய் செலவு செய்து விட்டால்—எஞ்சிய பொருள் தூயவையாய், தீவினையற்று, சௌபாக்யத்தைக் கொடுக்கும் என்றார், பரஞ்ஜோதி முனிவர்.

இழிந்த மாந்தர் கைப்பொருள்களும் இகபரத்தாசை
கழிந்த யோகியர் கைப்படின் தூயவாய்க்களங்கம்
ஒழிந்தவாறுபோல் உவரியுண்டு உவர் கொடுத்து எழிலி
பொழிந்தநீர் அமுதாயின புவிக்கும் வானவர்க்கும்

நிழலைக் கொடுத்து, தூயத் தண்ணீரை யளித்து, வெப்பத்தை நீக்கும் மேகத்தின் தன்மை தெய்வத்தின் தன்மை. இயல்பு.

பரமசிவன் இணையடி நிழலில் நிற்கப்பெற்றார் அப்பர் ஸ்வாமிகள். ஆசாபாச காமக்ரோதங்களால் எரிக்கப்பட்ட சுண்ணாம்புக்காளவாயில் வீழ்த்த பெற்றார்.

கதிதனை யொன்றையுங் காண்கின்றிலேன் கந்தவேள் முருகா
நதிதனை யன்ன பொய் வாழ்விலன் பாய்நரம்பாற் பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடுமா றெனைப் போதவிட்ட
விதிதனை நொந்து நொந்திங்கே என்மனம் வேகின்றதே!

என்று அருணகிரி கந்தரலங்காரத்தில் கதறுகின்றார். அருணகிரியார் வீழ்த்தப்பட்ட சுண்ணாம்புக் காளவாய் இது. பரமசிவன், முருகன் இவர்கள் பாதத்தை நினைத்ததும் வேக்காடு தவிர்ந்து குளிரப்பெற்றார்களாம். எப்படியோ வெனில் தேவாரம் புகலும்,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி நிழலே

பரமசிவனை 'நிழலாகி' நிற்பதாக அப்பர் பாடியுள்ளார். மேகத்தின் வண்ணமாய் வந்து ஆனந்த வாரிதியாய்ப் பொழிந்து அன்பர்களை அறைகூவியாளும் கருணையை தாயுமானர் அற்புதமாய் விளக்குகின்றார்.

காரார எண்ணரும் அனந்தகோடிகள் நின்று
காலூன்றி மழை பொழிதல் போல்
கால்வீசி மின்னிப் படர்ந்து பர
வெளியெலாம் கம்மி
ஆனந்தவெள்ளம் சோராது பொழியவே
கருணையில் முழங்கியே
தொண்டரைச் கூவு முகிலே!

கடவுளை நிழல் தரும் எழிலியாகவும், ஆனந்த வெள்ளம் சொரியும் கார்மேகமாகவும் அனுபவித்திருக்கும் திறம் அரிது, அரிது! மேகமாம் கடவுள் இந்த மழையை எங்கே பொழிகின்றார். எந்த ஆகாய வெளியில்? அன்பர்கள் மன ஆகாய வெளியில் கொட்டுகின்ற கருணை மழை அவர்கள் "கண்ணும் விண்ணும் தேக்காவே" என்றார். அன்பர் மனோ ஆகாயத்தில் தெய்வம் மேகமாய்ப் பரவி, ஆசாபாசக் காமக்ரோதங்களால் எரிக்கப்பட்டு தவிக்கும் மனதை, அத்தீய கிரணங்களால் நலியாமல், தான் மேகமாய் நின்று, நிழல்தந்து, ஆனந்த மழை பொழிந்து, கண்ணீர் சொரிய, ஆனந்த வெள்ளத்தில் அன்பரைக் காக்கின்றார். ஆகவே நிழல் தரும் எழிலியார்? கந்தனோ? ஆமாம் அவர்தான். எழிலி வடிவினன் என்று அருணகிரி பாடிய கண்ணனோ? அவரும் தான். எல்லாம் ஒன்றென்று உணர்ந்தபின் கண்ணன் வேறோ? கந்தன் வேறோ? எல்லாம் என் அம்மையப்பன்தான்.

பொய்யும் மெய்யும்

ஸ்ரீமதி எஸ். வி.

"அடே, பொய் சொல்லாதே, நீதான் எடுத்திருக்கணும். இங்கே வேரே யாரும் வரல்லே," என்று அப்பா வேலைக்கார முனியனிடம் உரத்த குரலில் சொல்லிக்கொண்டிருந்தார்.

"சாமி சத்தியமா சொல்ரேனுங்க. நான் கண்ணாலே பாக்கவேயில்லேங்க", என்று எண்சாணுடம்பை ஒரு சாணாகக் குறுக்கிக் கொண்டு முனியன் தான் நிரபராதி என்று நிரூபிக்க முயன்று கொண்டிருந்தான்.

அப்பாவுடைய பேனாவைக் காணோம். இரவு படுக்குமுன் எழுதிக் கொண்டிருந்தார். மேஜைமீது வைத்துவிட்டுப் போனது நன்றாக நினைவிருக்கிறது. எப்பொழுதும் போல காலையில் அப்பா அறையைச் சுத்தம் செய்ய முனியன் வந்தான். அவனைத் தவிர வேறுயாரும் அங்கு வரவில்லை. ஆகையால் அவன்தான் எடுத்திருக்க வேண்டுமென்பது அப்பாவுடைய ஊகம்.

அப்பாவுடைய ஊகம் மெய்யா? முனியனுடைய சத்தியம் மெய்யா?

இந்த சப்தத்தைக் கேட்டு சமயலறையிலிருந்து அம்மா வந்தாள். அவள் கையில் பேனா இருந்தது.

"ஏதுக்கிப்படி எறையரேள். நான்தான் கடைக்குப் பட்டியல் எழுதியனுப்பப் பேனாவை எடுத்துக்கொண்டு போனேன். அதற்குள் நீங்கள் இப்படி ஊர் உலகமெல்லாம் ஒன்றாய்க் கூட்டரேள். என்னைக் கேட்டுவிட்டு அப்புறம் சத்தம் போடுகிறதுதானே. அம்மாடி, இவரோடே—" அப்புறம் அம்மா சொன்னது சரியாகக் காதில் விழவில்லை. ஆனால் அது அப்பாவுடைய காதில் விழுந்திருந்தால் வீடு இரண்டு பட்டிருக்கும்.

"இங்கே தானே வெச்சோம். எப்படி காணாமல் போயிடும் என்று தெரியவில்லே. போகட்டும். அதுவரையில் பத்திரமாயிருந்ததே..." என்று அப்பா மனதைத் தேற்றிக்கொண்டார்.

"நான்தான் அப்பவே இந்த தங்கக்குல்லாப் பேனா ஷோக்கெல்லாம் உங்களுக்கு வேண்டாம், உங்களுக்கு மறதி ஜாஸ்தி என்று சொன்னேனே. கேட்டேளா. போனால் போகட்டும். இந்தப் பேனாவை நானே வச்சுண்டுடரேன். நீங்கள் இரண்டு மூணு ரூபாய்க்கு ஒரு புதுப்பேனா வாங்கிண்டுடுங்கோ."

முனியன் பேனாவை எடுத்திருப்பானோ என்று சந்தேகித்த பாபத்திற்கு பிராயச்சித்தம்! வேணும், இந்த அப்பாவுக்கு நன்றாக வேணும். பாவம், முனியன் எத்தனை நல்லவன். தன்மேல் அப்பா அபாண்டமாகப் பழிசுமத்தியதற்கு ஒரு வார்த்தைகூட எடுப்பாகச் சொல்லவில்லையே! அந்த சில நிமிஷங்களில் அவனுடைய தூய உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும் என்று பச்சாதாபப்பட்டேன். எனக்கு முனியன்மேல் எப்பொழுதும் ஒரு அலாதி பிரேமை.

பென்சிலேக் கடித்துக்கொண்டே சிந்தனேக் கடலில் ஆழ்ந்து விட்டேன்.

அப்பா முனியன் சொன்னதை நம்பவில்லே. அவன் சொன்னது மெய். ஆனல் அப்பா அதைப் பொய்யென்று நினேத்தார். ஆமாம், பொய்யும் மெய்யும் நமது நினேப்பில்தானிருக்கிறது.

"ஹிந்துஸ்தானத்து ஆறு குருடர்கள்" என்று ஒரு ஆங்கிலக் கவியை நான் நான்காவது பாரத்தில் படித்திருக்கிறேன், ஆறு குருடர்கள் யானேயைப் பார்க்கப் போனர்களாம். ஒருவன் யானேயின் காலேத் தொட்டுவிட்டு யானே ஸ்தம்பம்போ லிருக்கிறதென்ருனும். மற்றொருவன் யானேவாலேத் தொட்டுவிட்டு அது கயிறுபோ லிருக்கிறதென்ருனும். இப்படியே ஒவ்வொருவனும் யானேயின் ஒவ்வொரு பாகத்தைத் தொட்டுவிட்டு ஒவ்வொரு ரூபமாக மனதில் நினேத்துக் கொண்டார்களாம். "யானேக் கயிறுபோலிருக்கிறது" என்றவனே மற்றொருவன், "போடா போ, பொய் சொல்கிருயா, குருட்டுப்பயலே. யானே ஸ்தம்பம் போலல்லவா இருக்கிறது" என்ருனும்.

இந்த அறுவரில் ஒவ்வொருவரும் தாம் சொல்வது மெய் யென்றும் மற்றவர் சொல்வதும் பொய்யென்றும் தமது அனு பவத்திலிருந்து நினேத்தனர்.

நமது புலன்களுக்கும் அறிவிற்கும் எட்டாத ஒன்றைப் பொய் யென்கிருேம். காந்திமகான் ஒரு இசைத்தட்டு அருளி யிருக்கிருர். அதில் அவரது குரல் பதிவாகியிருக்கிறது. அந்த இசைத்தட்டு ஓடும்போது மகாத்மாவின் குரலேக் கேட்கிருேம். மகாத்மா பேசுவ தாகவே நினேக்கிருேம். ஒருவர் "இசைத்தட்டல்லவா பேசுகிறது, மகாத்மா காந்தி தான் செத்துப் போய் விட்டாரே. அவர் எப்படி பேசமுடியும்? நீங்கள் சொல்வது பொய்," என்ருல் நமது வார்த்தையை மெய்ப்படுத்துவது எளிதோ?

அந்த இசைத்தட்டில் காந்தி மகான் 'மெய்' என்ருல் என்ன என விளக்குகிருர். 'மெய்' என்பது தான் கடவுள், அதாவது 'அன்பு' என்கிருர். அறிவைக் கடந்த பொருள் கடவுள். ஆகையால் 'மெய்'யும் அறிவுக்கு எட்டாதது தானு? கடவுள் அன்புக்கு எட்டிய பொருளாயின் மெய்யும் அன்புக்குள அடங்கியதா? ஆமாம், நான் குழந்தையாயிருக்கும் போது அப்பா மடி மீது ஏறிக் கொஞ்சிக் கொண்டே "அப்பா, அம்புலிப் பாட்டி விளக்கு இன்றைக்கு அவிந்து போய் விட்டது. அதனல் தானே இருட்டாயிருக்கிறது," என்று கேட்டேன். அப்பா 'ஆமாம்' என்று உடனே ஒத்துப் பாடினர் அமாவாசை யன்று. ஏன் இருட்டாயிருக்கிற தென்று அப்பாவுக்குத் தெரியும். அம்புலிப் பாட்டிக்கு விளக்கேயில்லே யென்றும், அம்புலிப் பாட்டி என்பதுமே பொய்யென்றும் தெரியும். அப்படி யென்ருல் பொய்யை ஏன் மெய்யென்று ஒப்புக்கொண்டார்? என் மீதுள்ள அன்பு காரண மாகத்தானே!

முருகன் மயிலேறி வந்தானும். அந்த மயிலின் அழகையொப் பிட்டு வள்ளி ஆடி நின்ருளாம். இதை அருணகிரியார்

“ ஆடிய மயிலினை யொப்பிட்டு—வள்ளி
பீலியுமிலயு முடுத்திட்டு—வள்ளி
யாரினு மழகு மிகப் பெற்று—

என்று வர்ணிக்கிருர்.

மயிலின் அழகு அதன் தோகையினுலேயே அல்லவா? அந்த தோகையின் அழகைக் கண்டு தானே கண்ணனும் அதைத்தன் சிகையில் சூட்டிக் கொண்டான், ஆனல் ஐயா! அந்த அழகும் மெய்யல்லவே. நேற்றுத் தானே ஒரு காக்கையிறகிற்கும் மயிலிறகிற் கும் வித்தியாசமில்லை என்று சோதனை மூலம் நிரூபித்தேன்—என் வார்த்தையைப் பொய் என்கிறீர்களா? நீங்களே ஒரு மயிலிறகை பென்ஸாயினில் (Benzoine) நனைத்துப்பாருங்கள். அதன் அழகு இறகிலில்லை யென்றும் அந்த இறகின் செதிள்களில் அடங்கியுள்ள காற்றிலிருந்து தான் என்றும் அறிவீர்கள்.

பெரிய கூட்டம். பக்தர்கள் கூட்டம். பிரசங்கபானு, சகலசாஸ் திர சம்பன்ன, சஹஸ்ராவதானி சுப்பிரமண்ய அருட்கவிராயர் பேசப் போகிருர்,

“ மெய் யன்பர்களே————”

உடனே நான் காதைப் பொத்திக் கொள்கிறேன், ஆரம்பத் திலேயே பொய் பேசுகிறவர் பேச்சு எதற்கு என்று. மெய்யன்பர் களாம். பொய்யான மெய்யை மறந்து மெய்யான முருகனை நாடிக் கூடிய அன்பர்கள், தாம் நிலையற்றதென திரஸ்கரித்த உடலின் அன்பர்களா?

“அம்மா, இந்த சியாமளாவைப் பாரு, பென்ஸிலை முழுக்கத் தின்னுட்டாள்” என்று கிருஷ்ணன் போட்ட சத்தம் என்னை சிந்தனைக் கடலிலிருந்து கரையேற்றி விட்டது. இதோ நான் எழுதியுள்ளது எல்லாம் பொய்யா? மெய்யா?

போன் நெ. 2876

சித்திரப்பாடுள்ள வெள்ளி சாமான்களும் உத் திரவாதமுள்ள தங்க நகைகளும் கிடைக்குமிடம்.

கோதா ரமணிய செட்டி & கம்பெனி

229, சுபாஷ் சந்திரபோஸ் ரோடு,

மதராஸ் 1

ஆனந்தாஸ்ரமமும் தாய்மையும்

சாது ஸ்ரீ முருகதாஸ்

ஆனந்தாஸ்ரமம்! ஆம், அது ஆனந்தாஸ்ரமமேதான். எங்கு பார்த்தாலும் அன்பும், இன்பமும், அமைதியும் நிறைந்து விளங்குகிறது. ஒரு பக்கம் தூரத்தில் தெரியும் நீலக்கடல், எதிர்ப்புறம் சோலையும் மைதானமும், தூரத்தில் காணும் மலைத்தொடர்களும், ஆஸ்ரமத்தை ஒட்டி, "மஞ்சபதி" என்ற குன்று, காவல் காக்க நிமிர்ந்து நிற்கிறது. உயர்ந்த ஓரிடத்தில் பல கட்டிடங்களை அன்பர்களுக்காக வைத்துக்கொண்டுள்ளது இவ்வரிய ஆனந்தாஸ்ரமம். இங்கு துணி தோய்த்தல் முதற்கொண்டு சமையல், கோசாலை, பாடசாலை, தொழில்சாலை, ஔஷதசாலை வரை, எல்லா இடங்களிலும் இராம நாமம் சொல்லிக்கொண்டே தம்தம் பணிகளைச் செய்யும் தொண்டர்களை கொண்டிருப்பதால் காணச் சென்றவர்கள் அனைவரும் அமைதி உள்ளம் பெறும்படி செய்துவிடுகிறது.

மலசலங் கழிக்குமிடம், தெருவு முதலிய இடங்களை சுத்தம் செய்பவர்கள்கூட சுத்தமாகவும், முகமலர்வுடனும், ஆண்டவன் திருப்பெயரை சொல்லிக்கொண்டே தொழிலாற்றுவதைக் கண்டால் நம்மை அறியாது கையும், வாயும் இறைவனை வழிபடுகின்றன. மனக்குரங்கு ஆண்டவன் திருப்பெயராம் கனியை உண்டு, தொழிலாற்றுப்போகிறது. என்னே! ஆனந்தாஸ்ரமப் பெருமை.

கோசாலையில் காணும் பசுக்களும், எருமைகளும் அவற்றின் கன்றுகளும் அமைதியுடனும், கம்பீரத்துடனும் அன்பர்களுக்கு அமுதைத் தந்து, ஆஸ்ரமத்திற்கு மங்கள கரமாக விளங்குகிறது. எங்கும் அன்பும், ஆனந்தமும் நிறைந்துள்ளது.

காலை $7\frac{1}{2}$ மணிக்கெல்லாம் போஜனசாலை மணி ஒலிக்கும். அங்கு போனால் வரிசையாக ஆசனமிட்டு, இலை போட்டு, சுத்தமான தங்கம்போல் தேய்க்கப்பட்ட பித்தளை (கப், ஸாஸர்) பாத்திரங்கள் வைக்கப்பட்டிருப்பது முதலில் கண்களுக்கு இனிமையைத் தரும். ஆசனங்களில் உட்கார்ந்தவுடன் அன்பு பொங்கும் முகமும், தாய்மை நிறைந்த உள்ளமும், கனிவு நிறைந்த மொழியும் கொண்ட அன்பர்களாலும், தாய்மார்களாலும், நாவிற்கும், உடலுக்கும் இனிமை தரும் ஆகாரங்கள் கொடுக்கப்படும்.

ஆகாரமுண்டு வெளியே வலதுபுறமாகச் சென்றால் அங்கொரு மேடைகட்டி ஓர் பெரிய சுத்தமான பாத்திரத்தில் குளிர்ந்த தண்ணீரும், கையலம்ப சிறிய செப்புகளும், வைக்கப்பட்டிருக்கும். எதிரே அன்பர்கள் கைகால் அலம்பிய தண்ணீருண்டு வளரும் பச்

சிளம் வாழையும், கரும்பும், ராம நாமம் கேட்டு ஆனந்தக் கூத்தாடுவது போல் எதிர்ப்புறம் அசைந்தசைந்து ஆடி அன்பின் தத்துவத்தை விளக்கும்.

உண்டிக்குப்பின், ஆஸ்ரம பஜனைக் கூடத்திற்கு போனால் குழந்தை முகமும், சிரித்த இனிய மொழியும் கொண்டு, அசைக்க முடியாத உண்மைகளை கேட்போர் மனதில் பசுமரத்தாணி போல் வெகு விரைவில் உள்ளே செலுத்தி, மாசறுத்து, "உலகமெலாம் ஆண்டவன் திருவிளையாடற் கூடம், நாம் அதில், அவனால் ஆட்டப்படும் ஒரு சிறு ஜீவன். அவனாட்டியப்படி ஆடவேண்டும்," என்று இன்ப துன்பமற்று, வாழச் செய்யவல்ல சற்குரு இராமதாஸர் கல்லைப் பிசைந்து, கனிரசமாக்கவல்ல தாய்மையுடன் வீற்றிருக்கிறார். அவர் நம்முள்ளத்துக்கும், உயிருக்கும், பலத்தைக் கொடுக்கவல்ல நல்ல சத்தான ஆகாரம் கொடுப்பார்.

இவைகளை யெல்லாம் குறையாமல் உண்ணவும், இருக்கவும் ஆனந்தப்படவும், வரையாது கொடுக்கும் தாய்மைச் சக்தி ஓர் உருவெடுத்து, இங்கு உலாவுகிறது. "எங்கே தாய்மையின் உருவமாம் அன்னை?" தேடித்தான் பிடிக்க வேண்டும். [அன்னையை 'மாதாஜி' என்ற வடமொழிச் சொல்லால் அன்பர்கள் அழைப்பார்கள்] "எங்கே மாதாஜி" என்று கேட்பில் "இதோ ஆஸ்ரமத்தில், அதோ கோசாலையில், இல்லை, இல்லை இப்பொழுதுதானே போஜன சாலையில் இருந்தாள்! அதோ அரிசி அரைத்துக் கொண்டிருக்கிறாள்" என்று நாம் எதிர்பார்க்காத இடத்தில் ஓர் பணியை கவனமாக செய்து கொண்டு இருப்பாள். அப்பா! எங்கு பார்த்தாலும் தாயின் சுறுசுறுப்பான அன்புப்பணி தான். ஒரு வேலையாள், தன் வேலையை பாதியில் விட்டு விட்டு, சிறிது அகலுவானானால் பூர்த்தி செய்ய தாய் உடனே அங்கு தோன்றி விடுவாள். இதனால் ஆஸ்ரமத்தில் யாரும் அரைகுறை வேலையே செய்யமாட்டார்கள். இப்படி எல்லோரும் சுறுசுறுப்பாகவும், நன்றாகவும், ஒழுங்காகவும், வேலை செய்யவேண்டு

ஆஸ்ரமம்

மென்று, என்னம்மை யாராவது கண்டிருக்கிருர்களா? அதுதான் இல்லை!

இத் தொண்டர்கள் செய்யும் சேவையும், தியாகமும், ஆஸ்ர மத்தை காண வந்தவர்களின் சோம்பேறித் தனத்தையும், கர்வத் தையும் தாளுக ஓடும்படிச் செய்து தாங்களும் சேவைசெய்ய கடை மைப் பட்டுள்ளோம், தேகத்திஞல் அன்னையின் கோவில்களான உலகமக்களுக்கு எவ்வளவு தூரம் சேவை செய்ய முடியுமோ, அவ்வளவு தூரம் நிச்சயமாகச் செய்வோம் என்று கங்கணம் கட் டிக்கொள்ள செய்துவிடும் என்பது உண்மை.

ஒரு நாள் ஒரு அன்பர் அன்னை கிருஷ்ணபாயிடம் "அம்மா! நானும் ஏதாவது ஆஸ்ரம கைங்கர்யங்களில் ஒன்றைச் செய்ய விரும்புகிறேன்" என்ருர். "நீங்கள் எவ்வளவோ சிரமப்பட்டு இங்கு வந்திருக்கிறீர்கள். குடும்பத்திற்காக எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள். இங்கு உள்ளவரை ஆனந்தமாக குருநாதரின் முன்னிருந்து அவர் சொல்லும் நன் மொழிகளை உணர்ந்து, ஆண்டவனுடைய திருப் பெயரை சதா சொல்லிக்கொண்டு ஆனந்தமாக இருங்கள். இதுதான் நாங்கள் விரும்புவது. உலக மெல்லாம் ராமனின் குழந்தைகளாக திகழ்வதைக் காண்பதே எங்கட்கின்பம். ஆண்டவனை பாருங்கள்! எல்லையற்று அமைதி வெள்ளத்தைப் பருகுங்கள்" என்று அன்னை பதிலளித்தார்கள். ஆனல் அவ்வன்பர் ஆஸ்ரமத்தில் பல பணி கள் செய்து தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டார். இப்படித்தான் ஆஸ்ரம வாசிகளும், வந்து போகிறவர்களும், கடமை என்று உணர்ந்து பல திருப்பணிகளைச் செய்து மகிழ்கிருர்

கள். இவ்வாஸ்ரமத்தின் லக்ஷ்யம், கலப்பற்ற, ஆனந்தத்தை அவனிக்கெல்லாம் வழங்குவதொன்றே ஆகும்.

"நல்லவை போன்ற தீமையும், அழிவற்ற நன்மையும், இருட்டும், ஒளியும், தெய்வீகமும், இன்பம் துன்பமும், இறப்பு பிறப்பும், ஆகிய இருமைகள் உலகெல்லாம் நிறைந்தே இருக்கும். இது இன்று நேற்று முதலல்ல. யுக ஆரம்பமுதல் உள்ளதுதான். இனியும் இருந்தே தீரும். ஒருசிலர் வெறுப்பர், வெறுப்பு இருப்பு, எல்லாம் இவ்வுலகில் உண்டு. நமக்கு உள்ளதில் நன்மையை அனுபவிக்க வேண்டின், நாம் நல்லுணர்வு, நற் செய்கை, நல்லொழுக்கம், நற்கூட்டு, ஆகியவை உடையவர்களாக இருக்கவேண்டும். இன்பம் பற்றிய பேச்சோ, எழுத்தோ, உபதேசமோ மட்டும் இன்பம் பயக்காது. அதைத் தீவிர முயற்சியுடனும் நம்பிக்கையுடனும், செய்யும் சேவையாலும் உலகெலாம் அவன் வடிவம், எனக்குள்ளது நான் பெற அவன் தந்தது என்ற த்யாகத்தாலுமே பெற முடியும். இவ்வின்பக் கடலில் மூழ்கினவர் உள்ளத்திலேதான் அன்பு எழும். பின்புதான் அமைதி மயமான ஆண்டவன் வெளிப்படுவான்.

இவ்வுலகில் மக்கள் எல்லோரும் ஒழுக்கம், பழக்கம், வழக்கம், சத்தியம், அஹிம்சை, சேவை, த்யாகம், சமத்வம், ஆகியவைகள் ஒரே ரீதியில் அனுஷ்டிப்பவர்களாக இருக்க முடியாது. சிலர் பழங்கால ஆசார, தர்ம, நியதிமுறைகளை நடத்தையில் கொண்டிருக்கலாம். சிலர் கொண்டு செலுத்த முயற்சிக்கலாம். வீண் வார்த்தை யளவிலும் சிலர் நிற்கலாம். பிரம்ம ஞானியாகவோ, நல்ல குணமும், திருப்தியுமுள்ள இல்லறத்தானாகவோ, ஒழுக்கம் தவறாத சன்னியாசியாகவோ, ஆசையற்ற நாடோடியாகவோ, த்யாகியாகவோ, இக்காலத்தில் உலகில் ஒரு சிலரே உள்ளார்கள். ஆனால், மேற்சொன்னவர் முதல் முற்றும் உலகிலுள்ள எல்லா சீவர்களும் வேண்டுவது ஒன்றைத்தான். அது நிம்மதி அல்லது ஆனந்தம் என்பதாகும். பெரும்பாலான மக்கள் இவ்வரிய ஆனந்தத்தை அனுபவிக்க பல துறைகளில், பல தலைவர்களையும், குருமார்களையும், பின்பற்றி பல முயற்சிகள் செய்து கிடைக்காமல், சிறிய உலக ஆனந்தத்தையே மேலானதாக சிறிது காலம் கொண்டு அதிலும் சந்தேகமும், அதிருப்தியும் கொண்டு மறுபடியும் துக்கத்தால் சூழப்பட்டு ஆனந்தம் பெறத் துடிக்கிறார்கள். இப்படி அடிக்கடி ஏமாற்றத்துள் சிக்கி வாழும் மக்களுள்ளத்தில், உண்மை யன்பும் திருப்தியும் ஏற்படுத்தும் குரு யாராயினும் சரி அவர்களிடம் கற்ற முறை எதுவாயினும் சரி, எத்தெய்வம் வழிபடினும் சரி, அசைக்க முடியாத வைராக்கியமும், தானற்று ஆக்கி, ஆண்டு, அழிக்க எம்முறையைக் கைக் கொண்டாலும், எங்கிருந்தாலும், அந்நிலையில் வந்து "அருள் தருவான் ஆண்டவன்" என்ற உயர்ந்த நோக்கத்தோடு

பெருந்தபாருளீர் அனைவரும் வாருங்கள்! கருணையைப் பாருங்கள்!!

கவலை நீங்கி பெருதற்கரிய பிறவியில் அமைதியாக வாழுங்கள்! என்று மக்களுக்கு உள்ளுணர்வு ஊட்டி முன்னேற மனோ சக்தி கொடுக்கவல்ல, சக்திகள் உலகில் பலபாகங்களில் உண்டு. அவற்றில் சிறந்த சக்திகளில் ஒன்று ஆனதாஸ்ரம சக்தி ஸ்ரீ கிருஷ்ணா பாயன்னை என்று துணிவுடன் கூறலாம்.

சமூகம், கட்டுப்பாடு என்ற சில வார்த்தைகளால் இழைக்கப் படும் கொடுமைகளும், குற்றங்காணும் கூட்டப் பிரதிநிதிகளான சிலரால் ஏற்படும் அபாயகங்களும், பெண்மைக்கு எவ்வளவு இடையூறுகளை லௌகீக ரீதியில் செய்ய முடியும் என்று துணிந்து சதி செய்து இரக்கமின்றி பயமின்றி நடமாடும் பரநிந்தனைச் சக்திகளும், உலகில் எவ்வளவோ உண்டு. இவைபனைத்தையும் ஆண்டவனிடம் சரண் புகுந்து பெரும் அன்பால், வரும் பெருமை என்ற ஆயுதங் கொண்டு அஹிம்சை மூலமாக ஜெயிக்கலாம். அவைகளையும் நல்ல பாதையில் செல்ல வைக்கலாம். இவ்வன்பு சக்தி உண்மையான அழிக்க முடியாத சக்தி.

> எனது மன சிற்பரம சுக மௌன கட்கமதை
> யமன் முடி துணிக்க விகிபா வைத்தபூபதி

என்று அருணகிரியார் மகிழ்ந்து புகழ்ந்தார். இக்காலத்தில் சான்று வேண்டுமானல் அன்னை கிருஷ்ணபாயுடைய வாழ்க்கை என்று நிச்சயம் கூறலாம். இதை இன்றும் உள்ள நம் அன்னையை கண்டு உண்மை யறிந்தவர்கள் மூலமாகக் கேட்டு உணரலாம்.

> நிந்தித் தவரும், நித்தம் இடையூறு செய்யச்
> சந்தித் தவரும், பந்தம் தரும் தீமையும்,
> வந்திக் கும்மொ ருநாள், அனுபூதி பெறில்
> சிந்திக் காதே சரணடை தேவி தன்தாள்

என்ற வாக்கிற்கு ஆனந்தாஸ்ரமம் அன்னையைத்தான் சிவன் கண்ட அளவில் குறிக்கலாம். மிகைப்படுத்திய வாக்காகக் கருதின் நேரில் இன்றும் அன்பர் காண அன்னை இருக்கிறார், கஞ்சங்காடு என்ற மங்களூர் பாதையிலுள்ள ஓர் ஊரில் இறங்கிப்போனல் 3 மைலில் உள்ள ஆஸ்ரமத்தில் சென்று காணலாம். கூட இருந்து அனுபவ மூலமாக அன்பையும் அது இயற்றும் அற்புத சக்தியையும் உணரலாம். உள்ளமெல்லாய் தித்திக்க மகிழலாம். 'தாய்மையின் உருவம் நமக்கு அருள் தரும்' என்பது உண்மை.

(ஆஸ்ரமத்தைச் சுற்றி– அடுத்த திலகத்தில்)

ஹிந்து சட்டம்

“ தராசு ”

பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பு எழுதப் பட்ட தர்ம சாஸ்திரம்தான் ஹிந்து சட்டத்தின் அடிப் படையான மூல நூலாகும்; இந்த மூல நூலின் ஆதாரத்தைக் கொண்டுதான் பழைய ஹிந்து சட்டம் எழுதப்பட்டிருக்கிறது. ஹிமயம் முதல் குமரி வரையிலும், பல வெளிநாடுகளிலுமுள்ள ஒரு பெரிய சமூகத்திற்கான ஒழுங்கு முறைகளை ஓரளவு ஹிந்து சட்டம் நிர்ணயித்திருக்கிறது. வெளி தேசத்து அறிஞர்களும், நுண்ணறிவுடைய நீதிபதிகளும், எமர்ஸன் போன்ற வேதாந்திகளும், ஹிந்து சட்டத்தின் மூல நூலை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்கள். இந்தியா தேசத்தைத் தவிர வேறெந்த தேசத்திலும் இம்மாதிரியான உயர்ந்த சட்டமே கிடையாதென்பது அறிவாளிகளின் ஏகோபித்தக் கருத் தாகும். இத்தகைய உயர்ந்த சட்டம் இப்பொழுது திருத்தப் படுகிறது. சீக்கிரத்தில் திருத்தப்பட்ட ஹிந்து சட்டம், சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அமுலுக்கு வரப்போகிற தென்று கூறவேண்டும்.

‘யக்ஞா பாங்கியர்’ என்ற முனிவர் எழுதிய சுருதிக்கு ஜீமூதவாகனர், யஞ்ஞான கேஸ்வரர் போன்றவர்களின் விரிவுரைகளும் விளக்கங்களும் ஹிந்து சட்டத்தில் முக்ய ஆதாரமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இத்துடன் நமது பழக்க வழக்கங்களும் ஓரளவு பிரதிபலிக்கின்றன. பல விதமான உரிமைகளை ஒரு சமுதாயத்தினர், சரியான முறை யில் உரிமைகளை அனுபவிக்க வேண்டுமென்றுதான் பலவித மான சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சமுதாய அமைப்பும் பழக்க வழக்கங்களும் கால நிலைமைகளுக்குத் தக்கபடி மாறிக் கொண்டு வருவதால், மாறுதல்களுக்குத் தக்கபடி சட்டத்தை யும் திருத்த வேண்டுமென்ற கருத்தை எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சாதாரண சட்டங்களில் மாறுதல் கள் செய்யப்படும்போது பலவிதமான எதிர்ப்புகளும், கஷ்டங் களும் தோன்றக்கூடும். அதிலும் வெகு காலமாக நடை முறையிலிருந்து வரும் ஒரு பெரிய சட்டத்தை மாற்றியமைக்

கும்போது பலத்த எதிர்ப்புகள் கடைசி நிமிஷம் வரையில் ஏற்படத்தான் செய்யும்; அதற்காக உயர்ந்த லட்சியத்துடன் கூடின சிறந்த கொள்கைகளை கைவிட முடியாதென்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. திருத்தப்பட்ட ஹிந்து சட்டத்தை எதிர்ப்பதற்கு போதிய ஆதார மில்லாவிட்டாலும், நடைமுறை பழக்கங்களை பெரிதும் பாதித்து விடக் கூடுமென்று சிலர் கருதாவதையும் நாம் கவனிக்காமலிருக்க முடியாது. சட்ட பூர்வமாக கிடைக்கும் உரிமைகளை நடை முறையில் பயன்படுத்திக் கொள்வது பொது மக்களின் கடமையாதலால், பொதுமக்களின் மனது புண்ணுகாதபடி, அவர்களுடைய மனதை திருப்தி செய்யவேண்டிய பொறுப்பு, சமூக ஊழியர்களின் கையில்தான் இருக்கிறது. இவர்களுடைய ஊழியத்தினுல்தான் புதிய சட்டம் மிகப் பயனுள்ளதாக இருக்கவேண்டும்.

காலப்போக்கை ஒட்டி ஹிந்து சட்டத்தை திருத்த ஒரு நகல் மசோதா 1941ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரையில் இம்மசோதாவைப்பற்றி பொது மக்களிடையே ஓரளவு விவாதிக்கப்பட்டுள்ளது. இந்த நீண்ட காலத்துக்குப் பின் இப்பொழுது ஒரு விதமாக சட்டத்தின் நிலைமைக்கு இம்மசோதா வந்திருக்கின்றது. பார்லிமெண்டில் விவாதிக்கப்படப்போகிறதென்பது வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. அரசியல் நிர்ணய சபையில் விவாதத்திலிருந்து வரும் இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை கொள்கைகளுக்கு முரணுனதாக இச்சட்டம் அமைந்திருப்பதாக பல அறிஞர்கள் கூறுகிறுர்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இந்திய அரசியல் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு ஹிந்து சட்டம் (திருத்தப்பட்டது) அமுலுக்கு வந்து விட வேண்டுமென்று கருதப்படுகிறது. பொதுமக்களின் நிலையைப் பொறுத்தவரையில் ஹிந்து சட்டத்திற்கு ஆதரவோ அல்லது எதிர்ப்போ பலமாக இருப்பதாகச் சொல்லமுடியாது. இதற்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. இவற்றுள் மிக முக்கியமானது பொதுமக்களின் விருப்பத்தை அறிய விரும்பாத ஒரு அரசாங்கம் இம்மசோதாவை தயாரித்தது. அப்பொழுது தேசத்தின் விடுதலையைப்பற்றியே பொதுமக்கள் வெகுவாக கவலைபட்டுக் கொண்டிருந்ததால், இதில் கவனம் செலுத்த முடியவில்லை. விடுதலை கிடைத்தப் பிறகு தேசத்தி

விருந்த குழப்பம், இம்மசோதாவைப்பற்றி நினைக்க இடம் தரவில்லை. இப்பொழுது கால நிலை சௌகர்யமாக இருப்ப தால் இதில் பொதுமக்கள் ஓரளவு கவனத்தை செலுத்து கிறார்கள். ஆனால் முழு கவனமும் செலுத்துவதற்கு, போதிய பிரசாரம் செய்யப்படவில்லை. இந்தக் குறையை போக்கிவிட முடியுமானல் பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவு நிச்சயம் கிடைக்கும்.

சட்டத்தில் திருத்தப்பட்ட பாகத்தில் மிக முக்கியமானது, ஆண், பெண் இருபாலருக்கும் சமூகத்தில் சமமான உரிமை கிடைக்க வேண்டுமென்பதே. சிற்சில மாகாணங்களில் சில முற்போக்கான சட்டங்கள் சமீபத்தில் செய்யப்பட்ட போதி லும், அகில இந்தியாவிற்கும் பொறுத்தமுள்ள முறையில் இச்சட்டம் அமைவதால், இதனல் பலருக்கு பல சௌகர்யங் கள் ஏற்படமுடியுமென்பது உண்மையே. குடும்ப சொத்தில் பெண்களுக்கும் ஒரு பாகமும் கொடுக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருப்பதானது வரவேற்கத்தக்க அம்சமே. ஸ்திரி களின் விவாஹம், விவாஹரத்து போன்றவைகளில் சிலவிசேஷ உரிமைகள் கிடைக்க முடியுமென்பது உறுதியாகிறபடியால் பெண் சமூகம் இச் சட்டத்தை உடனடியாக அமுலாக்கப் பட வேண்டு மென்று கேட்கிறார்கள். இவர்களுடைய கோரிக்கை மிகைப்படுத்தியதென்று கூறமுடியாது; கடந்த சில வருஷங் களில் அகில இந்திய மாதர் மஹா நாட்டினர், தங்களுடைய சமூகத்திற்கு எந்தெந்த உரிமைகள் கிடைக்கவேண்டுமென்று விரும்பினரோ, அவைகள் யாவும் இச்சட்டத்தில் இடம் பெற் றிருக்கிறது. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளாக ஹிந்து சமூகத் தில் ஸ்திரிகளுக்கு மறுக்கப்பட்டுவந்த நியாயமான உரிமை களை வழங்குவதற்கு இச்சட்டம் இடமளிக்கிறது. இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவில் இத்தகைய சீர்த்திருத்தங்கள் அமு லுக்கு வருவதை ஆச்சர்யமாக சொல்வதற்கில்லை. உலகத்தை ஒட்டிப்பார்க்கும்போது, இப்பொழுது கிடைக்கும் நன்மைகள் பெண்களின் வெற்றி பாதையில் முதற் மைல் கல்லாகத் தான் கூறமுடியும். சீக்கிரத்தில் இச்சட்டம் அமுலுக்கு வர வேண்டுமென்ற உதயத்தில் பொதுவாக எல்லோரும் ஆதர வளிக்க வேண்டியதுதான் முதற்கடமையாகும்.

முற்போக்கு சீர்த்திருத்தங்களை சிலர் விரும்பாமலிருக்கக் கூடும். அவர்களை நியாய வழிக்கு திருப்பவேண்டியது மிக

அவசியமாகும். எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது நன்கு விவாதித்து முடிவு செய்யப்பட வேண்டியதாகும். தற்போது தொழில்பட்டு வரும் பார்லிமெண்ட் இந்த சட்டத்தை அமுலுக்குக்கொண்டு வருவதற்கு உரிமை கிடையாதென்பது ஒப்புக்கொள்ளப் படவேண்டிய சட்டப் பிரச்னைதான். இருந்தபோதிலும் பொதுமக்கள் ஒன்று திரண்டு ஆதரவு தரக்கூடுமானால் இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு வழியிருக்கிறதென்றே சொல்லப்படுகிறது. சட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு பொதுமக்கள் ஆதரவு தரக்கூடுமென்று பலர் கருதுவதும் பகற்கனவுதான். ஆகையால் இச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில் விசேஷ பிரயாசை ஸ்திரீகள்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த சட்டத்தின் அவசியத்தைப்பற்றி பிரசாரம் உடனடியாகச் செய்ய வேண்டும். பிரசாரத்தின் மூலம் பொது மக்களின் ஆதரவை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்த முன் வந்தால் சீக்கிரத்தில் பயன் கிடைக்குமென்பதில் ஐயமில்லை. பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், தங்களுடைய தொகுதியில் பொது மக்களின் ஆதரவைத் தேட முயலவேண்டும். சட்ட நுட்பங்களைக் கொண்டு தகர்த்துவிடக்கூடிய ஒரு பெரிய விஷயமாக இந்த சட்டம் இருப்பதால் சட்டத்தைக் கீழ்படியச் செய்ய பொதுமக்களின் சக்தியினால் முடியும். பொது மக்களும் வெகு விரைவில் தங்களுடைய ஆதரவை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும். சுதந்திர இந்தியாவில், இச்சட்டத்தின் மூலம் புதிய சகாப்தம் தோன்றப்போகிறதென்று எல்லோரும் பெருமைப்பட வேண்டும். இப்பெருமையினால் நம்முடைய சமூக வாழ்க்கையானது உயர்ந்த நிலைக்கு வரக்கூடுமென்பதில் ஐயமில்லை.

[ஹிந்து சட்டத்தைப்பற்றிய கட்டுரைகளும், அபிப்பிராயங்களும் வரவேற்கப்படுகின்றன. உசிதமானவைகளைப் பிரசுரித்து, கடைசியாக பல அறிவாளிகளையும் "பெண்கள் பார்லிமெண்டு"க்கு வரவழைத்து, விவாதம் நடத்தி, ஒரு தீர்மானத்தை சர்க்காருக்கு அனுப்ப வாசகர்களும் உதவி செய்வார்களாக.

—ஆசிரியை].

பெண் கண்டக்டர்

ஸ்ரீமதி வே. சாரதா

> பெண் போலீஸ்! பெண் கண்டக்டர்! என்று திகைப்பும் நகைப்பும் கலந்த குரலில் உரையாடப் படும் விஷயத்தைப் பற்றி பெண்கள் என்ன நினைக்கிறார்கள்? என்ற கேள்வியின் விளைவுதான் இச்சிறு கட்டுரை. இதுவும் பெண் வர்க்கத்தின் ஏகோபித்த தீர்ப்பல்ல; அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் ஓர் அபிப்பிராயம்தான்.

பாரத நாட்டை அடிமைப் படுத்திய ஆங்கிலேயருக்கு முதலில் இடமளித்த சென்னை, நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் முதன்மை ஸ்தானம் வகித்தது, இந்திய சரித்திரங்கண்ட உண்மை. நாடு சுதந்திரம் அடைந்த பின்பும், மதுவிலக்கு போன்ற காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகளை முதலில் அமுலுக்குக் கொண்டுவந்த பெருமையும் சென்னையையே சேரும். இன்று உலகிலேயே முதன் முறையாக பஸ் கண்டக்டர் வேலைக்குப் பெண்களை அமர்த்தி, புகழை வேண்டி நிற்பதும் சென்னைதான். இவ் விஷயத்தில் சென்னை சர்க்காருக்கு ஆக்க வேலையிலுள்ள ஆர்வத்தைக் கண்டு மகிழலாமேயன்றி, இப்புகழைக் காக்க பெண் சமூகத்தால் முடியுமா என்பது ஆராய்வதற்குரிய விஷயமாகும்.

அடுப்படியை விட்டு வெளியேறாத பாரதப்பெண், இன்று அயல் நாட்டு ஸ்தானிகர் பதவி ஏற்கின்ற அளவுக்கு முன்னேறிவிட்டாள். ஏன்—சென்னையே கேப்டன் லக்ஷ்மி, ருக்மிணி லக்ஷ்மீபதி போன்ற பெண்மணிகளை நாட்டுக் களிக்கவில்லையா? உலகமனைத்துமே விழிப்புற்றிருக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில் சுதந்திர மடைந்துள்ள நம் நாட்டுப் பெண்கள் மட்டும் அடுப்படியிலேயே அடங்கிக் கிடக்க வேண்டுமென்பது பொருந்தாத வாதம். ஆனால் பெண்களுக்குச் சமதை யளித்து, புத்துலகை நிர்மாணிக்க முற்படுகையில், போலீஸ் வேலையும் பஸ் கண்டக்டர் வேலையும் அம்முயற்சிக்கு உருவளிக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டுமல்லவா?

ஆடவர் செய்யும் அத்தனை வேலையிலும் பெண்கள் சரி பங்கெடுத்துக் கொண்டால், அது நாட்டின் முற்போக்குக்கு வழியாகி விடுமா?—என்றால் நிச்சயமாக இல்லை யென்று சொல்லிவிடலாம். நகர சுத்தி தொழிலாளர்கள், மண் சுவர் வைக்கும் ஒட்டர்கள் போன்றோர், ஆண் பெண் இரு பாலருமே தொழிலில் ஈடுபடுகின்றனர் என்றாலும் அம்முறை அக் குறிப்பிட்ட சமூகங்களை உயர்த்துவதற்கு வழி செய்யவில்லையே! ஆனால் அதே சமயத்தில் போர் முனையிலிருந்து ஏர் முனை வரையிலும் பெண்கள் சரிபங்கு கொள்ளும் ரஷ்யாவும், மற்றும் மேலை நாடுகளும், ஜப்பான் போன்ற கீழ்நாடுகளும் அதே காரணத்தால், பொருளாதாரத்திலும் நாகரீகத்திலும் விரைந்து முன்னேறி வருவது நாம் அறிந்த உண்மையாக இருக்கிறது. மேம்போக்காகக் காணும்பொழுது அவர்களின் முற்போக்குக்கு இதுவே காரணம் என்று தோன்றினாலும், ஆய்ந்து பார்த்து, நம் நாட்டின் நிலையையும் அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், வேறு பல விஷயங்களும் தெட்டென விளங்கததான் செய்யும்.

உழைப்பு மிகுந்து, உழைப்பாளிகள் குறைந்துள்ள இடங்களில் உழைப்பாளிகள் தேவைப் படுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் ஆண்களால் செய்யப்படும் சரீரப் பிரயாசை குறைந்த பெருப்பாலான வேலைகளைப் பெண்களே மேற்கொள்வதால் உழைக்கும் திறனுள்ள ஆண்களை வேறு வேலைகளில் ஈடுபடுத்த முடிகிறது. ஆனால் 'குடும்பத் தலைவன் தந்தை' என்று மூன்றாம் வகுப்பு சிவிக்ஸ் பாடத்தில் முதற்கொண்டு பறைசாற்றிவிட்டு, அதே சமயத்தில் வேலையற்றுத் திண்டாடும் இளைஞருக்கு வேலை தேடித்தர திணறித் தவிக்கும் இந்நாளில் ஆண்களிலேயே அநேகரால் செய்யமுடியாத போலீஸ், கண்டக்டர் போன்ற உத்தியோகங்களில் பெண்களை அமர்த்தி விடுவது பயன் தருமா என்பதைச் சிந்திக்க வேண்டாமா?

ஆடவர் செய்யும் வேலைகளனைத்தையும் பெண்கள் சிரமமின்றி செய்ய முடியும் என்று கருதுவதோ, எல்லா உத்தியோகங்களையும் சமகூறாக்கி பெண்களுக்கும் வழங்க நினைப்பதோ சரியாகாது. 'குழந்தை பராமரிப்பு' என்பது எப்படி ஆடவருக்கு ஆசாத்தியமான வேலையோ, அப்படியே பெண்களுக்கும் சில குறிப்பிட்ட உத்தியோகங்கள் சிரம சாத்தியமானவை

தான். உலகிலேயே மிக வேகமாக ஆகாய விமானம் ஓட்டியவள் ஒரு பெண்தான் என்பதற்காகவும், எத்தனையோ பெண்கள் வாளேந்தி போர்க்களம் சென்றிருக்கிறார்கள் என்பதற்காகவும் பெண்கள் அனைவரையும் விமான ஓட்டிகளாகவோ போர்க்கள வீரர்களாகவோ ஆக்க முயல்வது எவ்விதம் பொருந்தும்? தவிர்க்க முடியாத அவசியம் நேரும்போது பெண்கள் எல்லா வேலைகளையும் செய்ய முற்பட வேண்டுமென்பதென்னவோ வாஸ்தவம். பெண்களுக்குக் கடினமாகவுள்ள சில வேலைகளை, ஓரிரு பெண்கள் ஆடவரை விட சாமர்த்தியமாகச் செய்யலாம். அந்நிலைமைகளில் அதனை விதி விலக்கு என்று கருதுவதோடு நிற்காமல், அப்படிப்பட்ட பெண்கள் அந்த உத்தியோகங்களை வகிக்க வசதியும், சலுகையும் அளிப்பது அரசாங்கத்தார் பெண்ணுலகத்துக்குத் தேடித் தரும் பெருமையாகும்.

ஆனால் அரசாங்கமே முற்பட்டு பெண்களுக்கு உத்தியோகங்களை நிர்ணயிக்கும்போது, அவர்களது சக்தி, வசதி ஆண்களுக்கும் பெண்களுக்குமுள்ள தேக மனோவலிமை பற்றிய தாரதம்மியங்கள் இவற்றை மனதில் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. அவ்விதமிருக்க, பெண்களுக்கே பொருத்தமற்ற கண்டக்டர் உத்தியோகத்தைச் சுட்டிக்காட்டி, அவர்களது வறுமையையும் ஞாபகமூட்டி வேறு வழியில்லையென்று கையையும் விரித்துவிட்டால், பாவம், அந்த பேதைப் பெண்கள் வேறு என்ன செய்யமுடியும்?

மனிதனை மனிதன் ரிக்ஷாவில் வைத்து இழுத்துச் செல்வதை அனுமதிப்பது மனுஷ்யத் தன்மைக்கே அழகல்ல என்ற எண்ணம் பரவி வரும் தற்காலத்தில், தார்மீக அடிப்படையில் வாழ்வு நடத்தும் இந்தியருக்கு இது பொருத்தமற்ற காரியம் என்ற உண்மை உணரப்பட்டுவரும் தற்சமயத்தில், கண்டக்டர் உத்தியோகம் போன்ற சிரமமான வேலைகளில் பெண்களை அமர்த்த முன்வருவதை எங்ஙனம் அனுமதிக்க முடியும்?

ஒருமணிநேரம் பஸ் பிரயாணம் செய்தால் உடம்பு வலியும், அலுப்பும் தீர ஒன்பதுமணி நேரம் ஓய்வுபெற வேண்டியிருக்கிறது. பிரயாணத்திற்குப் பிறகுதான் இந்த விளைவு

என்றால், பிரயாணம் செய்யும்போதாவது சுகமுண்டா? ‘லொடலொட’ வென்ற இரைச்சலும்: ‘குபீர்குபீ’ரென்று கிளம்பிப் பரவும் தெருப் புழுதியும் போதாதென்று, பஸ் திருப்பங்களிலும் மேடு பள்ளங்களிலும் நாம் படும் அவதி யிருக்கிறதே அதை சொல்லித்தான் ஆற்றவேண்டும். மூச்சைப் பிடித்துக் கொண்டும், பல்லைக்கடித்துக் கொண்டும் விழி பிதுங்க ஊசலாடிவரும் பிரயாணிகள் கூட்டம் பரிதாபத்துக் குறியதுதான். அதிலும் நின்றுகொண்டு பிரயாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டாலோ, உடலுக்கும் உயிருக்கும் நடக்கும் மரணப் போராட்டந்தான்.

ஆக சற்றுநேர பிரயாணத்துக்கே பயந்து சாகும் பெண்கள், தினமும் சேர்ந்தாற்போல் எட்டுமணி நேரம் இந்தப் பயங்கர இரும்பு நாகரீகத்துடன் போராட முடியுமா? டிக்கட்டுகள் கொடுத்தும், சில்லரைகள் பரிமாறியும் அநுயாசச் செயல்கள் வேறல்லவா புரியவேண்டி யிருக்கிறது. இந்த கண்டக்டர் உத்தியோகத்தில் ஓடும் பஸ்ஸில் கைப்பிடியையும் விட்டுவிட்டு, ஜனக்கூட்டத்தின் நடுவில் நின்ற நிலையில் டிக்கட்டுகள் கொடுத்தும் வாங்கியும் ஓடியாடி பழகுவதற்குள் எத்தனை தரம் தட்டித் தடுமாறி குட்டிக்கரணம் அடிக்க வேண்டுமோ?

தவிர, பெண்களைச் சம அந்தஸ்துடன் பாவித்து மதித்தும் போற்றும் அளவுக்கு, இன்றைய ஆடவரது மனோநிலை சீர்திருந்தவில்லை யென்றால், அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நிமிஷத்திற்கு நிமிஷம் பஸ்ஸில் ஏறி இறங்கிச் செல்லும் பலரகப்பட்ட ஆடவரது பலவித எண்ணங்களுக்கு அவள் இலக்காக வேண்டி யிருக்கிறது. சிலரது கேலிப் பார்வை, சிலரது பரிகாசச் சிரிப்பு, சிலரது பச்சாத்தாப மொழி இவற்றிற்கெல்லாம் ஒரு பெண்ணை இலக்காக்குவது தவறல்லவா?

ஏனெனில் பஸ் கண்டக்டர் உத்தியோகம், ஒரு குறிப்பிட்ட இடத்திலோ, அல்லது குறிப்பிட்ட சிலருடன் சேர்ந்தோ செய்யும் வேலையல்ல. மேலும் ஒரு காரியாலயத்தில், பல ஆடவர்களுக்கு நடுவில், ஒரு பெண் உத்தியோகம் வகிக்கிறாளென்றால், அந்த உத்தியோகத்தின் மதிப்பு, அவ

ளுக்கு கௌரவத்தை அளித்துவிடுகிறது. அத்துடன் அவ ளோடு வேலை செய்யும் மற்ற சிப்பந்திகளும் பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்களாய் இருக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் வேறு காணப்படுகிறது. ஆனால் கண்டக்டர் உத்தியோகத் துக்கு இவ்வித மதிப்போ, அல்லது பாதுகாப்போ கிடையாது. பஸ்ஸில் ஏறும் நூற்றுக் கணக்கான பிரயாணிகளுக்கு சில நிமிஷங்களே சொந்தமா யிருக்கும் பஸ்ஸானது, கண்டக்ட ருக்கு பலமணி நேரங்கள் சொந்தமா யிருப்பதை நாம் மறந்து விட முடியாது.

அதனால் இதர எந்தத் துறையில் பெண்கள் வேலையி லமர்ந்தாலும்கூட, இன்றைய நிலைக்குமட்டுமல்ல. என்றுமே கண்டக்டர் உத்தியோகம் பெண்களுக்கு உகந்ததல்ல.

பாரதப் பெண் பட்டம் பதவி வகிக்க லாயக்கற்றவளா? 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'—என்னும் பாரதியின் வாக்கு பொய்த்துப்போகவேண்டுமா? அரசியல் உலகுக்கு சரோஜினி நாயுடு, விஜயலக்ஷ்மிபண்டிட் போன்றவர்களைத் தத்தம் செய்த பெண் வர்க்கம் அத்தோடு திருப்தியடைய வேண்டுமா என்று கேட்கும். நாட்டு வளப்பத்தில் நாட்டமுள்ள பெண் களின் ஆர்வத்திற்கு தடை விதிப்பதும், நாட்டின் முற் போக்கு சக்திக்கு தடை விதிப்பதும் ஒன்றுதான். எனவே இந்தியப் பெண்களுக்கு அடுப்பங்கரையிலிருந்து அரசியல் வரையிலும் பங்குகொள்ள வாய்ப்பிருக்க வேண்டும். ஆனால் பெண்மையைப் போற்றும் நம் நாடு, மேலை நாகரீகத்தோடு போட்டியிடும் மனோபாவத்தில் காரியமாற்றுவதால், பெண்மை யின் மேன்மைக்கு இழுக்கு நேர்ந்துவிடக்கூடாது.

தாய்மைக்கு இருப்பிடமாகி குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்கும் தாய் அதற்கு அறிவூட்டும் கல்விச் சாலைகளையும் ஏன் கைப்பற்றக்கூடாது? ஒரு நாட்டின் செல்வம் அதன் இளம் குழந்தைதானே? தனக்குகந்த பிள்ளையாக வளர்க்கும் பிறவிக் குணம் படைத்த பெண், தன் நாட்டிற்குகந்த இளை ஞர்களை சிருஷ்டிக்கத் தவறிவிடுவாளா? அவளே அதில் வெற்றி யடையத் தவறிவிடுவாள் என்றால் ஆண்கள் அதைச் சாதித்து விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

வெறும் பிழைப்புக்கு என்ருல், டெலிபோன் ஆப்பரேட்டர்கள், ரயிலில் புக்கிங் கிளார்க்குகள் போன்ற வேலைகளைக் கொடுக்கலாமே. இதற்கெல்லாம் அதிகக் கல்வியறிவு தேவையென்ரோ, இன்று கண்டக்டர் வேலை பார்க்கும் பெண்கள் இதற்கு லாயக்கற்றவர்கள் என்ரோ கூறமுடியுமா?

ஆகவே பஸ் கண்டக்டர், போலீஸ் முதலிய வேலைகளில் பெண்களுக்கு இடமளிக்கும் அரசாங்கம், பெண்மைக் கிழுக்கில்லாததும், நாட்டிற்கு நலம் பயப்பதுமான வேலைகளில் பெண்களுக் கிடமளித்தல் வேண்டும். பெண்மைக்கு பெருமை தேடுவதில் அரசாங்கத்தைவிட பெண்களுக்கே பொறுப்பதிகம் என்பதைக் காட்டிக் கொள்ளும் பாணியில், நமக்கிழுக்கற்ற வேலைகளையே நாம் மேற்கொள்ளவேண்டும் என்னும் அபிப்பிராயம் சரிதாஞ?

இறுதி வெற்றி

மண்ணை வென்ற வீரர்களே
எத்துணை பெரிது எங்கள் ஆதிக்கம்
என்று நித்தமும் சொல்லிடாதீர்
திக்கெட்டும் வென்று விட்டாலும்

பகலும், இரவும் பார்க்குமிடமெல்லாம்
குடைக் கீழ்க் கொண்டு விட்டாலும்
இறுமாந்த மன்னர்களே!
காலன் உங்களை அழைக்குங்கால்

சாம்பராய்ப் போகும் உண்மை என்னே !
பஞ்சமும், பிணியும், யுத்தமுமாம்
மனிதக் குலத்தைக் கெடுத்திடுமாம்
காலனின் ஆட்சி தூதர்களாம்.

மனிதனை மாய்க்க நுண்ணியவை
இன்னும் பற்பல வழிகளுண்டு
மயக்கும் புன்னகை, முத்தமுமாம்
மனிதர் உள்ளத்தை உடைத்திடுமாம்.

[ஜே. ஷெர்லியைத்தழுவி எழுதப்பட்டது]

—மு. ஸ்ரீனிவாஸன்

அதிசய ரேடியோ.

ஸ்ரீமதி பாலாம்பிகை.

நடுப்பகல். வெய்யில் வெகு கொடுமையா யிருந்தது. வியர்வை யொழுகி உடையை நனைத்தது. வீட்டிலுள்ளோரனைவரும் விசிறியும், கையுமா யுறங்கிக் கொண்டிருந்தனர். எனக்கோ, புழுக்கம் தாங்கவில்லை. பொழுதும் போகவில்லை. குட்டியிட்ட பூனைபோ லிங்குமங்கும் அலைந்துக் கொண்டிருந்தேன்.

செருப்பும் குடையுமாய் உள்ளே நுழைந்தாள் சாரதா. திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்த நான், "யார், சாரதாவா, வா வா! இந்த வெய்யலில் எப்படியடி, வந்தாய்" என்றேன்.

"வீட்டில் உட்கார்ந்திருந்தால், வேலையாவதெப்படி? காலைத் தாங்க செருப்பு, தலையை மறைக்க குடை, மெய்யலென்னை என்ன செய்யும்! அதிருக்கட்டும், உனக்குப் பள்ளிக்கூடம் மூடியாயிற்ரு" என்ருள் சாரதா.

"நேற்றே, மூடியாயிற்று. இன்னும், இரண்டு மாதங்களுக்குக் கவலையில்லை. ஏன் கேட்கிருய்?" என்றேன்.

"நாளை இரவு, நாங்கள் திருக்குற்ருலத்திற்குப் போகிருேம், நீயும் வருகிருயா?" என்ருள்.

"அதற்கென்ன? கரும்பு தின்னக் கூலிவேண்டுமா? அவசியம் வருகிறேன். மறக்காமலென்னை யழைத்ததற்காக, மிக்க வந்தனம்."

"சரி, நான் போய் வருகிறேன். நாளை மாலை என் வீட்டிற்கு வந்துவிடு. அங்கிருந்தே, அனைவரும் புறப்படலாம்."

"அப்படியே செய்கிறேன். இந்த வெய்யலிலா, போகிருய்? சற்றிருந்து காப்பி சாப்பிட்டுவிட்டு போகலாமே."

"இல்லை, நாளை பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்" என்று சொல்லி, அவசரமாய்ப் போய்விட்டாள்.

மறுநாள் இரவு அனைவரும் எழும்பூரிலிருந்து புறப்படும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறி மூன்ரும் வகுப்பு வண்டியில் மூச்சை யடக்கிக்கொண்டு, உட்கார்ந்திருந்தோம். 'மதுரை, மதுரை' என்ற குரல்கேட்டு, எழுந்து உட்கார்ந்தேன் 'அப்பாடா' என்று

பெருமூச்சுவிட்டேன். ஏனெனில், பாதிக்கூட்டம் அங்கு இறங்கி விட்டது.

மதுரைதான் எத்தனை அழகான இடம். இயற்கை வனப்பும், செயற்கை செறிவும், சேர்ந்து அமைந்த இடம். தமிழ் வளர்ந்த இடம். உமையவளே பெண்ணாய்ப் பிறந்து, பெண்மை அரசாட்சியை நிலைநாட்டிய இடம். அந்த ஸ்டேஷனில், வண்டி நின்றிருந்த வரையில், திருவிளையாடல் காட்சியும், சிலப்பதிகாரச் சித்திரமும், என் மனக்கண் முன், மாறிமாறித் தோன்றிக்கொண்டிருந்தன. இரண்டாயிர மாண்டுகளுக்கு முன்னிருந்த பாண்டியர் அரசாட்சியில் இருப்பதாகவே என் நினைவு. வண்டி நகர்ந்த அரை மணி நேரத்திற்குப் பிறகுதான், நாம் இருப்பது இரயில்வண்டி என்ற உணர்ச்சி எனக்குத் தோன்றியது.

மறுநாள் பகல் ஒரு மணிக்கு தென்காசி ஸ்டேஷனை யடைந்தோம். அன்றைய பொழுதை அங்கிருந்த உறவினர் வீட்டில் கழித்துவிட்டு, மறுநாள் காலை குற்றாலம் சென்றோம். அங்கு பிரயாணிகளுக்காக ஏற்பட்டிருந்த விடுதியில் தங்கினோம். பிரயாண அலுப்பு நீங்க பகல் முழுவதும் உறக்கத்திலாழ்ந்தோம்.

பிற்பகல் நான்கு மணிக்கு சாரதாவும் நானுமாக மலைக்காட்சியைக் காணச் சென்றோம். அருவியின் 'சலசல' வென்ற ஓசை, மாடுகளின் கழுத்தில் கட்டிய மணிகளின் 'கணகண'வென்ற ஒலி, தேடிவந்த உணவை தன் குஞ்சுகளுக்கு ஊட்டும் பறவைகளின், 'க்ரீச் க்ரீச்' என்ற குரல் இவைகளிடையே சென்றுக் கொண்டிருந்தோம்.

அங்கு சில சிறுமிகள் விளையாடிக் கொண்டிருந்த காட்சி, எங்கள் கண்ணைக் கவர்ந்தது. சற்று நின்றோம். அருவியிலிருந்து நீர் கொண்டுவந்தாளொருத்தி. மற்றொரு பெண் மண்ணைப் பிசைந்து வீடு கட்டினாள். அம்மண்ணினாலேயே, சிறுசிறு பாத்திரங்களும், பொம்மையும் செய்தனர். இரண்டு சிறுமிகள், ஐந்தே நிமிடங்களில் இவையனைத்தையும் முடித்துவிட்டன. மணல் அரிசியாயிற்று. சின்னஞ்சிறு செடிகளிலுள்ள காய்களும், இலைகளும், கரியும் குழம்புமாயின. கள்ளமின்றிய அச்சிறுமிகளின் சுறுசுறுப்பும், வேற்றுமையின்றி வேலைகளைப் பகிர்ந்துகொண்டு செய்த ஒற்றுமையும், பெரியவர்களான பிறகும், இருந்தால் வாழ்க்கை எவ்வளவு சிறப்புற்றிருக்கும். ஆனால், அவர்களை அழவைத்து வேடிக்கை பார்க்க, இயற்கை அன்னைக்கு விருப்பம்போலும். ஹோ வென்ற பேரிரைச்சலுடன் ஓடிவந்ததோர் பெருவெள்ளம். வீடும் பாத்திரமும், மாயமாய் மறைந்தன. பாவம்! அச்சிறுமிகள் தங்கள் முயற்சி வீணானதைக் கண்டு, அழுதுக்கொண்டே நின்ற காட்சி, எங்களை பரிதாபத்திலாழ்த்தியது. அவர்களை சமாதானப் படுத்திவிட்டு மேலே சென்றோம்.

மலர்களின் மணத்தை வாரிக்கொண்டு வந்த மெல்லிய காற்று, எங்கள் களைப்பை நீக்கியது. மஞ்சள் வெய்யிலால் தங்க நிறம் பெற்று விளங்கும், சுற்றுப்புறம் பொன்னுலகம் இதுதானோ, வென்ற ஐயத்தை யுண்டாக்கியது. கம்பீரமான மலையுச்சியும், அதிலிருந்தொழுகும் நீர் வீழ்ச்சியும், தவம் செய்யும் சிவபெருமானையும் அவர் தலையிலிருந்தொழுகும் கங்கையையும் நினைப்பூட்டியது. இவ்வாறு இயற்கையி லூடுருவியிருக்கும் இறைவனை காண்பதற்காகத்தான், நம் முன்னோர்களான முனிவர்கள், காட்டையும், மலையையும் உறைவிடமாகக் கொண்டனர்போலும்! இயற்கையன்னை தன் முழு எழிலுடன் ஆட்சி செய்யும் அவ்விடம் என்னைப் பெருமகிழ்ச்சியிலாழ்த்தியது.

"அடி ! சாரதா ! இந்த இடத்தின் அழகைத்தான் என்னென்பது. இந்த பாக்கியம், உன்னால்தானடி கிடைத்தது. யாராவது புலவர்களாயிருந்தால், இத்தோற்றமனைத்தும் சித்தரித்து கவிபாடி விடுவார்கள். எனக்கு வர்ணிக்கக்கூட வார்த்தைகள் தெரியவில்லையே" என்றேன்.

"இப்படிப்பட்ட இடங்களைப் பார்த்தால், தானாகவே, வார்த்தைகள் வந்துவிடும். தாகூர் படித்தார், புலமை பெற்றார். இந்த இயற்கையின் பழக்கமல்லவோ அவரை உலகம் மெச்சும் கவியாக்கியது. அதோ பாரடி! பாலம், அந்த பலா மரங்களை ஆஹா! எத்தனை காய்கள். மரமே தெரியாமல் மூடிக்கொண்டிருக்கின்றன. அப்பா எத்தனை பெரிய குரங்குகள். அக்காய்களைப் பறித்துத் தலைமேல் வைத்துக் கொண்டோடுகின்றன. சில குரங்குகள், காய்களை மார்பில் குறுக்காக எடுத்துக் கொண்டோடுவது மிருதங்கக் காரர்களைப் போல் தோன்றுகிறதல்லவா"?

"அதிருக்கட்டும், இந்தப் பக்கம் திரும்பிப்பார் அந்தப் பாறையினிடுக்கில். எத்தனை பெரிய தேன்கூடு. அதோ ஒரு குரங்கு ஓடிவந்து அதிலிருந்து தேனைப் பிழிகிறது பார், சாப்பிடவாவது கூடாதா, அத்தனையும் அனியாயமாய் நாசம் செய்கிறதே!"

"குரங்கு கையிலகப்பட்ட பூமாலை என்று சொல்வதைக் கேட்டதில்லையா, அதற்கு அவ்வளவுதான் தெரியும். மனிதர்களிலேயே சிலர் உயர்ந்த பொருள்களின் அருமை தெரியாமல் நாசம் செய்கின்றனரே. இல்லை, இல்லை. நாம் நினைத்தது தவறு. அதோபார், எத்தனை சிறு குரங்குகள் ஓடிவந்து அத்தேனைக் கையேந்துகின்றன. அதைக்குடித்து அவைகள் கொட்டைவிடுவதைப்பார்."

"தேனைப்பார்த்து மதிமயங்கிவிட்டாயே, அதோ அந்த மாமரத்தின் மேலிருந்து சில குரங்குகள் பழங்களைப் பறித்துப் போடுவதையும், கீழே பாறைகளின் மேல் உட்கார்ந்திருக்கும் குரங்குகள்

அவற்றை வாங்கித் தன் வயிற்றிலடக்கியிருக்கும் குட்டிகளுக்குக் கொஞ்சங்கொஞ்சமாய்க் கொடுப்பதையும் பாரேன். அடடா எத்தனை அழகு. இவ்விலங்குகளுக்குக்கூட தாயன்பு என்பது இயற்கையாயிருக்கிறதல்லவா?''

''ஏன் இல்லாமல். விலங்குகளிடத்திலும், விருக்ஷங்களிடத்திலுமே நாம் எத்தனையோ, நீதிகளைக் கற்றுக்கொள்ளலாமே. ஆனால், உயிரோவியமாகிய கிராமங்களைப் பாழாக்கிவிட்டு, அடிமை பிழைப்புக்கு ஆசைப்பட்டு, உயிரற்ற செயற்கைச் சித்திரங்களின் நடுவில், உணவிற்கும், உடைக்கும், திண்டாடும் நமக்கு அதெப்படி முடியும். ஏதோ, புண்ணிய வசத்தினால், இதைப்போன்ற இடங்களைப் பார்க்க நேரிட்டால் கொஞ்சமாவதறியலாம். சோ வென்ற அருவியினோசை காதுக்கு எவ்வளவு இனிமையாயிருக்கிறது.''

''வாடீ பாலம், இந்தப் பாறையின்மீது சற்றுட்காரலாம்.''

எனக்கும் அதுவரையில் அலைந்ததில் கால்வலியாயிருந்ததால், அவள் சொல்லியபடியே இருவரும் உட்கார்ந்தோம். எங்கிருந்தோ பாட்டுக் குரல் கேட்டது. அக்குரலின் கம்பீரமும், கவர்ச்சியும், உள்ளத்தை கொள்ளைகொண்டது. எழுதிய சித்திரம்போல், அசைவற்றுட்கார்ந்து அவ்விசையையே, கேட்டுக்கொண்டிருந்தோம். வர வர அக்குரல் அருகில் வந்துகொண்டிருந்தது. நாங்களும் அக்குரல் அருகில் வந்த திசையையே, நோக்கிக்கொண்டிருந்தோம். பாடிக்கொண்டே வந்த பெரியாரொருவர் எங்களுக்கெதிரில், சற்று தூரத்திலுள்ள பாறையொன்றின்மேல், 'ஷண்முகா, வேல் முருகா' வென்று சொல்லிக்கொண்டே வந்துட்கார்ந்தார்.

நல்ல உயரம்; உயர்த்திற்கேற்ற பருமன் செக்கச் செவேலென்று ஒளி வீசும் மேனி. சாந்தமும் அமைதியும், அருளும், குடிகொண்ட வசீகரமான முகமும், கம்பீரமான தோற்றமும் உடைய அவர் அறுபது வயதிற்கதிகமுடைய வாகக் காணப்பட்டார்.

நாங்கள் அத்தெய்வீகப் பெரியாரருகில் சென்று வணங்கி நின்றோம். அவர் ஆசீர்வதித்து எங்களை யுட்காரச் சொன்னார்.

சில நிமிஷங்கள் வரையில், என்ன பேசுவதென்று தெரியாமல் அவரையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தோம்.

அவர் எங்களைப் பார்த்து, ''நீங்களிருவரும் சகோதரிகளா, விடுமுறைக்காக இங்கு வந்திருக்கிறீர்களா?'' என்றார்.

''நாங்ளிருவரும் சிநேகிதிகள். சென்னையிலிருந்து விடுமுறைக்காக நேற்றுதான் வந்தோம். சற்று முன் பாடியது தாங்கள்தானே'' என்று கேட்டேன்.

"இருக்கலாம். என் வாய் சும்மாயிராது. எப்பொழுதும் ஏதாவது பிதற்றிக்கொண்டே யிருக்கும்" என்ருர்.

"பிதற்றலா, அக்கானம் எங்கள் நெஞ்சையே உருக்கிவிட்டதே" என்ருள் சாரதா.

"அப்படியா? எல்லாம் ஆண்டவன் செயல்" என்ருர் அவர்.

நான் சாரதாவைப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்தாள்.

பிறகு நான் அப்பெரியாரை நோக்கி, "தங்கள் பாட்டைக் கேட்க வெகு ஆவலாயிருக்கிறேம். தயவு செய்து பாட முடியுமா?" வென்று கேட்டுவிட்டேன்.

"அதற்கென்ன, பாடுகிறேன்" என்று தேவாரமொன்றைப் பாடினர். அப்படியே எதிரொலித்தது அப்பாட்டு.

"இயற்கையே, திரும்பிப் பாடுவது போலிருக்கிறதல்லவா இவ்வெதிரொலி" என்றேன்.

இதைக்கேட்ட அப்பெரியார், "ஆமாம். நமது வாயிலிருந்தெழும் குரலோ, பேச்சோ, பாட்டோ, எதுவும் வீணுய்ப் போவதில்லை. நம்மைச் சுற்றியுள்ள ஆகாயத்தைத் தட்டியெழுப்புகிறது. பிறகு அதிலிருந்து காற்றலைகளை யுண்டாக்கி, அதின் மேலூர்ந்து செல்லுகிறது. அக்காற்றில் மின்சாரப், காந்தம் முதலிய சக்திகளுண்டாகி அவ்வொலியை இழுத்துக்கொண்டு செல்கின்றன. அவ்வாறு போய்க்கொண்டிருக்கும்பொழுது எதிரே ஏதாவது தாக்கினல், மேலும் போகவழியில்லாமல் திரும்பிவிடுகின்றன. நம்மைச்சுற்றி மலைகள். நான் பாடியபாட்டு அம்மலையினுல் தாக்கப்பட்டு என்னிடமே திரும்பி வந்துவிட்டது. இதை ஆதாரமாய்க்கொண்டெழுந்ததுதான் ரேடியோவும். அதைப்பற்றித்தான் உங்களுக்கு நன்ருய்த் தெரியுமே? இதுவரையில் நீங்கள் கண்டும் கேட்டுமிராத அதிசயமான ரேடியோக்கள் பலவிருக்கின்றன. அவைகளைப்பற்றி உங்களுக்குச் சொல்லுகிறேன்."

"வெளியிலுள்ள வானத்தைவிட, வெகு நுட்பமான வெட்டவெளி நம்புடம்பினுள் இருக்கிறது. இதைத்தான் மனவெளி அல்லது சிதாகாசம் என்று சொல்லுவார்கள். ஆகாயத்தில் மின்சார சக்தி அடங்கியிருப்பதுபோல், இந்த சிதாகாசத்திலும் இறைவனுகிய மின்சார ஜோதி கலந்திருக்கிறது. அது கருணை நிறைந்தது. அது தன் இனிய குரலினுல் நம்மைத் தன்னிடம் வரும்படி அழைக்கிறது. உண்மை யறியாமல் நாம் மயங்கும்பொழுது, உண்மையைக் கூறுகிறது. செய்வதறியாமல் திகைக்கும் பொழுது வழிகாட்டுகிறது. அவ்வொலியைத்தான் நாதப் பிரம்மம் என்று சொல்வது. அவ்வொலி மன வெளியின் மூலமாக உடம்பில் ஓடிக்கொண்டிருக்கும் காற்றலையில் பாய்கிறது. அக்காற்றலைகள், அவ்வொலியை இதயமாகிய ரேடியோவில் தாக்கச் செய்கிறது. ஆண்டவன் குரல் இதய ரேடியோவில் எப்பொழும் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது. ஆனல்,

அதை நாம் கேட்பதில்லை. ஏன்? இதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன்.''

''ஒரு சிறிய வீடு. நடுவில் ஒரு சிறிய முற்றம். அம்முற்றத்தில் வீட்டுக்காரன் ரேடியோ வைத்திருக்கிறான். அது திருச்சியில் பாடும் இனிய பாட்டை ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அப்பாட்டு அதனருகிலேயே இருந்தும், அவ்வீட்டுக்காரன் காதில் விழுவதில்லை. ஏன்? அம்முற்றத்தை சுற்றியுள்ள அறைகளில் ஐந்துபேர் குடியிருக்கின்றனர். ஒவ்வொருவரும், ஒவ்வொரு பாஷை பேசுபவர். ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாது. அவ்வளவுபேரும் தனித்தனி ரேடியோக்களை வைத்திருக்கின்றனர். எல்லா ரேடியோக்களும் ஒரே சமயத்தில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் வெவ்வேறிடங்களிலிருந்து வரும் தனித்தனியான விஷயங்கள்; அவை இப்பேரொலி முற்றத்திலுள்ள இனிய பாட்டைக் கேட்கும்படி விடாமல் தடுக்கிறது. அவ்வைந்து ரேடியோக்களையும் நிறுத்திவிட்டால், முற்றத்திலுள்ள ரேடியோ பாடும் இனிய பாட்டைக் கேட்கலாம்.''

''அதுபோல்தான், நம் உடம்பின் நடுவில் இதயமாகிய ரேடியோ இருக்கிறது. அதைச் சுற்றி ஐம்பொறிகளாகிய ரேடியோக்களுமிருக்கின்றன. அவைகள், மின்சாரக் கம்பி போன்ற நம்மனதை, இதயத்திலிருந்து, பிரித்து தன்னிடத்தில் சேர்த்துக்கொள்கின்றன. அவைகள் செய்யும் பெருங் கூச்சலினால்தான், இதய ரேடியோவின் ஒலி நமக்குக் கேட்பதில்லை. இதற்கு எளிய வழியொன்றிருக்கிறது. இறைவனுடைய பெயர்களிலொன்றை, நாம் சொல்லிக்கொண்டோ, நினைத்துக்கொண்டோ இருந்தால் அதன் சக்தியினால், ஐம்பொறிகளாகிய ரேடியோக்களுக்கும், மனதிற்குமுள்ள சம்பந்தம் அறுபட்டு, இதயத்துடன் ஒட்டிக்கொள்ளும். அப்பொழுது அங்கு பேசும் ஆண்டவனுடைய குரல் நன்றாய்க் கேட்கும் என்றார்.''

அவர் சொன்ன விஷயம் எங்களுக்கு ஆச்சரியமாயும், புதுமையாயுமிருந்ததால், நேரம் போனதுகூடத் தெரியாமல் கேட்டுக்கொண்டிருந்தோம். மாலை மறைந்து, இருள் சூழ்ந்துக்கொண்டிருந்ததை அப்பொழுதுதான் அறிந்தோம். அவர்காலில் விழுந்து நமஸ்கரித்து, "சுவாமீ! தாங்கள் சொல்லிய இறைவன் குரலைக் கேட்கவேண்டுமென்று எங்களுக்கும் ஆவலாயிருக்கிறது. அதற்குறிய வழியை தயவு செய்து சொல்ல வேண்டும் என்றோம்.''

அவர் புன்னகையுடன் எங்களை நோக்கி, ''வேறொன்றும் வேண்டாம். "வேல் முருகா'' வென்று சொல்லிக்கொண்டேயிருங்கள். அப்பெயரின் பெருமையினால், ஆண்டவன் குரலைக் கேட்கலாம்'' என்றார். நாழிகையாகி விட்டதால், அவரிடம் விடை பெற்றுக் கொண்டு எங்கள் விடுதிக்குத் திரும்பிவிட்டோம்.

பிரேமி

"புனர்வசு"

தாவர சாஸ்திர ரீதியாக எங்கள் காலேஜ் காம்பௌண்டுக்குள் ஒரு ஓரத்தில் சிறிய தோட்டமொன்று அமைக்கப்பட்டிருந்தது. மரங்களும், கொடிகளும், பூஞ்செடிகளும் நிரம்பி மனதிற்கு சாந்தியைக் கொடுக்கும் இடம். அங்கோர் மூலையில் ஒரு கல்மேடு உண்டு. தினந் தோறும் சாயங்காலம் காலேஜ் முடிந்ததும் நானும் என் சிநேகிதி பிரேமியும் அங்கே சென்று பொழுது போக்குவது வழக்கம். அந்த கல்மேட்டின்மேல் உட்கார்ந்துகொண்டு சும்மா இருப்பாள் எனது சிநேகிதி.

வகுப்பில் அவள்தான் எல்லா பாடங்களிலும் முதலாவதாகத் தேறுவாள். சாமர்த்தியத்திற் கேற்றாற்போல் அவளிடம் அழகும் உண்டு. 'குருகுரு'வென்ற பார்வை. மெல்லிய உடல். தலையை வாரி ஒரு கோடாலி முடிச்சுத்தான் போட்டுக்கொண்டிருப்பாள். புன்னகைத் ததும்பும் அவள் முகத்தைக் கண்டவர்களுக்கு அவளிடம் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும்போல் மனம் ஆசைப்படும். காதிலிருக்கும் குண்டலத்தின் காந்தியை அவள் கன்னத்தில் காணலாம். அவ்வளவு மிருதுவான சிவந்தமேனி.

நாங்களிருவரும் ஒரே அறையில் வசித்து வந்தோம். என்னிடங் கூட அளவளாவிப் பேசியதில்லை. எப்பொழுதாகிலும் பேச நேரிட்டாலும், அவள் பேச்சுகளில் தெய்வீகத் தத்துவம் ததும்பும்.

"பிரேமி மகா கர்வி."

"பணக்காரியோல்லியோ."

"அவள்தான் சாமர்த்தியசாலி யென்ற மிடுக்கு அவளுக்கு"

"இல்லே இல்லே, பெரிய யோகி யென்கிற எண்ணம். அவளுக்கு இந்த சீதா ஒரு வாலு"

இப்படியாக பிரேமியைப்பற்றி காலேஜ் மாணவிகள் வம்பளப்பதுண்டு.

இவ்வளவு வசைச் சொற்களைக் கேட்டுக்கொண்ட பின்பும் பிரேமியை விட்டு ஒரு அரைகணமேனும் பிரிந்திருக்க மனம் வராது. அவர்

களை அப்படியே சித்திரவதை செய்துவிடுவோமா என்று மனம் பதறியதும் உண்டு.

பிரேமியிடத்தில் ஒரு அலாதி ஆகர்ஷண சக்தியிருந்தது. என்னையும் அவளையும் அசைக்கமுடியாத அன்பெனும் கயிறால் கட்டப்பட்டிருந்தது. இந்த உலகத்தோர் ஏற்படுத்தும் மடுவெல்லாம் எங்களன்பின் முன் சிறியதனவாகவேத் தோன்றின.

“பிரேமி கெமிஸ்ட்ரி கணக்கு எனக்குத் தெரியவில்லை. எனக்குச் சொல்லிக் கொடேன்”.

“எனக்கு யாரு சீதா சொல்லிக் கொடுத்தது. உன்னைப்போல் நானும் ஒரு பெண்தானே. மனதை யெல்லாம் அதன்மேல் செலுத்தி போடு தானே வந்துவிடும். அதோ நாளைக்கு வேண்டிய புத்தகங்களை அடுக்கி வைத்திருக்கிறேனே. அதில் ‘பிராக்டிகல்’ புஸ்தகம் இருக்கிறது. பார்த்து காப்பி அடித்துவிடு” என்று உபதேசித்து, ஸ்தாவர வர்க்கங்களிடையே உலாவச் சென்றுவிட்டாள்.

கல் மேட்டின்மேல் சும்மா உட்கார்ந்திருப்பாள். அவளைப் பார்த்துக்கொண்டு நான் உட்கார்ந்திருப்பேன். பித்தான என் மனம் ஊரெல்லாம் சுற்றிக்கொண்டிருக்கும். “எவ்வளவோ பணம் செலவழித்து நம்மை மேல்படிப்புக்காக நமது பெற்றோர்கள் இவ்வளவு தூரம் அனுப்பி இருக்கிறார்கள். டென்னிஸ், ரிங்டென்னிஸ், பாட்மின்டன், என்ற மேனாட்டு நாகரீகத்தின் பயனாக ஏற்பட்ட விளையாட்டுகள் வீணாகப்போகின்றனவே. தாய் பாஷையை அலக்ஷியம் செய்து ராஜீய பாஷையாகிய ஆங்கிலத்தில் நடக்கும் பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்ளாமல் இந்த உலகத்தையே மறந்திருக்கும் பிரேமியுடன் கூடவந்து இப்படி பொழுதை வீணாக்குகிறோமே” என்று மனம் பதைத்ததுண்டு.

சில தினங்கள் பிரேமியைத் தனிமையாக தாவரங்களுடன் உறவாடவிட்டு அவளுக்குத் தெரியாமல் நழுவி நீந்தல் விளையாட்டுக்காகப் போய்விடுவது வழக்கம். திரும்பி அறைக்குவந்தால் நான்தான் பிரிவாற்றாமையினால் சோர்ந்திருப்பேன். அவள் ஒன்றையுமே காட்டிக் கொள்ளமாட்டாள்.

மறுநாள் எப்படியாகிலும் விளையாட அவளை இழுத்துக்கொண்டு போய்விட வேண்டுமென்று திட்டம் போட்டிருப்பேன். காலேஜ் முடிந்ததும் யாகத்திற்கு ஆடு செல்வதைப்போல் அவளைப் பின் தொடர்ந்து தோட்டத்தை அடைந்துவிடுவேன்.

பிரேமி தாவரங்களுடன் பேசிக்கொண்டிருப்பாள். நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு விளையாட்டு நேரங்கழிந்ததும் எங்கள் அறைக்குத் திரும்பிவிடுவது வழக்கம்.

நான்கு வருஷங்கள் புரண்டோடின. பேசா மடைந்தையாயிருந்த பிரேமியின் சகாயத்தினால் நானும் வருஷந் தவறாமல் 'பாஸ்' செய்து வந்தேன்.

மணியும் ஓசையும்போல இணைபிரியாதிருந்த எங்களுக்கு பீ. ஏ. பரீக்ஷை ஒரு மடுவை ஏற்படுத்தப் பார்த்தது. பரீக்ஷைகள் முடிந்த கடைசிநாள். நானும் பிரேமியும் பிரியவேண்டிய நாள். காலையிலேயே பரீக்ஷை முடிந்துவிட்டதால் இரண்டுபேரும் சீக்கிரமே அறைக்கு வந்துவிட்டோம்.

"என் தகப்பனார் என்னை ஊருக்கு அழைத்துப்போக வந்திருக்கிறார். நீயும் இன்றைக்குத்தானே போகப்போகிறாய்" என்று கூறிக்கொண்டே சாமான்களைப் பெட்டியில் அடக்கம் செய்ய முற்பட்டேன். பிரேமி ஒன்றும் பேசாமல் என் காரியத்தையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

சோகத்தினால் நான் நிமிர்ந்து அவளைப் பார்க்கும்போது அவள் பார்வை என் ஹிருதயத்தை ஊடுருவிச் செல்வதைப்போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. என்ன செய்வது? பிரியுந்தருணம் வந்துவிட்டதே என்ற எண்ணத்தில் விம்மிவிம்மி அழுதுவிடுவோமோ என்றுகூட நினைத்தேன்.

"பிரேமி நீ இன்று இரவே ஊருக்குப் போகப்போகிறாயல்லவா?"

"நான் எங்கே சீதா போவேன். சாயங்கால நேரத்தைக் கழிக்க பகவான் அந்த தோட்டத்தை ஏற்படுத்தி யிருக்கிறானே. அதைத் தவிர எனக்கு 'சொந்த இடம் எது? பிரின்ஸிபாலை உத்திரவு கேட்டுக்கொண்டு இங்கேயே இந்த லீவையும் கழித்துவிட உத்தேசித்திருக்கிறேன்."

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவ்வளவு அழகாகப் பெற்றெடுத்து அணைத்து சீராட்டிய தாய் எங்கே போயிருப்பாள்? எல்லா வகுப்பிலும் முதலாகத் தேறி பல பரிசுகளைப் பெற்ற பெண்ணைக் கண்டு ஆனந்தப்பட ஒரு தந்தைதான் இல்லையா? எல்லாம் ஒரு புதிராக இருந்தது.

"என் பிரேமியைக்கூட நமது கிராமத்திற்கே அழைத்துக் கொண்டுபோய்விடக் கூடாது?" அப்பாவைக் கேட்டபிறகு பிரேமியிடம் சொல்வதென்று திட்டம் போட்டிருந்தேன்.

தகப்பனாரும் என்னுடைய விருப்பத்திற்கு இணங்கிவிட்டார். சாப்பாடான பிறகு நான் என் நாற்காலியின்மேல் உட்கார்ந்துகொண்டு

தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தேன். "பிரேமியை எப்படி இணங்கவைத்து என் கிராமத்திற்கு அழைத்துச் செல்வது?"

'தண்'ணென்ற இரு கரங்கள் என் தோள்மேல் வைக்கப்பட்டன. யாராயிருக்குமென்று கரங்களை இறுகப் பிடித்துக்கொண்டு திரும்பினேன்.

ஆமாம், என் உடலிலுள்ள உயிர்போன்ற பிரேமிதான். அவள் கண்களில் நீர் ததும்பிற்று.

"சீதா நீ இன்னும் அரைமணிக்குள் ஊருக்குக் கிளம்பப் போகிறாய்".

"இல்லை பிரேமி. நாளைக்குத்தான் போகப்போகிறேன். என் தகப்பனாரை நாளைக்குவரச் சொல்லி இருக்கிறேன்."

"இன்று இரவும் நீ என்னுடன்தானிருக்கப் போகிறாயா?"

"ஆமாம் பிரேமி. இங்கேயேதான் இருக்கப்போகிறேன். இதோ பார் பிரேமி. எங்கள் கிராமம் தஞ்சாவூர் ஜில்லாவிலே ரயில் ஸ்டேஷனிலிருந்து தொலை தூரத்திலிருக்கிறது. காவிரி ஆற்றில் வெள்ளமிருக்காததால் நாங்கள் ஆறு மைல் தூரமும் நடந்தே சென்று விடுவது வழக்கம். காவிரிக்கரையில் அழகானதோர் சிவன் கோயிலுண்டு. சாயங்காலங்களில் பொழுதுபோக்குக்காக கோயில், ஆற்றங்கரை முதலிய இடங்களுக்குச் செல்வது வழக்கம். நீ மேலே படிக்கப் போகிறாயா?"

"ஆமாம். பிரின்ஸிபால் ஸ்காலர்ஷிப்புக்காக எழுதிப் போட்டிருக்காளாம். கிடைத்துவிட்டால் மேல் படிப்புக்காக என்னை சீமைக்கு அனுப்பித் திரும்பி வந்ததும் இந்த காலேஜிலேயே வேலை போட்டுக் கொடுப்பதாக இன்று சந்திப்பு சமயத்தில் சொன்னாள். என்னைப்போன்ற அநாதைகளுக்கு பகவான் ஏதாகிலும் ஒரு வழி ஏற்படுத்துவார் இல்லையா."

"பிரேமி, நீ சீமைக்குப் போவதற்கு முன்னே என் கொஞ்சம் கிராமக் காற்று வாங்கிவிட்டுப் போகக்கூடாது?"

"அதனால் என்ன சீதா. உனக்குத் தொந்தரவில்லை யென்றால் உன்னுடன் வருவதற்கென்ன?" என்று சொல்லிவிட்டாள். என் குதூகலத்திற்களவே யில்லை யெனலாம். நான் இதையும் அதையும் வாரிப்போட்டு மூட்டைகள் கட்டிவைத்தேன். நான் செய்பனிடுவதை யெல்லாம் புன்முறுவலுடன் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

மறுநாள் எங்கள் கிராமத்திற்குக் கிளம்பிவிட்டோம். கடிதத்தில் வர்ணித்திருந்த சிநேகிதியை நேரில் கண்ட எனது அம்மாவுக்கும்

சகோதரிகளுக்கும் மட்டில்லா மகிழ்ச்சியை யுண்டாக்கியது. எனது தகப்பனுர் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கும், கோயில்களுக்கும், மடங்களுக்கும் எங்களிருவரையும் அழைத்துப்போவது வழக்கம்.

பி. ஏ. படிப்பை முடித்துவிட்ட எனக்கு மணத்தையும் முடித்துவிட ஏற்பாடு செய்திருந்தனர். பிரேமியின் சகவாசத்தினுல் நகர நாகரீகத்திலீடுபடாத எனக்கு மணவாழ்க்கையைப்பற்றி எனது பெற்ரோர்கள் பிரஸ்தாபப்படுத்தியபோது கோபமே வரவில்லை. பிரேமியும் என்கூட இருந்து எனக்கு மணம் முடித்து வைத்தது எனக்கு வெகு சந்தோஷம்.

"நான்மாத்திரம் மணம் செய்து கொண்டுவிட்டேனே. நீ எப்போது செய்துகொள்ளப் போகிருய்" என்றேன் ஒரு நாள் சாயங்காலம் ஆற்றங்கரையோரத்தில்.

"எனக்கா சீதா கல்யாணம். நான் ஏகாங்கியாக இருக்க விரும்புகிறேன். இப்பேர்ப்பட்ட கிராமங்களில் தங்கி கிராம சேவை செய்ய வேண்டும். இதோ உன்னேப்பார், பி. ஏ. படித்தாய். டில்லியிலிருப்பவனுக்கு வாழ்க்கைப்பட்டாய். டில்லிக்குப் போய்விடுவாய். குடித்தனம் செய்வாய். சந்ததி விருத்திக்கு முற்படுவாய். நான் மேல்படிப்பு முடிந்ததும் கொஞ்ச வருஷங்களே உத்தியோகம் பார்க்கப் போகிறேன். பிறகு கிராம சேவையும், ஏழைக் குழந்தைகளின் பராமரிப்புந்தான் எனது ஜீவனாடிகளாக இருக்கும். சீதா என் சரித்திரம் துக்கம் நிரம்பியது. சொல்கிறேன் கேள். மலேயா தேசத்திற்கு சம்பாதிக்க ஓடிய எனது தகப்பனுர் ஒரு பர்மிய லேடியை மணந்து கொண்டார். என்னே என் தகப்பனுரின் பாராமரிப்பில் ஒப்படைத்து என் பர்மியத் தாயார் எனக்கு இரண்டு வயதாயிருக்கும்போதே இறந்து விட்டாள். சென்னேயிலிருந்த என் தாத்தாவிடம் என்னே ஒப்படைத்து விட்டு என் தகப்பனுர் தன் வியாபாரத்தைக் கவனிக்க மலேயாவுக்குச் சென்றுவிட்டார். அவரைப் பற்றி ஒரு சேதியுமே தெரியாமலிருந்து என் பேருக்கு ஏராளமான சொத்து அவ்விடமிருந்து வந்ததால் அவர் இறந்துதான் போயிருக்க வேண்டுமென்று என் தாத்தா அடிக்கடி சொல்வதுண்டு. என் தாத்தாவும் இறந்து நான்கு வருஷங்களாகின்றன. உற்ருர் உறவினர் எனக்கு எல்லா உருவகமாக பகவான் உன்னே எனக்குக் கொடுத்திருக்கிருர்" என்று அவள் துக்க சரித்திரத்தைக் கேட்டுக்கொண்டிருந்தபோது தாரை தாரையாக என் கண்களிலிருந்து நீர் சொரிந்துகொண்டிருந்தது.

"அடேயப்பா எவ்வளவு பெரிய லக்ஷ்யவாதி" யென்று நான் திகைத்தேன்.

மறுநாள் நாங்கள் குற்ருல அருவிக்குப் போவதாக திட்டம் போட்டிருந்தோம். பிரேமிக்கும் சீமைக்குப் போக 'பாஸ் போர்ட்'

வாங்கியாகிவிட்டது. சிநேகிதி என்ற பாவம் மாறி நாங்கள் ஒரு உடலில் தரித்த சகோதரிகளைப்போன்ற உணர்ச்சி இருவருக்கும் ஏற்பட்டிருந்தது. பிரேமியை சீமைக்கு அனுப்பியப் பிறகு நான் டில்லிக்குப் போவதாகத் திட்டம் போடப்பட்டிருந்தது.

திருக்குற்ருலத்திற்குப் புறப்பட்டோம். எங்களுடன் எங்கள் சித்தப்பா மகனும் வந்திருந்தான். மலை யெல்லாம் சுற்றிப் பார்த்துக் கொண்டு மையிருட்டும் தருவாயில் திரும்ப யத்தனித்தோம். என் சித்தப்பா பிள்ளை,

"சீதா நோக்குப் புலி யென்ருல் பயமோல்லியோ? இந்தக் காட்டிலே நரமாமிசத்திற்காக செவ்வானம் மறையும் தருவாயில் புலி இனங்கள் வெளிக்கிளம்பும். சீக்கிரம் உன் சிநேகிதியுடன் கீழிறங்கிவிடுவோம்!" என்ருன். விடுவிடுவென்று இறங்க முற்பட்டோம். இங்கேயும் அங்கேயும் தண்ணீர் ஓடைகளிருந்தால் கால் சறுக்கி விழுந்து கொண்டே பாதி தூரம் வந்தோம். திடீரென்று ஒரு புதருக்குள்ளிருந்து புலி உறும்பும் சப்தம் கேட்டது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மடுவை நோக்கி ஓடி வந்தோம். இருட்டுவதற்கு முன்பே என் பெற்ருேர்கள் கீழே இறங்கிவிட்டனர். பயத்தில் மிரண்டு ஓடிவந்த எங்களை என்னவென்று விசாரித்தனர். தன் பயம் தெளிய அருவியில் ஸ்நானம் செய்ய வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள் பிரேமி. என்னை என் தாயாரிடம் ஒப்படைத்துவிட்டு என் தகப்பனர் பிரேமியை மாத்திரம் ஸ்நான கட்டத்திற்கு அழைத்துச் சென்ருர்.

திடீரென்று ஒரே பரபரப்பு. பிரேமியைக் காணேமாம்! எல்லோரும் துலாவித் தேடிப்பார்த்தனர். எங்கேயும் காணவில்லை. எங்கேயோ மலேயாவில் பிறந்த பெண் சீமை படிப்புக்குப் போய் பெரிய பட்டமெல்லாம் பெற்று சிறந்த வாழ்வில் இருப்பாளென்று மனக்கோட்டை கட்டியதெல்லாம் சிதறுண்டன. பிரேமிக்கு எங்கள் சித்தப்பாப் பையனே யமனுய் முடிந்தான் என்று நான் அடிக்கடி எண்ணியதுண்டு. அவன் புதருக்குள் ஒளிந்துகொண்டு புலியைப் போல் உறுமி இராவிட்டால் நான் இன்று என் பிரேமியை இழந்திருக்கமாட்டேன் என்று ஏங்கியதுண்டு. என் ஏக்கத்தைப் பூர்த்தி செய்ய எனக்கு மறு வருஷமே ஒரு பிரேமி பிறந்துவிட்டாள்.

இன்று அவளுக்கு பத்தொன்பது வயதாகிறது. பீ. ஏ. பட்டமும் வாங்கிவிட்டாள். வீட்டிலே சும்மாதானிருக்கிருள். வா. வே. சு. அய்யர், அவர் புதல்வி, என் பிரேமி எல்லோரையும் தன்னுடன் ஒன்ருகச் சேர்த்துக்கொண்ட திருக்குற்ருலத்திற்குப் போவதா? சீமைக்கு உயர்தரப் படிப்பிற்காக அனுப்புவதா? பிரேமியின் லக்ஷ்யங்களுக்காக அவளை அர்ப்பணம் செய்வதா? என்ன செய்வதென்று எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை!

தேவியின் கிருபை

ஸ்ரீமதி விசாலாக்ஷி சுப்ரமணியம்

அன்று மாசியும் பங்குனியும் கூடும் தினம். கணவன்மார்களின் க்ஷேமத்தைக் கருதி மங்கையர்கள் சாவித்திரி நோன்பு நூற்கும் நாள். சாயந்திரம் ஏழரை மணிக்கு மாதம் பிறக்கிறதென்று சொல்லி சரடும் முதல் நாளே கொடுத்துவிட்டுப் போனுர் சாஸ்திரிகள். அன்று காலைமுதலே 'பிசு,பிசு'வென்று வானம் தூறிக் கொண்டிருந்தது. சாயந்திரம் பலமாக மழை பெய்ய ஆரம்பித்தது.

எனக்குக் கல்யாணமாகி எட்டு மாதங்கள்தான் ஆகின்றன. போனவருஷம் வரை எனக்கு வரவிருந்த கணவரின் நலத்திற்காக நோன்பு நூற்றேன். இந்த வருஷம் எனக்கு வாய்த்தவர், அஷ்ட ஐஸ்வரியத்துடன் கூடி தீர்க்காயுசாக இருக்கவேண்டும்; நாங்கள் அன்னியோன்னியமாக ஆயிரங்காலம் வாழவேண்டும் என்று சாவித்திரிதேவியிடம் மனமுருகப் பிரார்த்தித்து, நோன்புச்சரடை கட்டிக்கொண்டு, அம்மாவை நமஸ்காரம் செய்ய உள்ளே போனேன், கொட்டுகிற மழையில் கையில் ஒரு தட்டுடன் யாரோ வாசற்கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருவது தெரிந்தது. வாசற்படியை நோக்கிச் சென்றேன்.

வந்தது பக்கத்து வீட்டு சுசிலாதான். "வா சுசிலா. நோன்பு ஆயிற்ரு?" என்றேன்.

"ஆயிற்று. அம்மா எங்கே?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் சுசீலா:

"யாரது" என்று அம்மா உள்ளிருந்தபடியே கேட்டாள்.

"நான் தான் மாமி, சுசீலா நமஸ்காரம் பண்ண வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே என் கையில்

இருந்த அடைத்தட்டை அம்மாவிடம் கொடுத்து விட்டு அம்மாவை நமஸ்கரித்தாள் சுசீலா.

"ராஜி, சுசீலாவிற்கு வெற்றிலை, பாக்கு எடுத்துக் கொடு" என்று அம்மா சொன்னாள். அம்மாவின் குரல் கம்மியிருந்தது. அவள் கண்களில் கண்ணீர் துளித்து நின்றது. காரணமறியாமல் அவ்விடத்தை விட்டுச் சென்றேன் நான் வெற்றிலை எடுக்க.

"அவர் எங்கேயாவது ஆய்சோடு இருந்தால் போதும். நான் வரேன் மாமி," என்று சொல்லிக் கொண்டே சுசீலா வெற்றிலை எடுத்துக் கொண்டாள். அவள் முகத்தில் தாங்கொணாத துக்கமும், ஏக்கமும் நிரம்பயிருந்தன. அவள் தலை மறையும் வரையில் அவளையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

"நோன்பு நூற்றுப்பலகாரம் பண்ணவேண்டாமா, வா" என்ற என் அம்மாவின் குரல் கேட்டுத் திரும்பினேன்.

மௌனமாகவே என் பலகாரத்தை முடித்துக் கொண்டேன். "சுசீலா ஏன் அவ்விதம் சொன்னாள்? அம்மா ஏன் அழுதாள்?" என்று அறியாவிட்டால் தூக்கம் வராது போலிருந்தது. வேலை எல்லாம் முடித்து படுத்துக் கொள்ளுமுன் மெதுவாக அம்மாவிடம் சுசீலாவைப் பற்றிக் கேட்டேன்.

என் அப்பா தாசில்தார். செங்கல்பட்டுக்கு மாற்றலாகி மூன்று மாதங்கள் ஓடி யிருந்தன. நான் புக்ககத்திலிருந்து வந்து பத்து நாட்கள்தான் ஆகின்றன.

சுசீலா எங்கள் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் இருந்தாள். அவளுக்குத் தகப்பனார் இல்லை. சுசீலா அவள் அம்மா அவளுடைய ஒரே தம்பி மூவருமே அவர்களுடைய சொந்தவீட்டில் இருந்தனர். அவள் தம்பி ஒன்பதாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். சுசீலா அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவாள். 'கல,

கல'வென்று பேசுவாள். நான் வந்து பத்து நாட்களே ஆகியிருந்ததால் அவள் விருத்தாந்தத்தைக் கேட்கும்படி அவ்வளவு தூரம் பழகவில்லை.

அவளுக்குச் சுமாராக இருபத்திரண்டு வயதிருக்கும். நல்ல கருப்பு. ஆனால் கருப்பிற்கு ஒரு களை என்று சொல்வார்களே, அதுகூட அவள் விஷயத்தில் பொய்யாக இருந்தது. "சுசிலா இன்னும் புக்கத்திற்குப் போகவில்லையா அம்மா" என்று பேச்சை ஆரம்பித்தேன்.

"போய் வந்து எல்லாம் ஆயிற்று" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் அம்மா.

"ஏனம்மா அப்படிச் சொல்லுகிறாய்" என்று கேட்டேன் நான்.

"அந்தக் கவலை உனக்கெதற்கு—பேசாமல் தூங்கு" என்றாள் அம்மா. ஆனால் நான் விடுவதாக இல்லை. என் நச்சுப் பொறுக்க முடியாமல் அம்மாவும் சசிலாவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தாள்.

"உன்னைப்போல் இல்லை. சுசிலாவிற்கு ஐந்து வயதிலேயே கல்யாணம் நடந்து விட்டதாம். அவள் அப்பா பெரிய மிராசுதாராக இருந்தாராம். அவருக்கு இந்த ஒரே பெண்ணும், இரண்டு பையன்களுமாம். ஒரு பையன் இருபது வயது வளர்ந்து செத்துப்போய் மூன்று வருஷங்கள்தான் ஆகிறதாம். இப்பொழுது இருப்பது சுசீலாவும், அவள் ஒரே தம்பியுந்தான். அவள் அப்பா போய் ஆறு வருஷங்கள் ஆகிறதாம்.

நிறைய நிலபுலனும், ஆஸ்தியும் இருந்தால் சொந்தக்காரர்கள் வந்து சுற்றுவதற்குக் கேட்பானேன்? அதுவும் சுசீலாவின் அப்பா பரம சாதுவாம். எல்லாருமாகச் சேர்ந்து குழையடித்து சுசீலாவிற்கு ஐந்து வயதிலேயே கல்யாணம் பண்ணி வைத்துவிட்டார்கள். சுசீலாவின் புக்ககத்துக்காரர்களும், அவர்களுக்குத் தூரபந்துக்கள்

தான். பெரிய சம்சாரி. அதோடு சாப்பாட்டிற்குக் கூட வகையில்லாதவர்கள். சுசீலாவின் அகமுடையானுக்கு அப்பொழுது பதினைந்து வயதாம். அவன்தான் மூத்த பிள்ளையாம். பார்ப்பதற்கு நன்ருக இருப்பானும். ஒன்பதாவது வகுப்பு படித்துக்கொண்டிருந்த அவனுக்குச் சுசீலாவைப் பதினெட்டுப் பொருத்தமும் பார்த்துப் பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து கல்யாணம் நடத்திக் கொடுத்தார்களாம். இது போராதென்று 'ஆடி' என்றும், 'ஆரும் மாதம்' என்றும், 'தீபாவளி' என்றும் பணம் பறித்துக்கொண்டே இருந்தார்களாம். சுசீலாவின் அப்பாவும் தன் பெண்ணை உத்தேசித்து ஆட்சேபணை ஒன்றும் சொல்லாமல் கொடுத்துக்கொண்டே இருந்தாராம்.

சுசீலாவும் பதினைந்து வயதில் பெரியவளானுள். அவள் அகமுடையானும் பீ. ஏ. பாஸ் செய்துவிட்டு நாகபூரில் நூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலையில் அமர்ந்தான். நல்ல நாள் பார்த்துச் சுசீலாவைச் சகல சீர்வகையருக்களுடனும் கொண்டுவந்து விடும்படி கட்டளை வந்ததாம் சம்மந்தியிடமிருந்து. இவர்களும் பெருமையாகச் சகல சீர்களுடன் சுசீலாவை அழைத்துக் கொண்டு போனார்களாம்.

'அற்பனுக்குப் பவிஷு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' என்று சொல்வார்களே, அது ரொம்பவும் நிஜம்தான். தங்கள் பிள்ளைக்கு நூறு ரூபாய் சம்பளம் கிடைத்தது பெரிய அதிருஷ்டம் என்று நினைத்துக்கொண்டு தெரியாமல் சிறிய வயதில் சம்பந்தம் செய்துகொண்டு விட்டதாகவும், இப்பொழுது நான், நீ, என்று போட்டிப் போட்டுக் கொண்டு அழகான பெண்கள் காத்திருக்கிருர்களென்றும் சொல்லி, 'உட்கார ரூபாய் எழுந்திருக்க ரூபாய்' என்று சுசீலாவின் அப்பாவை அரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவருக்குப் பொருக்க முடியாமல் பெரிய சண்டையில் முடியும் போலாகி விட்டதாம். போதாதற்கு சுசீலா கருப்பு, அழகில்லை, தங்கள் பையனுக்கு ஏற்றவளில்லை என்று வேறு சொல்ல ஆரம்பித்து

விட்டார்களாம். மூவாயிரம் ரூபாய்க்குமேல் செலவு செய்தும் சம்பந்திகளைத் திருப்தி செய்யவும் முடியாமல் பெண்ணையும் குற்றம் கூறத் தொடங்கினதையும் பார்த்து அவருக்குப் பொறுக்க முடியாத கோபம் வந்து விட்டதாம். வார்த்தை முற்றி கடைசியில் பெண்ணையும் இவர்கள் திருப்பி அழைத்துக் கொண்டு போகும்படி யான நிலைமைக்கு வந்து விட்டதாம். பக்கத்தில் இருந்தவர்கள் மத்யஸ்தம் செய்து சுசீலாவை ஒரு வழியாகப் புக்ககத்தில் இருக்கும்படி செய்தார்களாம். ஆழம் தெரியாமல் காலை இட்டுக்கொண்ட சுசீலாவின் அப்பா இனி பெண்ணைத் திரும்பிப்பார்ப்பதில்லை என்று கோபத்துடன் திரும்பிவிட்டாராம்.

"பழி ஓரிடம் பாவம் ஓரிடம் எல்லாம் சுசீலாவின் தலையில் விழுந்ததா" என்று இதுவரை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த நான் குறிக்கிட்டேன்.

அம்மா மறுபடியும் சொல்ல ஆரம்பித்தாள் "இடிச் சொல் கேட்டுக்கொண்டு அவளும் ஆறு மாதம் புக் ககத்தில் இருந்தாள். பிறகு நாகபூருக்குக் கொண்டு விட்டார்கள். அவளும் தனிக்குடித்தனம் நடத்தி அவ னைத் தன் வசப்படுத்திவிடலாம் என்று மனக்கோட்டை கட்டினுள். ஆனால் கட்டழகும் அந்தஸ்தும் வாய்ந்த அவன் கண்களுக்கு சுசீலா நாகரீகமற்ற மரக்கட்டை யாகவே தோன்றினுள்."

"நின்ருல் குற்றம். உட்கார்ந்தால் குற்றம். இப்படி யாக சுசீலா ஒரு வருஷகாலம் தன் அகமுடையானிடம் இருந்தாள். அவனைப் பார்த்துக்கொண்டு, அவனுக்கு வேண்டியதை ஒரு வேலைக்காரி போல் செய்து கொண் டிருந்தால் போதும் என்று மனதைத் திடம் செய்து கொண்டிருந்தாள். அதுகூடப் பொறுக்கவில்லை விதிக்கு. ஒரு நாள் இனி அவளைத் தன்னுடன் வைத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிப் பிறந்தகத்தில் கொண்டு விட்டுப் போய்விட்டானும். சுசீலாவின் அப்பாவிற்கும் குடும்பத்தில் சளைப்பு ஏற்பட்டு, பெண்ணின் கவலையி னுலேயே செத்தும் போய்விட்டாராம். ஆறு வருஷ

மாகிறது. சுசீலா இங்குதான் இருக்கிருள். அவனுக்கு எவ்வளவோ கடிதங்கள் எழுதினளாம். பலன் இல்லே. அவன் ஒரு படித்தப் பெண்ணேப் பண்ணிக்கொண்டு, குழந்தைகூடப் பிறந்திருக்கிறதாம். சுசீலா என்ன செய்வாள் பாவம். ஒவ்வொரு வருஷமும் தன் அகமுடையான் ஆய்சோடு இருந்தால் போதும் என்று பக்தி சிரத்தையோடு சாவித்திரி நோன்பு நாற்கிருள். அம்பாள்தான் கண் திறந்து பார்க்க வேண்டும். அவள் கண்ணும் திறக்குமோ'' என்று கதையை முடித்தாள் அம்மா.

''பாரத ஸ்திரீகளுக்குத்தான் எவ்வளவு பதிபக்தி. எங்கேயோ, யாருடனே சந்தோஷமாக இருக்கும் தன் கணவன் க்ஷேமத்திற்காக எவ்வளவு பயபக்தியோடு பூஜை செய்து வருகிருள் சுசீலா. அவன் அவளே உதறித் தள்ளிவிட்டான். ஆனல் அவள்? தன்னே உதாசீனம் செய்து மற்ருெருத்தியுடன் வாழும்போதும் அல்லவா அவனே நினைத்து உருகுகிருள்? இத்தனைப் பெருந்தன்மையையும், தியாக புத்தியையும் கொடுத்த பகவான் சுசீலாவிற்கு ஏன் அழகை மாத்திரம் கொடுக்கவில்லே? புறத்தோற்றம்தான் முக்கியமா? அகத்தைக் கவனிப்பார் யாருமே இல்லேயா?'' என் மனம் பல, பல எண்ணி ஏங்கிற்று. என்றுதான் நம் பாரத ஸ்திரிகளின் நிலைமை உயருமோ என்றெண்ணி நைந்தது. அதே நினைவால் என்னையுமறியாமல் உறங்கி விட்டேன்.

மறுநாள் எழுந்திருக்கும்போது வெகு நேரமாகி விட்டது மணி எட்டிருக்கும. பக்கத்து வீட்டில் ஒரே அமர்க்களமாக இருந்தது என்ன சமாச்சாரம் என்று எங்கள் வீட்டின் முற்றத்தின் வழியாக எட்டிப் பார்த்தேன்.

யாரோ ஒரு புது—அழகிய—வாலிபன் உட்கார்ந்திருந்தான். கீழே சுசீலாவின் தாயார் படுத்திருந்தாள். சுசீலா வெளி வாசற்படியில் நின்றுகொண்டு எங்கள் ஊர் டாக்டருடன் பேசிக்கொண்டிருந்தாள். அவள் தமபி அழுதுகொண்டிருந்தான்.

சுசீலாவின் அம்மாவிற்கு ஏதாவது....? அந்த வாலிபன் யார்? என் மனம் பதறிற்று. அம்மா அப்பொழுது தான் சுசீலாவின் வீட்டிலிருந்து வந்துகொண்டிருந் தாள்.

"என்ன அம்மா?"

"ஒன்றுமில்லை. தேவி கண் திறந்துவிட்டாள். சுசீலாவின் அகமுடையான் அவளை அழைத்துப் போக வந்திருக்கிறான்."

"நிஜமாகவா? அப்படியானால் இளையாள்?"

"அவள் ஒரு வயதுக் குழந்தையை விட்டுவிட்டுப் போய்விட்டாளாம். திடீரென்று வந்த சந்தோஷச் செய்தியைத் தாங்கமாட்டாமல் மூர்ச்சையாகி விட்டாள் சுசிலாவின் அம்மா. டாக்டர் வந்து இன்ஜெக்ஷன் செய்துவிட்டுப் போயிருக்கிறார். ஒன்றுமில்லை. சரியாகப் போய்விடும். எல்லாம் தேவியின் கிருபை" என்றாள் அம்மா.

தேவியின் கிருபையா? அல்லது சுசிலாவின் பொறுமையா? என்ற கேள்வி எழுந்தது என் மனதில்!

மேனை, சாவித்திரி, அருந்ததி, அநுசூயை, சுநீதி என்ற பஞ்ச கன்னியர்களில் ஒருவர் சாவித்திரி தேவி. அஸ்வபதி அரசனுக்கும் அவன் தர்ம பத்தினி மாளவிக்குமாக ஜனித்தவர்தான் சாவித்திரி தேவி. தியுமத்சேனனின் புதல்வனாகிய சத்தியவானுக்கு வாழ்க்கைப்பட்டாள். பட்டத்தைத் துறந்து காட்டில் வசித்துவந்த அரசக் குமாரனை அழகுக்காகவும் குணத்திற்காகவுமே தேர்ந்தெடுத்தாள்.

பதிவிரதா பலத்தால் நாட்டையும், மாமன் மாமியாரின் கண்களையும், புத்திரபாக்கியத்தையும் யமனிடமிருந்து பெற்ற சாவித்திரி தேவி தன் கணவனின் உயிரையும் காலதேவனிடமிருந்து பெற்று விட்டாள்.

'மாசி நோன்பு பாசி படரும்' என்று பெரியோர்கள் மாசியும் பங்குனியுமாகக் கூடும் நேரத்தில் நோன்பு செய்வது வழக்கம். நோன்பைப் பற்றியக் கட்டுரையை மற்றோரிடத்தில் காண்க.

நம் நிலைமையும் நாகரீகமும்

ஸ்ரீமதி ஜானகி கிருஷ்ணன்

நாகரீகம் என்பதற்கு விசித்ரம், சாதுர்யம், புதுமை என்னும் பல பெயர்கள் உண்டு 'பழையன கழிதலும் புதியன புகுதலுமே' நாகரீகம் எனப்படும். கண்ணுக்கு ரம்யமும் கவற்சிகரமான தோற்றத்தை அளிக்கும் ஆடை, ஆபரணங்களை அணிந்து அலங்காரம் செய்து கொண்டு நாவிற்கினிய நூதனமான உணவு வகைகளை உண்டு, உல்லாசமாக உலாவி வருவதே நாகரீகம் என்றும் எண்ணுகிறவர்களுண்டு. கல்வி அறிவிற்சிறந்து கற்றபின் அதற்கு தகுந்தபடி பகுத்தறிவுடன் நடந்து கொள்பவர்கள்தான் உண்மையான நாகரீகர் ஆவார். மனிதரின் அழகிய நடவடிக்கையே ஒரு நாகரீகந்தான். நாகரீகமுடையவரே பெரிய மனிதர்களென்றும் அது இல்லாதவர் காட்டுமிராண்டிகளென்றும் இகழப்படு கின்றனர். அந்நிய நாட்டாரின் ஆசாரங்களைப் பார்த்து அதை கண்மூடித்தனமாக பின்பற்றுவதுதான் நாகரீகம் என்று எண்ணுவது சரியல்ல. பல தேசத்தினரைப் பார்த்து பல விஷயங்களைக் கற்றுக்கொண்டு நாகரீகத்தை அபிவிருத்தி செய்துகொள்வது தவறு அல்ல. ஆனல் அந்த ஆசார அநுஷ்டானங்கள் நம் தேசத்திற்குப் பொருந்துமா? என்பதை யோசித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

முதலில் நாகரீகத்தைச் சேர்ந்த செயல் எவை என் பதை ஆராயவேண்டும். குறித்த நேரத்தில் நம் வேலை களை செய்து முடித்து அளவறிந்து பேசிப் பழகி, சிரத்தையுடன் கல்விகற்று, விடா முயற்சியுடன் தொழில் முடித்து, ஊக்கத்துடன் நடந்துகொள்வதை, பல தேசத்தினரைப் பார்த்து கற்றுக்கொள்வதில் தவ றில்லை. உடை விஷயத்தில் அந்நிய நாட்டாரை பின் பற்றுவது அனுவசியந்தான். கோட்டும், ஸூட்டும், ஹாட்டும் சில வேளைகளில் அணியலாம். ஆனல் சதா

சர்வகாலமும் வீட்டில் இருக்கும்போதும் ஐரோப்பிய உடை அணிந்துகொண்டு வீட்டில் குறுக்கும் நெடுக்கும் உலாவுவது ஏற்றதல்ல. நம் நாட்டு சீதோஷ்ண ஸ்திதிக்கு பொருந்தாத விஷயம். ஆரோக்யத்திற்குக் கெடுதல் சம்பவிக்கும்படி அனுவசியமான வேளைகளில் பொருத்தமற்ற உடைகளை அணியலாகாது. நாலடி நடந்தால் அகௌரவம் என்று எண்ணி பக்கத்துத் தெருவுக்கும் போகக்கூட மோட்டாரில் சவாரி செய்வதுதான் நாகரீகம் என்று எண்ணுகின்றனர் பலர்.

ஆடம்பரமான அலங்காரத்துடன் வீட்டை சோபிக்கச் செய்ய பல விலையுயர்ந்த பொருள்களை வாங்கி வீட்டை நிறப்புவதும், டிராயிங்ரூம், டைனிங் ரூம், டிரஸிங் ரூம், இவைகளுக்கேற்ற சோபா, நாற்காலி, மேஜை இவைகளை வாங்கிப்போட்டு போட்டாப் போட்டியில் வீட்டை நாகரீக மயமாகச் செய்கிறவர்களே, நாகரீகத்தின் முன்னணியில் நிற்பவர்களாவார்கள். அதற்குத் தகுந்த மோட்டார் வாகனம், சிப்பந்திகள், இவைகளெல்லாம் நாகரீகத்தின் சின்னங்களாகும். மோட்டாரில் பல நண்பர்களுடன் உயர்ந்த காபி ஹோட்டல்களுக்குப் போய் பற்பல விதமான ஆகாரங்களை புசித்துவிட்டு பொழுதுபோக்காக நண்பர்களை ஸினிமாவுக்கு அழைத்துச் செல்வது ஒரு ரகம். அடிக்கடி நண்பர்களுக்கு விருந்தளிப்பது, உல்லாசமாக பொழுதுபோக்குவது முதலிய அம்சங்களும் நாகரீக வாழ்க்கையில் அடங்கியவை. நிலைமை தெரியாமல் நாகரீகச் சுழலில் அகப்பட்டுக் கொண்டு திக்குமுக்காடுபவர்களை நாம் தினமும் காண்கிறோம். தம்முடைய ஸ்திதியை உணர்ந்து தம் அந்தஸ்திற்கு இத்தகைய ஆடம்பரச் செலவுகள் தாங்கமுடியுமா? என்பதை சிறிதும் யோசியாமல் மனம்போன போக்கெல்லாம் போவது முடிவில் தீமையையே விளைவிக்கும். தம்முடைய அந்தஸ்திற்குச் சமயற்காரன், மோட்டார் வேலையாட்கள் முதலியன வைத்துக் கொள்ளாவிட்டால் கௌரவமில்லை என்று நினைத்து ஆடம்பரமான முறையில் வாழ்க்கை நடத்திவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக

கடனில் ஆழ்ந்து, முடிவில் கடனை திருப்பிக்கொடுக்க முடியாமல் தவித்து அவமானப்படுவது பரிதாபப்பட வேண்டிய விஷயம்.

அபூர்வமான காங்ரீட் கட்டடம் ஒன்று அரண்மனை போல் கடன் வாங்கிக் கட்டி அதில் மின்சார குழாய்களும், அலங்கார தீபங்களும் போட்டு துரைமகன் போல் வாழ்க்கை நடத்திக்கொண்டு பெட்ரோல் கடையிலும், ஜவுளிக் கடையிலும், ஆயிரக்கணக்காக கடன் வைத்துக்கொண்டு மின்சார விளக்குகளுக்கு பணம் கட்டக்கூட முடியாமல் போவதும் நிலைமை தெரியாத ஆடம்பர நாகரீகத்தின் விளைவுகளே. இவர்கள் வாழ்க்கையில் மனநிம்மதி என்பது எங்கஙம் காண முடியும். போலி அந்தஸ்தும், போலி நாகரீகமும் கைக்கொள்வதின் பலன் கைமேல் கிடைத்துவிடுகிறது. மோட்டார் வைத்துக்கொண்டு நிர்வகிக்க சக்தி இல்லாதபோது, பஸ், அல்லது டிராமில் போவதை ஏன் அகௌரவமாக நினைக்கவேண்டும். கடன் வாங்கியாவது முதல் வகுப்பில் ரயில்ப்பிரயாணம் செய்வதை விட நிம்மதியாக மூன்றும் வகுப்பில் போகலாமே! உண்மையான மதிப்புடைய அறிவாளிகளாகிய பெரிய மனிதர்கள் கால் நடையாகச் சென்றாலும், பஸ்ஸில் பிரயாணம் செய்தாலும் உலகம் அவர்களை கௌரவமாகவே மதிக்கும். "என்ன அடக்கம்! துளிகூட பெருமையைக் காணோமே இதுவன்றோ பெருந்தன்மை" என்றே புகழ்வார்கள். அறிவாளிகள் தம் நடத்தையாலும், கொள்கைகளாலும், பிரகாசித்து உலகத்தாரின் நன் மதிப்பை பெறுகிறார்கள். ஆடம்பரத்தினாலும் படாடோபத்தினாலும் அன்று.

ஐசுவர்யத்தில் திணறுகிறவர்கள் மனம் போனபடியெல்லாம் ஆடை ஆபரணங்களை அணிந்து ஆனந்தமாகக் காலங் கழிக்கலாம். ஆனால் அதைப் பார்த்து மற்றவரும் சக்திக்கு மீறி ஆடை அணிகளுக்கு ஆசைப்படுவது ஆபத்தே. நம்முடைய பணத்தை பறிப்பதின் பொருட்டே பலவகையான நூதன அலங்கார பொருள்கள் நாளுக்குநாள் அதிகமாக விற்பனைக்கு வருகின்றன.

இவைகளில் செலவிடப்படும் பணம் வீணே. நாகரீகம் என்று எண்ணி அனுவசியமாக பொருள் விரயம் செய்வதேயாகும்.

உடை விஷயத்திற்முன் அநேகர் அளவுக்கு மீறி அனுவசியச் செலவு செய்கின்றனர். சிலர் பெண் குழந்தைகளுக்கு ஆண் உடை அணிவிப்பது நாகரீக மென்று எண்ணி அனுவசிய செலவு செய்து உடை தரிக்கின்றனர், ஆனால் அவ்விதம் செய்வது சரியல்ல என்று குழந்தைகளின் மனோதத்வ ஆராய்ச்சி செய்த நிபுணர்கள் கூறுகின்றார்கள். குழந்தையின் உடலும் உள்ளமும் மிகவும் நுண்ணியதாகையால் அதன் போக்கும் வளர்ச்சியும் மிகவும் கவனிக்கவேண்டிய விஷயம் என்பது அறிவாளிகளின் கருத்து. ஆண் குழந்தைக்குப் பெண் உடை தரிப்பதினால் அக்குழந்தைக்கு இயற்கையில் இருக்கவேண்டிய ஆண்மை குணம் மழுங்கி பெண்மையின் சுபாவம் பாதிக்குமாம். அதேபோல் பெண் குழந்தைக்கு ஆண் உடை தரிப்பதினால் பெண்மைக்குறிய அச்சம் நாணம் முதலிய குணங்கள் விலகி ஒருவித துணிச்சலும் தைரியமும் ஏற்படுகிறதாம். ஏதோ ஒரு சமயம் விளையாட்டிற்காக இவ்விதம் உடை போடுவதினால் தவறு ஒன்றும் இல்லை. அதையே அடிக்கடி உடுத்தினால் அதன்காரணமாகக் குழந்தையின் உள்ளம் பாதிக்கப்படுகிறதாம். குழந்தைகள் குணம் கால் பங்கு பிறவியிலேயே ஏற்பட்டபோதிலும் அதன் முக்கால் பங்கு முதல் ஐந்து வயதுவரை வளர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தைப் பொருத்ததேயாகும். முக்கியமாகக் குழந்தையை வளர்க்கும் பெற்றோர்களைப் பொறுத்தது என்பதில் சந்தேகமில்லை.

பல தேசத்தினரது உடைகளை வேடிக்கைக்காக உடுத்துவதில் தவறில்லை. பல தேசத்தினரை பின் பற்றுவதினால்தான் நாகரீகம் பரவுகிறது. ஆயினும் நம் தேசத்திற்கும், நிலைமைக்கும் பொருந்தாத உடைகளை நாகரீகத்தின் பொருட்டு அணிவது சரியல்ல. முக்கியமாக இளமைப் பருவத்தில் குழந்தைகளின் மனம் வீண்

ஆடம்பர உடைகளில் நாடவிடுவது பிற்காலத்தில் கெடுதலாகிறது. பெரியவர்கள், தேசத் தலைவர்கள் முதலியவர்களைச் சுட்டிக்காட்டி அவர்கள் உபயோகிக்கும் ஆடம்பரமற்ற தூய்மையான உடையையே சிலாக்கியமானதாக அவர்கள் மனதில் படும்படி சொல்லவேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

சில ஸ்திரீகள் தம் பேத்திக்கும் காதில் நீண்ட லோலக்குகள் அணிவித்து புல் ஓவர் என்ற கம்பளிச் சட்டையும் அணிவித்து, பாட்டியும் அதேபோல் தன் காதில் நீண்ட லோலக்குகளை மாட்டிக்கொண்டு ஸ்தூலதேகத்தினளாக இருந்தும் புல் ஓவரை புடவையின்மீது அணிந்து கொண்டு பேத்தியைக் கையில் பிடித்துக் கொண்டு பொருட்காக்ஷி சாலையில் உலாவுவதை பார்க்கும்போது அதுவும் ஒரு விநோதமான கண்காக்ஷியாகவே தோன்றுகிறது. எந்த விஷயத்திலும் நாகரீகமாயிருப்பது தவறன்று. ஆனால் அது அவரவர்களுக்கு பொருத்தமானதா? நிலைமைக்கு ஏற்றதுதானா என்பதை யோசித்துத் தீர்மானம் செய்வது சாலச் சிறந்தது.

செருப்புகள் கால்களுக்கு பாதுகாப்பு அளிப்பதுடன், அழகையும் கொடுக்கின்றன.

கண்களைக் கவரும் வனப்பும், நீண்டகால உழைப்பும் ஒருங்கே அமைந்த செருப்புகளும், உத்திரவாதமுள்ள தோல் பைகளும், பெட்டிகளும் கிடைக்குமிடம்:—

பண்ட் அண்டு கம்பெனி

பிராட்வே, சென்னை.

நமது புராதன நாகரீகச் சிறப்பின் விமரிசை

ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி

[ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமஹா பாரதம் முதலிய நமது புராதன கிரந்தங்களில், தரும சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட நீதிகள் நன்கு விளக்கப் பெற்றிருக்கின்றன. தெய்வபக்தி மாத்ருபக்தி, பித்ருபக்தி ஆசார்யபக்தி, ஸத்தியம், பொறுமை, ஜீவகாருண்யம், ஸ்திரீ புருஷ தருமம், பதிவிரதா மகிமை, சகோதரவாஞ்ஜை, ஸ்நேகிதத்தின் புண்ணியசீலம், பெரியோரிடத்து மரியாதை, அதிதி பூஜை, செய்நன்றி மறவாமை, செங்கோல் முறை, ராஜதந்திரங்கள், அன்பு, தயை, நடுவு நிலைமை, சரணமடைந்தாரைக் காத்தல், முதலிய உத்தம குணங்களை புகட்டவல்ல நீதிகளும், போர்புரிய வேண்டி வருங்காலத்து, போரில் காட்ட வேண்டிய திறமை, தந்திரங்கள், வியூகம் வகுத்தல் முதலிய உயரிய தத்துவங்களும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இராமாயணம் மஹாபாரதம் ஆகிய இவ்விரு சிறந்த வீரசரித்திர மகா காவியங்களை நமது பெண்மக்கள் நன்றாக காதலைப் பாடமாகப் படித்து அவைகளிலுள்ள நீதி மார்க்கங்களை கடைப்பிடித்து நடந்தால் வேறு பள்ளிக்கூடப் படிப்பே தேவையில்லையே!]

நமது தேசத்தின் பூர்வ சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் பிரபலமான மகிமையடைந்திருந்த காலங்கள் மிகப்பல வென்பதும், அவ்விசேஷப் பிரகாசமான நிலைமைக்குக் காரணம் நமது நாகரீகத்தின் சிறப்பும் மேம்பாடுமேயன்றி, அயல்நாட்டாருடன் போர்புரிந்து அப்போர்களில் ஜயமடைந்த வெற்றியல்ல என்பதும் புலப்படும். வேதங்களின் காலப்பகுதியில் (Vedic age) மஹரிஷிகள் எடுத்துக்காட்டி ஜனங்களுக்கு விளக்கிய அழியாப் பெருஞ் சத்தியமார்க்கம் ஒன்றே. "இருளாகிய மாயையில் அகப்பட்டுக் கலங்கவிடாமல் வெளிச்சமாகிய சத்திய மார்க்கத்திலேயே உயிர்வாழ்வதற்கான வசதிகளைத் தந்தருளவேண்டும்" என்ற பிரார்த்தனையே. புராண இதிகாசங்களின் காலப்பகுதிதான் (Epic age) வெகு முக்கியமானது இராமாயணம் மகா பாரதம் இரண்டிலும் நம் முன்னோரது வீரச்செயல்கள், அவர்களுக்கிருந்த ஸ்வதந்திரம், மெருகு நிறைந்த பழக்க வழக்கங்கள், அவர்களுடைய விசேஷ குணாகுணங்கள் முதலியவை செவ்வனே பிரதிபிப்பிக்கின்றன. புத்தரது காலப்பகுதியிலோ மனிதரது மனப்

போக்குக்கும் நடுநிலை வழுவாமைக்கு மிகுந்த சுயேச்சை பிரகாசித்துத் திகழ்ந்தது. வேதாந்த சாதனைக்குத் தேவையான சூத்திரங்கள் நிருமிக்கப்பட்ட காலப்பகுதியில் தத்துவார்த்தங்களும், வேதாந்த மார்க்கங்களுமே சிறந்தோங்கின. ஆசாரியர்கள் தோன்றிய காலப்பகுதியில் மனித குலத்தின் பரிணாமம் ஆரம்பமாயிற்று.

ஆகவே, நமது தேசச் சரித்திரத்தில் மேற்கூறிய காலப்பகுதிகள் நமது நாகரீக மேம்பாட்டின் பற்பல அமிசங்களைப் பிரபலமாக்கிப் பிரகாசிக்கச் செய்தன. பாணினி என்ற மகான் பிறந்தவிடமாகிய தக்ஷசீலத்தில் நிருமிக்கப்பட்ட சர்வகலா சங்கத்தில் சிறந்துவிளங்கிய பெரியோர்கள் எத்தனைபேர்? அலெக்ஸாண்டர் என்னும் கிரேக்க வீரனுடன் இந்தியாவிற்கு வந்த கிரேக்கர்கள் தக்ஷசீலத்தின் கலையபிவிருத்தி முறைகளையும், ஆங்கு பாடங் கற்பித்துவந்த உபாத்தியாயர்களது யதார்த்தகுணம், அலங்காரமின்மை, ஊக்கம், பொது நலநாட்டம் இவைகளையும் கண்டு பிரமித்துப் போயினராம். தக்ஷசீலம் மட்டுமா? இன்றும் காசி, நதியா, விதேஹம், பாஞ்சாலம், மத்ரதேசம் முதலிய இடங்களிலுள்ள சர்வ கலைக் கழகங்களும் உபநிஷத் காலப் பகுதியில் சிறப்புற்று விளங்கிவந்தன.

ஐந்நூறு வணிகர்கள் சேர்ந்து பத்துலக்ஷம் தங்க மோஹராக்கள் செலவழித்து, ஏராளமான விஸ்தீரணமுள்ள நிலங்களை வாங்கி அவைகளின்மேல் வெகு அழகான சிங்காரப் பூஞ்சோலைகள், ரம்மியமான தாமரைத் தடாகங்கள், உயரிய பெருங் கட்டிடங்கள் முதலியவைகளை யமைத்து பதினாயிரத்துக்கு அதிகப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு சாஸ்திரீகமான முறையில் கல்வி கற்றுக் கொடுப்பதற்காக ஏற்படுத்திய 'நளந்தா' உயர் தரக் கலாசாலையைப்பற்றி யறியாதவர் மிகச் சிலரே தானிருப்பார்கள்.

அவ்வாறு சீருஞ் சிறப்புமிகுந்து விளங்கிய காலப் பகுதிகளில் நமது ஹிந்துக்களது நாகரீகத் தேர்ச்சியை இடைவிடாது தூண்டிச் செலுத்தவல்ல ஒரு 'சக்தி'

தத்துவம் முக்கிய அம்சமாயிருந்தது. இச்சக்தி பலம் எகிப்து தேசத்திலுள்ள அலெக்ஸாண்டிரியாவுக் கெட்டி, அங்கிருந்து மேல் நாடுகளுக்கும் பரவி அந் நாட்டவரின் தத்துவக் கோட்பாடுகளையும் வெகுவாக மாற்றி சீர்ப்படுத்தியதாக சரித்திரங்களில் படிக்கிறோம். அலெக்ஸாண்டரின் ஒப்பற்ற ராணுவத் திறமையை, மெச்சிய சந்திரகுப்த மௌரியர், கிழக்கு இந்திய தீவு கள், ஜாவா, சையாம் முதலிய அயல் நாடுகட்கு கப்பல் களை யனுப்பி வர்த்தகம் செய்ததுமல்லாமல் நம் நாட்டு நாகரீகத்தையும் அந்நாடுகளில் பரவச்செய்தார். அந் நாடுகளில் நமது நாட்டுச் சிற்ப முறைகள் நிரம்பிய கட்டிடங்களும், கட்டிடச் சிதைவுகளும் இன்றும் காணக்கிடக்கின்றன.

நமது புராதன காலத்துச் சம்பிரதாயம், ஐதிகம், நற்பழக்க வழக்கங்கள், பூரணமாக நலிந்து மறைந்து போகாமல் நமது வீடுகளில் சிறிது இன்னும் இருந்து வருவது; நம் நாட்டு ஆண்பாலர்களால் அல்ல. தாய்மார் களும், மனைவிமார்களும் வெகு சிரமப்பட்டு பரிபா லித்துவருவதால் மட்டுமே நிலைபெற்றிருக்கிறது.

மனித குலத்துக்கே தொட்டிலாகவிருந்தது நமது நாடேதான். ஆதலால் வேதசாஸ்திரம், இராமாயணம், மஹாபாரதம்' பகவத்கீதை இவைகளை நமது மாணவ மாணவிகள் (முக்கியமாக நமது மாணவிகள்) சிரத்தை யுடனும், ஆர்வத்துடனும். சாஸ்திரீக முறையில் படித்துப் பயன்பெற வேண்டியது நிரம்ப அவசியம். அஹிம்சை, சத்தியம் இவைகளே உருவெடுத்துவந்து நமக்கு சுதந்திரம் கிட்டச்செய்த மஹாத்மாவின் பேரருள் கிட்டவேண்டின் நம் நாட்டின் புராதனச் சிறப்பை மறுபடி கொணர்ந்து நிலைநிறுத்தி, அயல் நாட்டார் பலருக்கும் ஓர் கலங்கரை விளக்கமாக நம் நாடு பிரகாசிக்கச் செய்வது ஒவ்வொருவருடைய நோக்கமும் கடமையுமாகும். புத்தமதம், ஜயனமதம், கிறிஸ்தவமதம் இவைகளிலுள்ள உண்மை தத்துவங் களையும், மறைபொருள்களாக நீதி போதிக்கும் தத்துவ கதைகளையும் நம் சிறுவர் சிறுமியர்கள் படித்தறிதல் அவசியம்.

அழகு

"ரவி"

செக்கரின் இன்னொளியைத் திக்கெல்லாம் பூசிவிட்டுச்
சொக்குகின்ற தங்கமெனச் செவ்வானில் நீந்துகின்ற
பரிதியின் நல்லொளியில் பாடுகின்ற தென்னுளம்!
கருகும் பயிர்களையே கண்டுகண்ணீர் வடிக்கின்ற
வானமழை தானும் வழிகின்ற பொன்னிழையால்
காணுகின்ற காட்சியிலே காதலிழையும் கருத்தினிலே!
இருளைக் கிழித்தெழும் இந்துவின் தேற்றத்திலே
கருநீலக் குட்டையிலே கனிந்தசெந் தாமரையதின்
உருத்தெரியும்! பச்சை வயல்களிடைப் பாயும்
சிறுஓடை, அன்னை இயற்கையவள் பச்சைநிறம்
பட்டினிலே வெள்ளியால் கோடிட்ட ஆடையினைக்
கட்டிய பாங்கினையே கண்களுக்கும் காட்டிநிற்கும்!
சித்தம் மகிழச் சிரிக்கின்ற முல்லை மலர்
சுற்றிவரும் வண்டு சுவைத்திடவே தேனூட்டி
நித்தம் மடிந்தாலும் நல்விழியில் தேங்கிநிற்கும்!
தத்தும் தலையுடன் சத்தமிட் டோடுகின்ற
ஆற்றின் அலைகளெலாம் ஆவியை அள்ளுகின்ற
ஆற்றல் மிகு(ம்)இசையை மீட்டுவது பேரழகே

தென்றல் வீணைமீட்டத் தேன்வண்டு பண்ணிசைக்கக்
கன்னலைத் தேக்குகின்ற கன்னிதழ்கள் புன்னகைக்கக்
கடிகமழ் பச்சைக் கரங்களெலாம் பண்ணின்
அடிகேற்ப அசைந்திட வருவத் துடியிடையே
வண்ணமுடன் ஆட்டி வண்டமில் நடனம்பயில்
வன்னக் கொடிகள் வழங்குதடா நல்லழகை!

வேதனை உள்ளத்தில் தேங்கிவிடும் காரணத்தால்
வாதனைமிக அடைகின்ற வாழ்விழந்த ஏழையவன்
மாலைக் கவின்ஒளியை மாந்தியதும் உள்ளத்தில்
கோல இன்பத்தில் கொந்தளிப்பால் செந்தமிழில்
பண்பாடி மாட்டினையே பட்டிக்கு ஓட்டிப்
பெண்ணழகின் பேரின்பைப் பெற்றுவிட எண்ணுகிறான்!

மஞ்சள் வழிமுகமும் அஞ்சுகத்தின் இன்பண்ணும்
கொஞ்சுகின்ற செந்தமிழும் நெஞ்சத்து வேதனையை
மிஞ்சாது கொன்றுவிட மேவுகின்ற உழவன்தன்
நெஞ்சத்தில் சேர்இன்பம் நேரிழையின் அன்பழகே!
கள்ளிப்பால் சொட்டெனவே காணுகின்ற வெள்ளிகள்
துள்ளுகின்ற காட்சியிலே துளிர்க்கின்ற நல்லழகை,

விள்ள முடியுமோ? விரித்துரைக்க முடியுமோ?
அள்ளியவ் வழகை அருந்திடவே ஆசைபடா !

ஏரினைத் தோளேற்றிப் பாரினைப் பண்படுத்தச்
சீருடன் செல்கின்ற செந்தமிழர் தோள்களிலே
அன்னையின் கைவண்ணம் அழகுடனே காணுதடா !
கன்னங் குழியக் கனிமொழி பேசுகின்ற
சின்னக் குழவிகளின் செவ்விதழில் மின்னுகின்ற
வண்ண ஒளியினிலே வாழ்வதுவே பேரழகு !

தாமரைசெறி குளத்தினிலே தண்ணீர் அலையாடி
தேமரைகளைக் குலுக்கிநற் றேன்வடிந் தோடுங்கால்
பாட்டுக் குரலுடன் மாட்டுச் சிறுவர்கள்
கூட்டுக் களிப்பில் குதித்தாடல் உள்ளத்தில்
பேரின்பம் ஊட்டுதல் பாரில் பெருவியப்போ ?
யார்தான் அழகின் விரிவுதனை ஆய்ந்தவர்தாம் ?
வல்லதன் வாழ்வை வயன்கலைக்கே ஈந்ததனால்
கல்லினை முத்தமிடும் சிற்றுளியைப் பண்ணிசைக்கச்
செய்கின்ற சிற்பியவன் சீர்பெருகும் பெண்மையினைச்
செய்துஅக் கல்லில் செதுக்கிவிட்ட காட்சிநம்
உள்ளத்தின் ஆழத்திலே உணர்ச்சியை தட்டிவிட்டுத்
தள்ளாதோ நம்மைத் தனியின்பச் சாகரத்தே !

தூரிகையால் சீலையிலே தீட்டிவிட்ட காட்சியெலாம்
காரிருளினைப் பிளந்துபொற் காட்சிதரும் மின்னலென
உள்ளத்தின் உணர்வினிலே உண்மையான காட்சியினைத்
துள்ளியெழச் செய்திடுதல் துக்கத்தை ஓட்டாதோ ?
மண்ணில் இலாஅழகும் எண்ண விரிவதனால்
கண்களிலே பேரழகாய் காணுதலோர் அற்புதமோ ?
சுழலில் அகப்பட்ட மென்துரும்பின் தன்மையென
அழகிலே சிக்கிவிட்ட என் அகம்மகிழ்வில் சுற்றுதையே !
கத்துகின்ற வெள்ளியலை சித்தமிகவுந் துடிதுடிக்க
முத்தமிடும் பொன்மணலை ! பின்னோடும் வெட்கத்தால் !
மேனி புளகமுற மென்துளிகள் படிந்துநிற்கக்
கான அலைகளின் கன்னலோசை இன்பமூட்டப்
பொன்மணலும் காதலினால் புத்துயிர் பெற்றுவிடும் !
வண்ண அழகிடையே வாழ்கின்ற பேருலகீர்
சிப்பியிலே செம்முத்து சேர்ந்திருக்கும் தன்மையென
எப்பொழுதும் எண்ணத்திலே இயைந்திருக்கும் சீரழகு !
பூக்கின்ற உள்ளத்தில் புத்துயிர் ஊட்டி இன்பம்
தேக்கும் தெவிட்டாத தேறலினை வாய்மடுத்து
என்றும் அழியா இயல்பில் உளம்பொருத்தி
நன்று வாழ்வோம்; வாழ்க அழகு.

ராகங்களைப்பற்றிய சில வரலாறுகள்

ஸ்ரீமான் டி. பார்த்தஸாரதி டி.டி.எஸ்.

கர்நாடக ஸங்கீதம் எனப்படும் நமது மார்க்கம் பலவிதச் சிறப்புக்களை உடையதாக இருந்தபோதிலும் ராகமே அதன் ஜீவநாடி போன்ற அம்சமாகும். ஆதிகாலத்தில் "ஜாதி" என்றும் பிற்காலத்தில் "ராகம்" என்றும் வழங்கிவரும் இந்த அம்சத்தை அடிப்படையாகக் கொண்டே நமது ஸங்கீதம் வளர்ந்து வந்திருக்கிறது. மிகப் பழமை பொருந்திய மதங்க முனிவரின் "பிருஹத்தேசி" முதல், இரு நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட துளஜேந்திரரின் "ஸங்கீத ஸாராம்ருதம்" வரை, நம்முடைய ஸங்கீத கிரந்தங்கள் ஒவ்வொன்றிலும் ராகங்களைப்பற்றிய விரிவான பல அத்தியாயங்கள் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து, நமது ராகங்களிற் சில சுமார் இரண்டாயிரம் வருஷங்களாக சற்றும் மாறுதலின்றி இருந்து வருவதாக அறிகிறோம். நமது ராகங்களைப்பற்றி புராணங்களின் வாயிலாகவும் கர்ண பரம்பரையாகவும் பல வரலாறுகள் வழங்கி வருகின்றன. அவற்றுள் சில மிக ருசிகரமானவை.

புராணங்களில் காணப்படுபவைகளுள், இரு வரலாறுகள் மிகவும் ரஸமானவை. ஒரு முறை நாரதருக்கும் தும்புரு மகரிஷிக்கும் ஸங்கீத விஷயமாக ஒரு வாக்குவாதம் ஏற்பட்டபொழுது, அதில் மத்தியஸ்தம் வகித்த ஆஞ்சனேயர் "குண்டக்ரியா" என்ற ராகத்தை மிகவும் உருக்கமாக ஆலாபனம் செய்யவும், அவர்கள் மூவரும் உட்கார்ந்திருந்த கற்பாறை இளக ஆரம்பித்து விட்டதாக ஒரு புராணக்கதை கூறுகிறது. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் மிகச்சிறிய ராகமாகிய குண்டக்ரியாவை ஹனுமான் ஏன் எடுத்துக்கொண்டார் என்பது விளக்கப்படவில்லை. ஏனெனில் இந்த ராகம் 15ம் மேளகர்த்தாவைச் சேர்ந்த ஒரு சிறு ஜன்ய ராகமாகும். இதனுடைய லக்ஷணங்களை விளக்க தியாகராஜ ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட துரிதகால க்ருதி ஒன்றே ஒன்று தற்பொழுது வழங்கி வருகிறது.

திருவிளையாடற் புராணத்தில் காணப்படும் மற்றொரு வரலாற்றில், மதுரையில் சோமசுந்தரக் கடவுள் தம்முடைய பக்தனும் இசைவாணனும் ஆகிய பாண பத்திரனைக் காக்கும் பொருட்டு ஒரு முதிய விறகு வெட்டியின் வேடத்தைத் தாங்கி, யாழில் "சாதாரி"ப்பண்ணை வாசித்து அவனை எதிர்க்கவந்த ஸங்கீத வித்வானைத் தோல்வியுறச் செய்தார் என்று காணப்படுகிறது.

பழங்காலத்து தமிழ்ப்பண்ணாகிய சாதாரிக்கு நேரான கர்நாடக ராகம் எது என்பதைக் குறித்து அபிப்ராயபேதம் இருந்து வருகிறது. அதைச் சிலர் பந்துவராளியென்றும் சிலர் நீலாம்பரி யென்றும் கூறிய போதிலும், தற்காலத்தில் வழங்கிவரும் தேவகாந்தாரியே சாதாரிப் பண் என்பது ஆராய்ச்சியாளரின் முடிவு.

ராகங்களைப்பற்றிய வரலாறுகளிற் பல, கர்நாடக ஸங்கீதத்தின் தலைசிறந்த வாக்கேயக்காரரும், தமமுடைய கிருதிகளால் சுமார் 250க்கு மேற்பட்ட ராகங்களை அலங்கரித்தவருமான ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி

சலைக் குறித்தே வழங்கி வருவது மிகவும் இயற்கையேயாகும். ஸ்வாமிகள் கீர்த்தனங்கள் இயற்றும்பொழுது "ஸங்கீத ஸமாதி" என்றே விவரிக்கத் தகுந்த ஒரு பரவச நிலையை அடைவதும், அவரது நாவிலிருந்து ராக சித்திரங்களாகிய கிருதிகள் ரத்தினங்களைப் போன்ற பிரகாசத்துடன் வெளிவருவதும் வழக்கம். இவ்விதம் ஒரு நாள் பலஹம்ஸா ராகத்தில் அவர் "தண்டமு பெட்டெனுரா" என்ற கிருதியைக் கவனம் செய்துகொண்டிருக்கையில் அதில் அவர் உபயோகித்த ஒரு பிரயோகம் அவருடைய சிஷ்யர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஏனெனில், பலஹம்ஸா ராகத்துக்கு அந்த ஸஞ்சாரம் இல்லை என்று அவர்கள் எண்ணினார்கள். கீர்த்தனம் முடிவுற்றதும் அவர்கள் மிகுந்த பயத்துடன் தங்களுடைய சந்தேகத்தைக் குருவினிடம் விண்ணப்பித்துக் கொள்ள, அவர் புன்னகையுடன், 'ராகங்களுக்கு 'அகராதியான "கடக"த்தை எடுத்துப் பார்க்கும்படி கூறினார். அவர்களும் அவ்விதமே செய்ய, அந்த ஸஞ்சாரம் அதில் ஸ்பஷ்டமாகக் காணப்பட்டதாம்!

இனிமையானதும், ஸர்வஜன ரஞ்சகமானதுமான ஆனந்த பைரவி ராகத்தில் தியாகய்யரவர்கள் மூன்று கிருதிகளுக்குமேல் இயற்றாமல் இருந்தது டலருக்கும் வியப்பை விளைவித்திருக்கலாம். இதனுடைய காரணத்தை விவரிக்கும் வரலாறு ஒன்று உண்டு. அய்யரவர்களுக்கு சமகாலத்தவராக விருந்த திருபுவனம் ஸ்வாமிநாதய்யர் என்ற வீதி நாடக நடிகர் ஒருவர் ஆனந்த பைரவி ராகத்தைப் பாடுவதில் நிகரற்றவர் என்று பெயர் பெற்றிருந்தார். ஒரு முறை தியாகய்யரவர்கள் தம்முடைய சிஷ்யர்களின் வற்புறுத்தலுக்கிணங்கி ஸ்வாமிநாதய்யரின் கானத்தை மறைவாக இருந்து கேட்பதாக ஒப்புக்கொண்டார். நாடகம் ஆரம்பமானதும் ஸ்வாமிநாதய்யரின் இணையற்ற ஆனந்த பைரவியைக் கேட்டு, தியாகய்யரவர்களே பிரமித்து, கூட்டத்தை விலக்கிக்கொண்டு சென்று நடிகரைத் தழுவிக்கொண்டு பாராட்டினராம். எதிர்ப்பாராமல் தமக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்ட ஸ்வாமிநாதய்யர், தியாகய்யரவர்களை வணங்கி, அவர் அன்றுமுதல் ஆனந்த பைரவியில் கிருதிகள் இயற்றாமலிருந்தால் தம்முடைய புகழ் நிலைத்திருக்கும் என்று வேண்டிக் கொண்டார். தியாகய்யரும் அவ்விதமே ஒப்புக்கொண்டு வாக்குதத்தத்தை நிறைவேற்றினார் என்பது கர்ண பரம்பரையான வரலாறு.

நமது வாக்கேயகாரர்களுள் சிறந்த நால்வரான தியாகராஜ ஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோர் சமகாலத்தவர்களாக இருந்தனர்- அவர்கள் பன்முறை ஒருவரையொருவர் சந்தித்து அளவளாவிப் பழகியிருக்க வேண்டுமென்று பின்வரும் வரலாறுகளிலிருந்து நாம் ஊகிக்கலாம். ஒரு சமயம் கோபாலகிருஷ்ண பாரதியார் திருவையாறு சென்றிருந்த காலை, தியாகய்யரவர்களைக் காணச் சென்றார். இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், அய்யரவர்களின் சிஷ்யர்கள் ஆபோகி ராகத்தில் ஒரு கிருதியைப் பாடிக்கொண்டிருந்தனர். "இந்த ராகத்தில் தாங்கள் ஏதேனும் கிருதி இயற்றியிருக்கிறீர்களா?" என்று பாரதியாரை தியாகய்யர் வினவ, அவர் மறுமொழி கூறாதிருந்துவிட்டு, விடைபெற்றுச் சென்றார். மறுநாட் காலை அவர் அய்யரது இல்லத்துக்குச் சென்று

தாம் ஆபோகி ராகத்தில் இயற்றியிருந்த "சபாபதிக்கு" என்ற கிருதியை தியாகய்யரே மெச்சுமாறு பாடிக் காண்பித்தார்.

"இதைத் தாங்கள் நேற்று ஏன் பாடவில்லை?" என்று அய்யவர்கள் கேட்க, பாரதியார் அக்கிருதியைத் தாம் முதல் நாளிரவுதான் கவனம் செய்ததாகக் கூறினார். தம் சொந்த ஊராகிய மாயவரத்துக்குத் திரும்பிய தம் பாரதியார், தியாகய்யரின் ஒப்பற்ற பஞ்சரத்தினக் கிருதிகளைப் பின்பற்றி, கன ராகங்களில் ஐந்து தமிழ் கிருதிகளை அமைத்தார்.

தர்பாரும், நாயகியும் நெருங்கிய சாயைகளையுடைய ராகங்கள் என்று எல்லோரும் அறிவர். இவ்விரு ராகங்களின் ஸ்வரூபங்களைத் தெளிவாக தமது கிருதிகளின் மூலம் விளக்கி நமக்கு உதவிய பெரியார் தியாகராஜ ஸ்வாமிகளே யாவர். ஒரு முறை ஸ்வாமிகள் திருவையாற்றில் ஸப்தஸ்நான உத்ஸவத்தின் பொழுது ஸ்வாமி ஊர்வலத்தைத் தொடர்ந்து பஜனை செய்துகொண்டு செல்லுகையில் "நீ பஜன, கான" என்ற நாயகி ராக கிருதியைப் பாடவும், அதை உடன் சென்று கேட்டானந்தித்த முத்துஸ்வாமி தீக்ஷிதர், அக்கிருதியில் நாயகி ராகத்தின் தனித்த ஸ்வரூபம் தெளிவாக விளங்குவதையும், தர்பார் ராகத்தின் கலப்பு சற்றுமில்லாமல் இருக்கும் அழகையும் வியந்து அய்யரவர்களை பாராட்டினராம்.

தியாகய்யரவர்கள் எண்ணற்ற, அழகிய புது ராகங்களைத்தமது மேதா விலாசத்தினால் சிருஷ்டித்து அவற்றில் ஈடில்லாத பல கிருதிகளை இயற்றினார். இவை பிற்காலத்தில் தோன்றிய பல வாக்கேயக்காரர்களுக்கு கற்பனைத் துறையில் வழிகாட்டிகளாக அமையவே, அவர்களுட்பலர் புது அபூர்வ ராகங்களைக் கவனம் செய்ய முற்பட்டனர். தியாகய்யரின் நெருங்கிய உறவினரும் சிஷ்யருமான மானம்பூச்சாவடி வேங்கட சுப்பய்யர், ஸ்வாமிகளின் காலத்துக்குப் பிறகு ஒரு சமயம் அபூர்வ ராகம் ஒன்றை சிருஷ்டி செய்ய நினைத்து சங்கராபரண மேளத்தின் ஜன்யமாக "குதூஹலம்" என்ற ராகத்தைக் கற்பனை செய்து அதில் "ஆவரகு" என்ற கிருதியை இயற்றினார். சின்னாட்களுக்குப் பிறகு இப்புது க்ருதியைத் தம்முடைய சிஷ்யர்கள் சாதகம் செய்து கொண்டிருப்பதைக் கேட்க நேரிடவே, அப்பொழுதே அதிலுள்ள பல விதக் குறைபாடுகளை உணர்ந்த வேங்கடஸுப்பையர் வெட்கி "ஸங்கீதத்தில் ஸாரமான பாகங்களனைத்தையும் தியாகு எடுத்து உபயோகித்துவிட்டார். ஸாரமற்ற அம்சங்களை வைத்துக்கொண்டு நாம் சங்கடப்படுகிறோம்" என்று வருந்திக்கூறி, அன்று முதல் அக்கிருதியைப் பாட வேண்டாம் என்று தம்முடைய சிஷ்யர்களுக்கு உத்திரவிட்டார். பிற்காலத்தில், வேங்கடஸுப்பைய்யரின் சிஷ்யரான பட்டணம் ஸுப்ரமண்ய அய்யர் "கதன குதூகலம்" என்ற ராகத்தைக் கற்பனை செய்து "ரகுவம்ச ஸுதாம்புதி" என்ற கிருதியை இபற்றினார்.

கர்நாடக ஸங்கீதத்தின் பொற்காலம் என்று கருதத் தகுந்த கி. பி. 1750–1850 ஆண்டுகளில் ஸங்கீத வித்வான்கள் தனித்த சில ராகங்களை ஆலாபனம் செய்வதில் மற்றவர்களைக் காட்டிலும் சிறந்த வன்மை அடைய வேண்டுமென்று முயற்சித்தனர். அனேக ராகங்களை ஒரே திறமையுடன் கையாண்டிருக்கும் திபாகராஜ ஸ்வாமிகளே சிற்சில

ராகங்களைப் பாடுவதில் சிறந்து விளங்கியதாக அறிகிறோம். இவற்றுள் முக்கியமாக, தம்முடைய குருவின் பிதாவாகிய ஸொண்டி வேங்கட ஸுப்பய்யாவின் இல்லத்தில் சுமார் 8 மணி நேரம் காம்போதி ராகத்தைப் பாடியதையும், சென்னைக்கு விஜயம் செய்திருந்த சமயம் தேவ காந்தாரி ராகத்தை ஆறு நாட்கள் தொடர்ந்து ஆலாபனம் செய்ததைக் குறிப்பிடலாம். நெய்க்காரப்பட்டி பல்லவி சேஷய்யர் என்ற வித்வான் சிறு ராகமாகிய கௌளிபந்துவை மூன்று மணி நேரம் பாடியதாகத் தெரிய வருகிறது. தனி ராகங்களில் பிரசித்திபெற்ற இதர வித்வான்கள், தோடி ஸீதாராமய்யர், தர்பார் ஸீதாராமையர், சங்கராபரணம் நரஸய்யர் முதலியோர் ஆவர். இவர்கள் இந்த ராகங்களைக் குலதனமாகப் போற்றி வந்தனர் நரஸய்யர் ஒரு முறை தம்முடைய சங்கராபரணத்தை ஒரு பிரபுவிடம் அடகு வைத்து ஒரு தொகையைக் கடனாகப் பெற்று, கடன் தீரும் வரையில் அந்த ராகத்தைப் பாடாமலிருந்தாராம். பேகட ராகத்தை மிகுந்த கற்பனைத் திறனுடன் ஆலாபனம் செய்யும் வன்மையைப் பெற்றிருந்த பட்டணம் ஸுப்ரமண்ய அய்யருக்கு "பேகட ஸுப்ரமண்ய அய்யர்" என்றும், நாராயண கௌள ராகத்தில் அவ்விதமே பிரசித்தி பெற்றிருந்த வீணை குப்பய்யருக்கும் "நாராயண கௌளம் குப்பய்யர்" என்றும் விசேஷப் பெயர்கள் வழங்கி வந்தன. ஒரு கச்சேரியில் சக்ரவாக ராகத்தை அஸாதாரணமான திறமையுடன் ஆலாபனம் செய்ததற்காகவே "மஹா" என்ற பட்டம் வைத்திய நாதய்யருக்கு அளிக்கப்பட்டது.

சில ராகங்களைப் பாடியதால் நிகழ்ந்த சில அற்புதங்களை இங்கு குறிப்பிடலாம். அக்பர் சக்கிரவர்த்தியின் சமஸ்தான வித்வானாக விருந்த தான்ஸேன் "தீபக்" என்ற ராகத்தைப் பாடும்பொழுது அதிலிருந்து உண்டான அக்னிஜ்வாலைகளுக்கு இரையானார் என்ற வரலாற்றை இக்காலத்தவர் நம்புவது கடினம். ஆயினும், புதுக்கோட்டை தர்பாரில் தியாகய்யர் தம் இளமைப் பருவத்தில் ஜ்யோதிஸ்வரூபிணி ராகத்தைப் பாடிய பொழுது அரண்மனையிலுள்ள தீபங்களெல்லாம் தானாக எரிய ஆரம்பித்தன என்ற விருத்தாந்தம், இன்னும் சமஸ்தான ஏட்டுச் சுவடிகளில் காணப்படுகிறது. இதேபோல், எட்டயாபுரத்தில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் அம்ருதவர்ஷிணீ என்ற ராகத்தைப் பாடி வெகு காலமாகப் பெய்யாமலிருந்த மழையைப் பெய்யச் செய்தார் என்ற வரலாறும் வழங்கி வருகிறது.

இவ்வரலாறுகளிலிருந்து, சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரை கர்நாடக ஸங்கீதம் எத்தகைய மகோந்நத தசையில் இருந்து வந்தது என்பது விளங்குகிறது. ஆயினும் தற்காலத்தில் சில ஸங்கீத இயக்கங்களால் நடத்தப்பட்டு வரும் த்வேஷப் பிரசாரத்தின் காரணமாக நமது ஸங்கீதத்தின் உயர்ந்த சாஹித்யங்கள் காலப்போக்கில் மறைந்து அவற்றிற்குப் பதிலாக க்ஷுத்ரமான போலி சாஹித்யங்கள் இடம் பெற்று வருகின்றன. இவ்வியக்கங்களின் ஆதிக்கத்தை ஸம்பிரதாயத்தில் சிரத்தையுள்ள அபிமானிகளும் வித்வத் ஸபைகளும் எதிர்க்க முற்படாவிடின், கர்நாடகசுத்தமான ஸங்கீதமே நாளாவட்டத்தில் மறைந்து போய் விடக்கூடும்.

ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி

ஸ்ரீ டி. வி. சீதாராமய்யர்

வரகூர் ஸ்ரீ வேங்கடேசர் த்யானம். ஸ்ரீ நாராயண தீர்த்தர் தன்னையாட்கொண்ட பெருமானை மனமுருகிப் பாடுகிறார்.

ராகம் நாட்டை : தாளம் ஜம்பை

பல்லவி :

ஜய ஜய ரமா நாத

அ. ப.

ஜயஜய த4ரா நாத2—ஜயஜய வராஹபுர ஸ்ரீ வேங்கடேசா
ஜயஜய ||

சரணம் :

(1) நிக3மகோ3சர நித்ய—நிர்மலாநந்த3க4ன
விக3ளிதமஹா மோஹ விமல விக்யா நஹரே
க2க3யான ஸஞ்சார க2ண்டிதாஸுரநிகர
ஸகல கு3ணஸம்பன்ன—ஸக்ய பரிபூர்ண ஜயஜய ||

(2) மது4ஸூத3ந நந்த1—மாயயாக்ருதபு4வன
விது3தி3வாகரநயன—வேதா3ந்த1ப4வன ஹரே
விதி4 முக2ஸுரேந்த்ரனுத —விபுலகல்யாணயுத1
விமலயோகி3த்4யேய—விவித4 முனிகே3ய ஜயஜய ||

(3) முரநரக1ஸம்ஹார—மூட3மதிஜனதூ3ர
பரிஜனசிவங்கர—பராவரசரீரஹரே !
நிரவதி4க காருண்ய—நிகி2லலோகசரண்ய
ஸரஸ நாராயண தீர்த்த2—ஸத்3கு3ருவரேண்ய

பல்லவி

ஸ்ா ஸ் நி பாபா மா		கா ஸா கா மா
ஜ ய ஜ ய ர		மா . . நா . .
கா..............		ஸா ; . கமபநிஸ்ரீ
தா		. . . .

அ. ப.

கா மா பா நீ பா	பா நீ ஸ்ா ; ஸ்ா
ஜ ய ஜ ய த	ரா . . நா தா
நீ ஸா க்ா ; க்ா	ம்ா க்ா ஸ்ா ; ஸ்ா
ஜ ய ஜ ய	... ...
பா நீ ஸ்ா கா் ஸ்ா	ஸ்ா ஸ்நிபா பாபா
வ . . ரா ஹ	புர . . . .
கா மா கா ஸ்ா ஸ்ா	கா . க ம ப நி ஸரி
ஸ்ரீ . . வெங்க	டே சா . . . .

சரணம் :

கா மா பா பா	பா பா பா பா ப.
கி க ம . கோ	ச ர நி . . த்ய
கா மா பா பா	கா மா கா ஸா ஸ்ா
நி ர் . . ம லா . .	ந ந் . . த க ன
கா மா பா மா	க மா க ஸ ஸா
வி க ளி — த ம	ஹா . . மோ . . ஹ
கா மா பா பா மா	பா பா பா பா
வி ம ல வி . .	க் ஞா ன ஹ ரே

அ. ப. மாதிரி பாடவும்

ககயான சஞ்சார கண்டிதாஸுர நிகர
ஸகலகுண ஸம்பன்ன ஸத்யபரிபூர்ண ஜய ஜய ‖

இதர சரணங்களையும் இம்மாதிரியே பாடவும்.

———

பிரிட்டனின் ஜனத்தொகை அதிகரிக்கிறது

பெண்களைவிட ஆண்களே அதிகம் பிறக்கின்றனர்

இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமானது முதல் பிரிட்டனில் அநேக முற்போக்கான சமூக மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஸ்டெஷனரி காரியாலயம் சமீபத்தில் பிரசுரித்துள்ள தஸ்தாவேஜில் இவை நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. உலகிலேயே பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள கடந்த 10 ஆண்டுகளில் பிரிட்டனில் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகள் தக்க புள்ளி விவரங்களுடன் இவ்வறிக்கையில் எழுதப்பட்டுள்ள பிரிட்டனின் சீதோஷ்ணஸ்திதி முதல் தேசிய வருமானம், செலவினம் வரை சகல விஷயங்களும் இவ்வறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

கடந்த 10 வருடங்களில் பிரிட்டனின் ஜனத்தொகை மேலும் 2,250,000 அதிகரித்துள்ளது. பிரிட்டனின் இன்றைய மொத்த ஜனத்தொகை கிட்டதட்ட 5 கோடியாகும். (சுமார் 100 வருடங்களுக்கு முன் பிரிட்டனின் ஜனத்தொகை 2 கோடியேயாகும்). 1846 வருட ஜனனவிகிதம் கடந்த 80 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஆண் குழந்தைகளே அதிகம் பிறந்துள்ளனர்.

பிரிட்டிஷ் மக்களும் முன் பிறந்ததைவிட தற்போது திடகாத்திரர்களாக விளங்குகின்றனர். கைத்தொழில் விபத்துகளின் காரணமாக மிகக் குறைவான மரணங்களே சம்பவித்துள்ளன. சிசுமரணம் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு இருந்ததில் ஒரு பங்கேயாகுமென்றும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அதிகமான மக்கள் தற்போது ஹோட்டல்களில் உணவு உட்கொள்கின்றனர். குடிப்பழக்கமும் யுத்தத்திற்கு முன்யிருந்ததில் அரைவாசியாக குறைந்திருக்கிறது. கடந்த வருடம் மட்டும் 196,000,000 நபர்கள் ஹோட்டல்களில் ஒரு வேளை உணவு உட்கொண்டுள்ளனர்.

அறிக்கையில் கண்டுள்ள 10 வருடங்களின்போது சகல கைத்தொழில்களிலும் சராசரி வார வருமானம் இரு மடங்காக உயர்ந்துள்ளது. தற்போது தொழிலாளர்களின் சராசரி

வார வருமானம் ரூ. 72-1-9 ஆகும். ஆண்களின் வார சராசரிச் கூலி ரூ. 85-6-2 ஆகும். கைத்தொழில் சச்சரவுகளின் காரணமாக கடந்த வருடம் வீணான வேலை நாட்கள் 1938 வருடத்தைவிட மிகக் குறைவானதாகும்.

இதர நாடுகளில் ஏற்பட்டுள்ளதைப் போலவே பிரிட்டனிலும் விலைவாசிகள் உயர்ந்துள்ளன. 10 வருடங்களுக்கு முன் பிரிட்டனில் வருடமொன்றுக்கு ஒரு லக்ஷம் பவுன்களுக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் 108 நபர்களாகும். ஆனால் இன்று 55 நபர்களே உள்ளனர். இதற்குமாறாக வருடமொன்றுக்கு 250—500 பவுன் சம்பாத்தியம் உள்ளவர்களின் எண்ணிக்கை 2 லக்ஷத்திலிருந்து 6,500,000 யாக அதிகரித்துள்ளது.

கால்நடை உற்பத்தியை அதிகரிக்க அரசாங்க நிதி உதவி

பிரிட்டிஷ் விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளை விருத்தி செய்து கொள்வதற்கு அரசாங்க நிதி உதவியும் பெறப்போகின்றனர். இதற்கென அடுத்த நான்கு வருடங்களுக்கு செலவிடுவதற்காக அரசாங்கம் 40 கோடி ரூபாய் மான்யம் வழங்கப்போகிறது. இச்செலவினத்திற்கு சமீபத்தில் வெளியாகியுள்ள விவசாய சட்டத்திலே அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 1947 ஆகஸ்ட் முதல் 1949 அக்டோபர் மாதத்திற்கிடையே பிறக்கும் அங்கீகரிக்கப்பட்ட காளைக்கு ரூ. 53-4-0 யும் அங்கீகரிக்கப்பட்ட கிடாரிக்கு 40 ரூபாயும் பணம் கொடுக்கப்படும். இருந்த போதிலும் விவசாய மந்திரி முடிவு தேதியை 1951 அக்டோபர் மாதம்வரை தள்ளிப்போடலாமென எதிர்பார்க்கப்படுகிறது. கால் நடைகளுக்கான தீவன உற்பத்தியை அதிகரிக்கவும் அரசாங்கம் உதவி செய்துவருகிறது. இதற்கென 2. 13 கோடி ரூ. செலவழிப்பதற்கு விவசாய மசோதா அங்கீகாரம் அளிக்கிறது.

செயற்கை விந்து சேர்க்கை முறைய அபிவிருத்தி செய்வதற்காக 33. 3 லக்ஷ ரூ. செலவில் அரசாங்கம் நிலையங்கள் அமைத்துவருகின்றன. உயர்ந்த ரக கால்நடைகளை உற்பத்தி செய்வதற்கு இந்நிலையங்கள் விவசாயிகளுக்கு இலவசமாக உதவிசெய்து வருகின்றன.

சோவியத் ருஷ்யா கூட்டுறவுக் கடைகள்

காரமடை— கே. நஞ்சயன் (உலகம் சுற்றும் தமிழன்)

ஸோவியத் ருஷ்யாவிலே தேசியப் பொருளாதாரத்திட்டம் சரியான முறையில் வகுக்கப்பட்டுள்ளது. இப்பேர்ப்பட்ட மாபெரும் குழுவினருக்குள் கன்ஸ்யூமர்ஸ் கூட்டுறவுச் சங்கங்களின் (Consumers Co-operative Society) பணி யாதெனில் குடியானவர்களின் உற்பத்திப் பொருள்களை அவர்களிடமிருந்து சேகரிப்பதும், விலைக்கு வாங்குவதுமே ஆகும். இவ்வாறாகக் கூட்டுப் பண்ணைக்கும் (Collective Farms) கூட்டுப் பண்ணைக்காரர்களிடையேயும் (Collective Farmers) மத்தியஸ்தமாக நின்று பணியாற்றி வருவது இச்சங்கத்தார்தான். கூட்டுறவு வியாபாரச் சங்கத்தாருக்கு தொழிலியலுக்கு வேண்டிய மூலப் பொருள்களை அரசியலாரின் வியாபாரச் சங்கங்கள் கொடுத்துதவுகின்றன. பொருள்களை வாங்கவும் விற்கவும் அரசியலார் முன்னின்று சங்கங்களுக்குரிய சகாயநிதி (Grants) கொடுக்கின்றனர். இதைக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற முடிகின்றது.

ஸோவியத் கூட்டுப் பண்ணையாளர்கள் இக்காலத்தில் செல்வாக்காகவும் தங்கள் வாழ்க்கையை நன்னோக்கமாகக் கொண்டு செலுத்தவும் திறமையுடையவர்களாக யிருக்கின்றார்கள். ஸோவியத் கிராமம் வாசனை திரவியங்கள் முதல் இயங்கும் இயந்திரங்கள், கட்டிட சாமான்கள் வரை எல்லா விதமான பொருள்களையும் உற்பத்தி செய்து தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இன்று முன்னணியில் நிற்கின்றது. இஃது கிராமக் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டு கூட்டுப்பண்ணையாளர்கட்குத் தேவையான பொருள்களையெல்லாம் விநியோகிக்கப் படுகின்றது.

ஸோவியத் ருஷ்யாவில் 28,000 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் உள. 170,000-க்கு மேற்பட்ட கடைகளும், அங்காடிகளும், சிறிய விற்பனைச் சாலைகளும், காப்பிக் கடைகளும் உள்ளன. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பல பொருள்களை விற்பனை செய்கின்றன. உதாரணமாக, இயங்கும் இயந்திரங்கள் ((Automobiles) வியவசாய இயந்திரர்கள் (Agricultural Machines) வியவசாயக் கருவிகள் (Agrilcutural Impliments) உரங்கள் (Fertilisers) பாகு படுத்தும் யந்திரங்கள் (Separators) கட்டிடச் சாமான்கள் (Building Materials) மரச்சாமான்கள் (Furniture) காலிதிகள் (Footwares) துணிகள் ஆடைகள் (Clothing) புத்தகங்கள் (Books) உண்மையாகக் கூறுமிடத்து இன்னோரன்ன பல பொருள்களையும் விற்பனை செய்கின்றனர். கூட்டுப்பண்ணையாளர்கள் தங்கள் பண்ணைகளில் விளைவிக்காத உணவுப் பொருள்களையும் கூட்டுறவுச் சங்கத்தாரால் கிராமங்களில் விற்கப்படுகின்றன. கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென அதனதன் இடங்களில் (கிளைகளில்) அவர்களுடைய சொந்த தேநீர் விடுதிகளும், காப்பி விடுதிகளும், போசன சாலைகளும் அமைத்துள்ளனர். தங்கட்கு வேண்டிய சாதனங்கள் (Equipments)

பொருள்களுக்காக பெரிய பட்டணங்களில் போட்டி போட்டுக்கொண்டு இச்சங்கங்களை நடத்துகின்றனர்.

கிராமங்களில் விற்கப்படும் பொருள்களோடு கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சங்கத்தார் கூட்டுப் பண்ணையிலிருந்தும் கூட்டுப் பண்ணையாளர்களிடமிருந்தும் விவசாய உற்பத்திப் பொருள்களை வாங்குகின்றனர். இந்த விதத்தில் கூட்டுப்பண்ணையாளர்கட்குத் தங்கள் நேரத்தை வீணுக்காதவாறும் அவர்கட்குத் தொந்திரவு, கஷ்டங்கள் கொடாமல் மிதமிஞ்சிய உற்பத்தி வகைகளை விற்பனை செய்வதில் உதவியாக இருக்கின்றவர் இச்சங்கத்தாரேயாவர்.

1946-ம் ஆண்டதனில் ஸோவியத் அரசியலார் கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சங்கங்களின் சில்லரை வியாபாரங்களையும் பட்டணங்களில் விஸ்தரிக்க முனைந்தது. எனவே இந்த நல்ல யோசனைக்கிணங்க நன்கு சேகரிக்கப்பட்ட களஞ்சியமான சாலைகளை 'அகில ஐக்கிய கன்ஸ்யூமர்ஸ் கூட்டுறவுக் குழுவினர், (All-Union-Consumers' Association) (இஃதினையே ருஷ்யமொழியில் சென்டிரோஸோயுஜ் (Centro Soyuz) எனக்கூறுவர்) என்ற பெயரால் தேசத்தின் பல சுறுசுறுப்பான தொழில் பட்டணங்களில் (Industrial Towns) ஏற்படுத்தப்பட்டன. இந்தக் கடைகளில் வியவசாய உற்பத்திப் பொருள்கள் மாத்திரம் விற்கப்படுகின்றன.

ஸோவியத் யூனியனில் எல்லாவிதமான தொழில் உற்பத்திப் பொருள்கட்கும் (Industrial Commodities) விவசாய உற்பத்திப் பொருள்கட்கும் (Agricultural Commodities) உரிய சில்லரை விற்பனை விலைகளை அந்த தேசம் பூராவுமே ஒரே விலையாக ஏற்படுத்தி அத்தேச மக்களுக்கு சர்க்கார் தொழிற் சங்கங்களின் வாயிலாகவும் விற்கின்றனர். இதைத்தவிற 'கூட்டுப்பண்ணைச் சந்தை' (Collective Farm Market) களும் உண்டு. இவற்றிலே கூட்டுப்பண்ணையாளர்கள் தங்கள் மிதமிஞ்சிய உற்பத்திப் பொருள்களை விற்பார்கள். இவ்விதச் சந்தைகளில் உள்ள விலைவாசிகள் ஏறக்குறைய அரசாங்கம் விதித்துள்ள விலைக்கு ஒட்டியேயிருக்கும். ஆனால் கூட்டுறவுக் கடைகளில் (Co operative Store) அமுலில் இருக்கும் விலைவாசிகள் அநேகமாக எல்லாப் பொருள்கட்கும் (Products) அரசியலார் விதித்துள்ள விலைக்குச் சரியாகயிருக்கும். வெகுவாக அவ்விலைகளினின்றும் குறைத்தே விற்கப்படுகின்றன. முக்கியமான பெரும் போருள்கள் அரசியலாரின் கையிலேயேதான் இருக்கின்றன. அவற்றை அரசியலாரின் தொழிற் சங்கங்ளைக் கொண்டு குறிப்பிட்ட விலைக்கு விற்கிறுர்கள். இவ்வாருக, கூட்டுறவுப் பண்ணைச் சந்தைகளிலும், கூட்டுறவு ஸ்டோர்ஸ்களிலும் விலையைக் குறைக்கவே அரசாங்கம் வெற்றியியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் பாட்டாளிமக்களுக்குப் பெரும்பாடுபட்டு வருகின்றது.

எவ்வாறு கூட்டுறவுச் சங்கங்கள் பொருங்களைக் குறைந்த விலைக்கு விற்கிறுர்கள். அவர்கள் அவ்விதம் ஏன் செய்ய முடிக்கின்றது? என்றுல் அவர்களுக்கு நேரடியாக விவசாய உற்பத்திப் பொருள்களை கிராமாந்தி

ரங்களில் நேரடியாகக் கூட்டுப் பண்ணையாளர்களிடமிருந்து வாங்கிக் கொள்ள அரசாங்கம் அனுமதித்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தங்களுடைய ஆட்களும் தங்களின் சொந்த வாகன வண்டி வசதிகளும் உள்ளன. எந்த இடங்களில் மார்க்கட் நிலவர விலை (Market Price) க்குக் குறைவாக உள்ளதோ அவ்விடங்களிலிருந்து பொருள்களை வாங்கிக்கொள்ள வழிகள் உண்டு. இவை பெரிய பட்டணங்களில் உள்ள அரசாங்க வியாபாரச் சங்கங்களுடன் வெற்றியுடன் போட்டி போட முடிகின்றது.

வாங்கப்படும் விளைபொருள்களில் முக்கால் பங்கும் கூட்டுறவுச் சங்கத்தாரின் தொழிற்சாலைகளிலும் இயந்திர சாலைகளிலும் பக்குவமாக நல்ல பொருள்களாகத் தயாரிக்கப் படுகின்றன. மற்றும் சில தொழிற் சாலைகள் உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்தி டின்களில் அடைத்துத் தயாரிக்கின்றன. இன்னும் சில, வீட்டுக்கு வேண்டிய பித்தளைப் பாத்திரங்களை (House Hold Utensils) தயாரிக்கின்றன. இஃதல்லாது மரக்சாமான்கள், வண்டிகள், அடுப்புகள், தட்டுமுட்டுச் சாமான்கள், (Crockery) விளையாட்டுச் சாமான்கள் (Toys) முதலியன செய்யப் படுகின்றன. மத்திய கூட்டுறவுக் கழகத்தில் அதாவது செண்டிரோ ஸோயுஜில் (Centrosoyuz) இவ்விதமான 25,000 தொழிற்சாலைகள் உள.

கூட்டுறவு வியாபாரத்திற்கும் அரசியல் வியாபாரத்திற்கும் வித்தியாசம் பார்க்கும் போது ஸோவியத் வட்டாரங்களில் உள்ள முறைகள் பொது உடைமையை அடிப்படையாகக் கொண்டதாகும். முதலாளித்வத்தினின்றும் எல்லா வகையிலும் வேறுபட்டதே ஸோவியத் சனங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதே முக்கிய நோக்கமாகக்கொண்டு அதிக லாபத்தை எதிர்பாராது, மிகக்குறைந்த விலைக்குப் பொருள்களை விற்பதும், பொருளின் தரத்தை உன்னத மாக்குவதுமே நன்னோக்கமாகக்கொண்டு ஒழுங்குபெற நடத்துவதற்கென ஸோவியத் வியாபாரச் சங்கங்கள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டு நடத்தப் படுகின்றன. போட்டி யெனப்படுவது உண்மையாகப் போட்டியே யல்ல. ஆனால், தொழிலாளர்களை உற்சாகப் படுத்துவதற்காகவேதான் இவ்வாறு வகுத்துள்ளனர்.

கன்ஸ்யூமர்ஸ் கூட்டுறவுச் சங்கம் அநேகமாக பொதுஜன ஆதரவு கொண்டதும் சுயேச்சையானதும் ஆகும். அங்கத்தினர்களினின்றும் (Members) நிர்வாகக் கமிட்டி (Management Committee) யையும் தணிக்கைக் கமிஷன் (Auditing–Commission) தேர்ந்தெடுப்பர். நிர்வாகக் குழு (மானேஜ்மெண்ட் கமிட்டியார்) தொழிலாளர்களை நியமித்துச் சங்கத்தின் பூரா வேலையையும் கவனிக்கின்றனர். ஓர் மாவட்டத்தின் (District) எல்லைக்குள் உள்ள கன்ஸ்யூமர்ஸ் கூட்டுறவுச் சங்கங்களின் ஐக்கியத்தை (Union) ஒவ்வோர் மாவட்டத்திற்கும் தனித்தனி ஐக்கியச் சங்கம் (District Union of Consumers Co-operatives) ஏற்படுத்துவர். பின்னர் பல ஜில்லாக்களின் யூனியன்கள் கொண்ட தனித்தனி வட்டார யூனியன்கள்–(Regional Unions) ஏற்படுத்துவர். அதற்கடுத்தபடியாக வட்டார யூனியன்கள் யாவும் சேர்ந்து ஒரு குறிப்

பிட்ட பொதுசன (Republic) யூனியன் ஏற்படுத்துவர். இவ்வாறாக ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய சங்கங்களை யெல்லாம் இணைத்து சென்டிரோ ஸோயுஜ் (Centrosoyuz) தான் நிர்மாணிக்கின்றது. ஸோவியத் யூனியனில் கூட்டுறவாளர்களின் எந்த மேல்பதவியும் (Leading Post) வாக்களித்துத் தேர்ந்தெடுத்து (Elective) நிர்வகிக்கின்றனர்.

என்னே ஸோவியத் நாட்டின் முன்னேற்றம்! கூட்டுறவு இயக்கம் ஓங்குக! இனி நம் சுதந்திர இந்திய நாட்டிலும் இஃதே போல் இந்நாளில் அனுசரித்து நிர்மாணித்தால் கூட்டுறவு இயக்கம் நாலுலட்சம் கிராமங்களிலும் முன்னேறுவதோடு பசிப்பிணி நீங்கி, தொழிலுயர்ந்து இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவும் ஒவ்வொருவருக்கும் இருப்பதுடன் தேசம் செழிப்புற்று மிளிரும்.

வேனில் கால விடுமுறைப் பள்ளிக்கூடம்

பள்ளிக்கூடம் என்று தலைப்புதான். உண்மையில் அது விளையாட்டுக்கூடம்.

ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் ஜில்லாவைச் சார்ந்த தொழிற்சாலைப் பிரதேசத்திலிருந்து சுமார் 2000 குழந்தைகள் சென்ற ஆண்டு இந்தப் பள்ளிக்கூடத்திற்கு வந்தனராம். தலைவலி கொடுக்கும் கணக்குப் பாடம், வயிற்றைக் கலக்கும் க்ஷேத்ர கணிதம், கண் வலிகொடுக்கும் கலைப் புத்தகங்கள் ஒன்றும் கிடையாது. அவற்றிற்குப் பதிலாக நாட்டியம், பாட்டு, களிமண்ணால் பதுமைகள் செய்தல், கிரிக்கெட், கால் பந்து, சித்திரக்கலை முதலிய பாடங்கள்.

இரண்டு வயதிலிருந்து பதினைந்து வயது வரையுள்ள குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வந்தனர். சில குழந்தைகள் தம் சகோதர சகோதரிகளுடன் வந்திருந்தனர்.

பெரிய குழந்தைகள் காலையில் மைதானத்தில் விளையாடி விட்டு சாப்பிட்ட பிறகு அமைதியாகப் படித்துக் கொண்டோ அல்லது சித்திரம் வரைந்து கொண்டோ இருந்தனர்.

சரீரப் பயிற்சியாளர்களும் சித்திரக்கலா நிபுணர்களும் குழந்தைகளுக்குப் பயிற்சி யளிப்பதைத் தமது விடுமுறையாகக் கொண்டனர்.

அந்த வசதி ஏற்பட்டிராவிடில் இந்தக் குழந்தைகள் சாக்கடை நீரில் கப்பல் விட்டும், சாலைப்புழுதியில் கோலியாடியும் தமது காலத்தை வீணாக்கியிருப்பார்கள். சுதந்தர இந்தியாவின் குழந்தைகளுக்கும் இந்த பாக்கியம் கிடைக்குமா?

சிறுவர்களுக்கு:

அகராதி

சிறுவர்களுக்கு ஓர் விளையாட்டு

(கிருஷ்ணு)

அப்பா ஒரு பெரிய அகராதியைப் புரட்டிக்கொண்டிருந்தார். பல பக்கங்களைப் புரட்டிய பிறகு "இதோ இருக்கிறது," என்று வெற்றிக் குரலில் சொன்னார்.

அப்பா செல்லம் ராமேஸ்வரி. 'ராமேஷ்' என்று ஆசையாய்க் கூப்பிடுவார். அப்பா படித்துக்கொண்டிருந்த தடிப் புத்தகத்தைக் கண்கொட்டாமல் பல நிமிஷங்கள் பார்த்துக் கொண்டிருந்தாள் ராமேஸ்வரி.

"அப்பா இந்தப் புத்தகத்தை எழுதியவர் ரொம்ப ரொம்ப படித்தவராக இருக்கவேண்டும்!" என்று சொன்னாள்.

"ஆமாம், அம்மா, ரொம்பப் படித்தவர்தான். ஆனால் அகராதிகளில் பல ரகங்கள் இருக்கின்றன. உன்னைப்போன்ற சிறு பெண் கூட ஒரு அகராதி எழுதலாம்," என்றார் அப்பா.

அப்பா எப்பொழுதுமே தமாஷாகப் பேசுவார். இப்பொழுதுகூட அவர் தன்னை நையாண்டியடிக்கிறாரோ என்று ராமேஸ்வரி நினைத்தாள். ஆனால் அவர் கண்களில் வழக்கமாகத் தோன்றும் குறும்புப் பார்வையைக் காணவில்லை.

"நானா, அப்பா, எனக்கு அகராதி எழுதக்கூடிய அளவு தெரியாதே. நீங்கள் எதைச் சொல்கிறீர்கள் அப்பா?" என்று கேட்டாள்.

"என் ரமேஷ் சமத்துக் குட்டியாச்சே, இதோ பார். சில வார்த்தைகளைச் சேர்த்தால் அவை ஏதாவது ஒரு பொருளைக் குறிக்கும். உதாரணமாக ஒரு நாய் அகராதி என்று வைத்துக்கொள். (எங்கள் நாய்—சான் உள்ளே நுழைந்துகொண்டிருந்தது) "கிழி," "உடை," "தாத்தாக் காரைத்துரத்து" இந்த வார்த்தைகள்........"

அப்பாவைப் பேசி முடிக்க விடவில்லை.

"ஓ எனக்குத் தெரியுமே. இதை எல்லாம் சேர்த்தால் 'வசவு' என்று அர்த்தம் கொள்ளலாம்" என்று இடைமறித்து ரமேஷ் சொன்னாள்.

"நான்தான் முதலிலேயே நீ சமத்துக்குட்டி என்று சொல்லிவிட்டேனே. எங்கே நீ ஒரு அகராதி எழுதிண்டு வா, பார்க்கலாம்," என்று உற்சாகப்படுத்தினர் அப்பா.

நானும் ரமேஷுடன் சேர்ந்து கொண்டேன். அவனுக்குக் கிடைக்கும் பரிசில் எனக்கும் பங்கு கிடைக்குமல்லவா?

அரை மணிக்குள் நாங்கள் சில வார்த்தைகளை எழுதிக் கொண்டு வந்து அப்பாவிடம் காட்டினேம். "விளையாட்டு, பாடப்படிப்பது, கோயிலுக்குப் போவது, அப்பா சொல்படி நடப்பது—ரமேஷ்" "காலையில் நேரங்கழித்து எழுந்திருப்பது, பல் சரியாய்த் தேய்ப்பதில்லை, பள்ளிக்கூடத்திலும் அப்பாவிடத்திலும் வசவு வாங்குகிறது— கிருஷ்ணு," "மோட்டார் கார், தயிர் சாதம், பால், எரும்புகள், வயிற்றுப்பசி—மகாபலிபுரம் யாத்திரை." "புஸ்தகங்கள், கரும்பலகை, சாக்கு, உபாத்தியாயர்—பள்ளிக்கூடம்" "அப்பா, அம்மா, சான், நல்ல சாப்பாடு, தூக்கம்—வீடு." இவற்றைப் படிக்கும்போது பல இடங்களில் அப்பா சிரித்துக்கொண்டார். எங்களுக்கு தலா இரண்டு பெப்பர்மின்ட் கிடைத்தன.

வருவது வெய்யில் காலம். புழுதியில் போய் விளையாட முடியாது. ஒரு காகிதமும் பென்ஸிலும் எடுத்துக்கொண்டு, ஒவ்வொருவருக்கும் தோன்றியபடி ஒரு அகராதி தயார் செய்தால்—நல்ல விளையாட்டு.

[இந்த விளையாட்டை ஆடிப்பார்த்து மிகவும் ருசிகரமான ஒரு அகராதியைத் தயார் செய்து அனுப்பினல் குங்குமத்தில், உங்கள் பெயரையும் அகராதியையும் போடுகிறேன்.

—ஆசிரியை]

விடுகதைகளின் விடைகள்

முதற் கேள்விக்கு விடை

1. கபிலை, சிரசு, மாமன், கன்னி.
   பி ர ம ன்
   க லை சி சு மான் கனி

2. ஆதிரை = திரை = அலை
   ஆரை = மதில்
   ஆதி = முதற்கடவுள்

படகுக்காரன்

ஒரு சின்னஞ்சிறிய கிராமம். அதைச் சுற்றி பச்சைப் பசேலென்ற வயல். நடுவில் நாலைந்து வீடுகள். அவ் வீடுகளுக்குப் பின்னால் குடியானவர் வசிக்கும் குடிசைகள்.

கண்ணம்மாளின் குடிசை கடைசியிலிருந்தது. அவள் கூலி வேலை செய்து பிழைத்து வந்தாள். அவளுக்குப் பொன்னனென்றொரு பிள்ளையிருந்தான். அவன் மிகவும் நல்ல பையன். பொய் சொல்லவே மாட்டான். ஒருவருடனும் சண்டை போடமாட்டான். பெரியோர்களிடத்தில் பணிவுடன் நடந்துகொள்வான். எப்பொழுதும் சுறுசுறுப்பாயும் சுத்தமாயுமிருப்பான்.

அவனுக்குப் படிக்கவேண்டுமென்ற ஆசை. கண்ணம்மாளிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். கண்ணம்மாளுக்கும் தன் மகன் படித்தால் நல்லதென்று தோன்றியது.

ஆதலால் அவள் அதற்கிணங்கி பொன்னனை அடுத்த கிராமத்திலிருந்த பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினாள்.

ஐந்து மைல் தூரத்திலிருந்தது அந்தக் கிராமம். நடுவில் ஒரு நதியையும் கடக்கவேண்டும். அது வெய்யில் காலமாகையால் ஆற்றில் ஜலம் வற்றியிருந்தது. நடந்தே போய்வந்தான் பொன்னன்.

மழைகாலம் வந்தது. ஓயாமல் மழை பெய்ததால் ஆற்றில் வெள்ளம் அதிகமாயிருந்தது. நாளுக்கு நான் கணு கூலி கொடுத்துப் படகில்போய்வந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் மாலை பொன்னன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்துக்கொண்டிருந்தான். வழியில் ஒரு பையன் அழுதுக்கொண்டிருப்பதைப் பார்த்தான். பொன்னனுக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. அவனருகில் சென்று 'பையா! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான்.

அந்தப் பையன் அழுகையை நிறுத்தி "எங்கம்மாவுக்கு இரண்டு நாட்களாய் சுரம். வேலைக்குப் போகவே

யில்லை. ஆதலால் எனக்குச் சாப்பாடுமில்லை. பசி பொறுக்க முடியாமல் பலரிடம் பிச்சை கேட்டேன். அவர்கள் என்னை அடித்துத் துறத்திவிட்டார்கள். அத ஞல்தான் அழுதுகொண்டிருக்கிறேன்'' என்முன்.

அவன் சொல்வதைக் கேட்டு பொன்னனுக்கும் அழுகை வந்துவிட்டது. ''ஒரு வேளை உணவில்லாவிட்டால், பசி பொறுக்க முடியவில்லையே, இரண்டு நாட்களாய் உணவில்லாமல் அவன் எப்படியிருக்கிறுன்'' என்பதை நினைக்க அவன் தலை சுற்றியது. ''எப்படியாவது அவன் பசியை ஆற்ற வேண்டும்'' என்று நினைத்தான். அவன் கையிலோ போவதற்கு மாத்திரம் வேண்டிய இரண்டணுக்களே இருந்தன அதைக் கொடுத்துவிட்டால் அவன் ஊர்ப்போய்ச் சேர முடியாது. என்னசெய்வதென்று தெரியாமல் வெகு நேரம் வரையில் யோசித்துக் கொண்டிருந்தான்.

''அறஞ்செய விரும்பு'' என்ற ஔவைப் பாட்டை அன்றுதான் படித்தான். ''தருமம் தலைகாக்கும்'' என்று அவன் வாத்தியார் சொன்னதையும் கேட்டான். சரி, இப்பொழுது கையிலிருப்பதைக் கொடுத்தால் கடவுள் எப்படியும் ஒரு வழி காட்டுவார் என்று அவனுக்குத் தோன்றியது.

அந்த இரண்டணுவுக்குத் தோசை வாங்கி அந்தப் பையனுக்குக் கொடுத்தான். பையன் பசி தீர்ந்து மகிழ்ச்சியுடன் விளையாடப் போய்விட்டான்.

பொன்னன் ஆற்றைக் கடப்பதெப்படி? படகுக்காரனிடம் போய் ''நாளைக்குக் கூலி கொடுத்து விடுகிறேன் இப்பொழுது கடனுக்கு படகு விடுவாயா?'' என்று கேட்டான். படகுக்காரன் அதற்கு சம்மதிக்கவில்லை. மாலை வெகுநேரமாய்விட்டது. தன் தாய் தன்னைக் காணுமல் என்ன வருந்துவாளோ என்ற கவலை தான் பொன்னனுக்கு பெரிதாயிருந்தது.

ஆற்றங்கரையிலிருந்த அரசமரத்தருகில் நின்றுக் கொண்டு, ''கடவுளே உன்னை எல்லோரும் நல்லவனென்று சொல்லுகிருர்களே, ஏழைகளிடத்தில் உனக்கு அதிக அன்பென்று இன்று காலையில்தானே வாத்தியார் சொன்னுர். நான் உன்னை நம்பித்தானே இரண்டணுவை அந்தப் பையனுக்குக் கொடுத்தேன். அந்தப் பொல்

லாத ஓடக்காரனே என்னை நம்பமாட்டேனென்கிருனே. நான் எப்படி ஊர்ப்போய்ச் சேருவேன். எனக்கு ஒரு இரண்டணு தரமாட்டாயா?'' என்ருன்.

வெகுநேரம் வரையில் கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டே நின்றிருந்தான். நன்ருய் இருட்டிவிட்டது. அங்கு மனித நடமாட்டமே யில்லை. பொன்னனுக்கோ கோபமும் அழுகையும் வந்தது.

''இறக்கமற்ற கடவுளே! நீ ரொம்ப நல்லவனென்று எல்லோரும் சொல்லுகிருர்களே! அது முழுப் பொய். உனக்குக் கொஞ்சங்கூட இரக்கமில்லை. இருந்தால் நான் இத்தனை நேரமாய்க் கூப்பிடுவதற்கு ஏனென்று கேட்கமாட்டாயா? நீ ரொம்ப மோசக்காரன்'' என்று சொல்லிக்கொண்டே அழுதான்.

''ஏனப்பா அழுகிருய்'' என்ருெரு குரல் கேட்டது. திரும்பிப் பார்க்க அங்கொரு மனிதன் நின்றிருந்தான். அவனைக் கண்டதும் பொன்னனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. அழுகையை நிறுத்திக் காரணத்தை அவனிடம் கூறினுன்.

அவன் சிரித்து, ''இதற்காகவா அழுகிருய். நானும் ஒரு படகுக்காரன்தான். நான் ஊரில் கொண்டுபோய் விடுகிறேன் அழாதே'' என்ருன்.

பொன்னன் சந்தோஷப்பட்டு ''நீ ரொபப நல்லவன். என் வீட்டுக்கு வா! எங்கம்மாவிடம் சொல்லி உனக்குக் கூலியும் பட்சணங்களும் வாங்கித் தருகிறேன்'' என்ருன்.

''அதற்கென்ன அப்படியேயாகட்டும், நீ படகிலேறிக் கொள்'' என்ருன் அந்த மனிதன். பொன்னன் குதித்துக் கொண்டு படகிலேறினுன். ஐந்து நிமிடங்களில் ஆற்றைக் கடந்தான்.

படகுக்காரன் தன் படகைக் கரையில் வைத்துவிட்டுப் பொன்னனுக்குத் துணையாகச் சென்ருன். பொன்னன் வீட்டுக்குள் ஓடி அம்மாவிடம் நடந்ததைச் சொன்னுன். அவள் சந்தோஷப்பட்டு கை நிரப்ப பலகாரங்களும், கூலியும் எடுத்துக்கொண்டு வாசலில் வந்து பார்க்க அந்தப் படகுக்காரனைக் காணவில்லை அவனைத் தேடிக்கொண்டேயிருக்கிருன் பொன்னன்.

விடுகதைகள்—குமாரி சந்தணமேரி

1. பசுவின் பெயர், தலையின் பெயர், மாதுலன் பெயர், கலியாணமாகாத பெண்ணின் பெயர்.

இவைகளை எழுதுங்கள்.

அவைகளின் நடு எழுத்தை எடுத்துச் சேர்த்தால், நான்முகனின் பெயர் வரும், நின்ற, எழுத்துக்கள் எவைகளைக் குறிக்கின்றனவென்று கண்டுபிடியுங்கள்.

2. முதலெழுத்தில்லாவிட்டால், அலையின் பெயர், இடை எழுத்தில்லாவிட்டால் மதிலின் பெயர், கடையெழுத்தில்லாவிட்டால் முதற்கடவுளின் பெயர். கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

3. அரசு, சங்கு, நகர், அநாதி, சுதன், கன்னி. இப்பெயர்களில் ரங்கநாதனைக் கண்டுபிடியுங்கள்.

4. குமாரி, காசினி, பாலாறு, தாமரை, துணிவு. இவைளில் மாசிலாமணி இருக்கிருரா? பாருங்கள்.

பிரிட்டிஷ் டெலிவிஷன்—உலகிலேயே முதன்மையானது

சமீபத்தில் அமெரிக்க டெலிவிஷன் முறைகளை ஆராய்ந்தறிந்த பின் பிரிட்டன் திரும்பியுள்ள டெலிவிஷன் அதிபரான நார்மன் காலின்ஸ் "முக்கியமான இந்த இளந் தொழிலில் இன்று பிரிட்டனே முதற் ஸ்தானம் வகித்து வருகிறதென"க் கூறுகிருர். லண்டன் நியூஸ்கிராணிகள் பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் அவர் கூறுவதாவது:

"டெலிவிஷன் துறையில் பிரிட்டன் உலகிற்கே வழி காட்டுகிறதென்பதைக் கண்டு நான் சந்தோஷமடைகிறேன். பிரிட்டிஷ் டெலிவிஷன் செட்டுகளில் கிடைக்கும் தீர்க்கமான படங்களும், வால்யூமும் வேறு எந்த செட்டிலும் கிடைப்பதில்லை. அத்துடன் விற்பனை வரியுட்பட பிரிட்டிஷ் டெலிவிஷன் செட்டுகளின் விலை அமெரிக்க செட்டுகளைவிட மிகக் குறைவானதென்பதையும் நான் அமெரிக்க சுற்றுப் பிரயாணத்தில் அறிந்தேன்."

நியாயமான காலத்திற்குள் பிரிட்டனிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒரு டெலிவிஷன் செட் இருக்குமென மிஸ்டர் காலின்ஸ் திடமாக நம்புகிருர். பெரிய டெலிவிஷன் நிலையங்கள் அமைப்பதன் மூலம் இது சாத்தியமாகுமென அவர் கூறுகிருர்.

வசீகரம்

குமாரி சியாமளா

"ரதி யாட்டம் பெண்டாட்டி யிருக்கச்சே இந்தப் பட்டுக் கிடப்பான் கன்னங்கரேலுன்னு ஒட்டிப்புளி யாட்டம் இருக்கறவளே சுத்திண்டு அலையருனே. இது என்ன கோலண்டி" என்று தோள்பட்டையில் அத்தை இடித்துக் கொண்டாள். இந்த செய்கை என் சிந்தனையைத் தூண்டிற்று. அத்தை பத்மாவின் கணவனைத்தான் தூஷித்துக் கொண்டிருந்தாள். பத்மா நல்ல சிவப்பு, மூக்கும் முழியும் நன்ருகத் தானிருக்கும். ஆனல் அவளால் தன் கணவனை வசீகரிக்கமுடியவில்லை.

ஒரு ஆக்கில புத்தகாசிரியர் " வசீகரம் தான் பெண்மையின் பலம்; ஆணுக்கு தேக பலம் தான் வசீகரமளிப்பது என்று எழுதியிருக்கிருர். பெண்களின் வசீகரம் செப்பிடு வித்தைக்காரன் மந்திரம் போன்றது. ஒவ்வொரு செயலாக வித்தையைப் பிரித்து அலசிப் பார்த்தால், மந்திரச் சக்தி மறைந்து தந்திரத்தின் கோர்வை பிரதி பலிப்பது போல், பெண்ணின் வசீகரமும் ஒவ்வொன்ருகப் பிரித்து ஆராய்ந்தால் பல சிறிய முயற்சிகள் ஒன்று சேர்ந்து பலனளித்திருப்பது புலனுகும். ஆகையால் செயற்கை முறையால் கவர்ச்சி உண்டாக்குவது வெறும் பகல் கனவன்று.

நல்ல தேக சுகமும், உடல் முழுதும் உயிர்த்துடிப்பும் கவர்ச்சிக்கு அஸ்திவாரம் எனலாம். இந்த அஸ்திவாரத்தை உறுதியாகப் போடுவதற்கு ஆகாசம், ஒய்வு, தூக்கம் இவற்றைக்குறித்து சிறிது அறிந்திருக்கவேண்டும் அரிசி, கோதுமை, கேழ்வரகு, உருளைக்கிழங்கு, சர்க்கரை, வெண்ணெய் போன்ற சக்தியளிக்கும் கார்ப்பஹோஜ்ஜனிதங்களும் (மாப்பண்டங்களும்), பால், முட்டை, மீன், இரைச்சி போன்ற ஜீவாணுக்கள் உற்பத்திப் பொருள்களான புரோதங்களும் (Proteins) வளர்ச்சிக்கும், தேகப் பாதுகாப்புக்கும் தொத்து நோய்கள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும் அத்தியாவச்யமாக வைடமின் சத்து நிரம்பிய பழங்களும் காய்கறி பதார்த்தங்ளும் தினசரி ஆகாரத்திட்டத்தில் தேவையான அளவு இருக்கிறதா என ஊகித்தறியும் ஆற்றலிருந்தால்

எல்லோரையும் வசீகரிக்கும் நிலையில் நமது ரூபத்தை நிர்மாணிக்க அடிகோலியாய் விட்டதெனலாம்.

சுகாதாரமும் வனப்பும் கலந்த திட்டம்

அடுத்தபடியாக சரீர வியாயாமத்தில் கவனம் செலுத்த வேண்டும். உட்கொண்ட ஆகாரம் சரியானபடி ஜிர்ணமாகாவிட்டால், அவையே விஷங்களாக மாறிவிடும். சரீரப் பயிற்சி தேகம் முழுதும் இரத்தம் பரவ உதவுவதால் சர்ம வனப்புக்கு உதவும் ஒவ்வொரு அவயவத்துக்கும் சரீரத்தின் ஒவ்வொரு பாகத்துக்கும் உரிய சலனத்தை உண்டாக்கி அவற்றை நல்ல நிலையில் வைத்திருக்க உகந்த தேகப்பயிற்சிகள் வசீகரத்தின் இரண்டாவது முக்கிய தேவையாகும்.

சரீரப் பயிற்சி தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்து வரவேண்டும். காலை, அல்லது மாலை உசிதமான நேரமாகும். ஆகாரம் உட்கொண்ட இரண்டு மணி நேரத்திற்குள் கடினமான தேகப்பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடாது. காலையிலெழுந்தவுடன் வாயைக் கொப்பளித்துவிட்டு ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலம் சாப்பிட்டுவிட்டு பிறகு மலஜல விஸர்ஜனம் செய்து பல் துலக்கிவிட்டு தேகப்பயிற்சி ஆரம்பிக்கலாம். காலையிலெழுந்தவுடன் மலம் கழிக்கும் மிகவும் நல்ல பழக்கத்தை இதன்மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம். இந்த பழக்கமில்லாத ஒரு முக்கிய காரணத்தினாலேயே அநேக இளம் மங்கையர் தமது கவர்ச்சியை இழந்து விடுவதோடு 'கடுகடு'த்த முகத்தோடு 'சிடுசிடு' என்று அருவருப்புண்டாக்கும்படி பேசுவதால் வெறுப்புக்கே பாத்திரர்களாகி விடுகிறார்கள்.

தினசரி அலுவல்களில் தேய்ந்துவிட்ட ஜீவாணுக்களைப் புதுப்பிக்கவும், அயர்ந்துபோன அவயவங்களுக்கு ஓய்வளிக்கவும் நித்திரை உதவுகிறது. தனக்கு தினசரி எத்தனை மணி நேரத்தூக்கம் வேண்டியிருக்கிறதென்பதை ஒவ்வொரு பெண்ணும் தானே பரிசோதனை செய்து தெரிந்துகொள்ள வேண்டும். தூக்கம் தேவைக்கு அதிகமாயிருந்தாலும் சுருசுருப்பற்ற தூங்கு மூஞ்சியைப் போன்ற தோற்றம் ஏற்பட்டுவிடும். குறைவாயிருந்தால் சோர்வுற்ற, ஜீவிதஃமற்ற பார்வை எல்லோரையும் "ஐயோ, பாவம்" என்று பரிதாபப்படச் செய்யலாம். ஆனால்—கவர்ச்சியுள்ள பெண் என்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள்.

தொடரும்.

சுகாதாரக் கல்வி

(தொடர்ச்சி)

(த. ந. ஜீ. ராகவாச்சாரி)

அமெரிக்கா கண்டத்து ஐக்கிய நாடுகளில் சுகாதாரக் கல்வி வெகு சிறந்த முறையில் பயில்விக்கப் படுவதைப்பற்றி பலரும் அறிந்திருக்கமாட்டார்கள். அம்முறையின் முக்கிய அமிசங்கள் பத்தாகும்:

(1) ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் படிக்கும சிறுவர் சிறுமியர்களது நிறை, உயரம் இவைகளை அடிக்கடி அளப்பதற்கான நிராசு அளவுகோல்கள்.

(2) இடைவேளை (மத்தியான்ன) உணவு அனைவரும் சேர்ந்து புசித்தல்.

(3) தேகசவுக்கிய நிலையை வைத்தியர்களைக் கொண்டு பரிசோதித்துக் குறைபாடுகளை நிவர்த்தித்தல்.

(4) ஆகாரப் பொருள்களைப்பற்றிய பாடங்களை கற்பிப்பதற்கான பிரத்தியேக வகுப்புகள்.

(5) ஓய்வு நேரத்தில் சிறு பிள்ளைகட்கு கட்டாய விசிராந்தியும், போஷாக்குக் குறைவால் வருந்துவோர்க்கு அதிகப்படியான சாப்பாடும் கொடுக்க ஏற்பாடுகள்.

(6) பள்ளிக்கூடங்களின் சுகாதார வசதிகள் குன்றாது கவனித்தல்; அப்படி கவனிப்பதற்கும் சிறு குழந்தைகளைக் கவனிப்பதற்குமென்றே நியமிக்கப்பட்டுள்ள தாதிமார்கள்.

(7) வேளாவேளைகளில் (பாடங்கள் பயில்வதை நிறுத்தி) தேகப் பயிற்சிக்கேற்ற வேடிக்கையானபொழுது போக்கு சாதனங்கள்.

(8] பாடங் கற்பிக்கும் உபாத்திமார்களின் தேக ஆரோக்கிய நிலையை இடைவிடாது கவனிப்பதற்கான ஏற்பாடுகள்.

(9) பொது ஜனங்களின் ஒத்துழைப்பை நாடிய ஸ்தாபனத்திய முறை (Strategy) பள்ளிக்கூடத்து சுகாதார நிலையின் விசேஷ குறிப்புகளை பகிரங்கப் படுத்துவதற்கான சாதனங்கள்.

(10) ஜனசமூக சுகாதாரப் பொதுநிலையை அப்போதைக்கப்போது முன்னேற்றமடையும்படி அதிகார பூர்வமாக செய்யவல்ல சட்ட நிருபணங்கள்.

இப்பத்து அமிசங்களும், ஒரே சமயத்தில் நமது நாட்டிலுள்ள எல்லா பள்ளிக்கூடங்களிலும், புகுத்தப்பட்டு அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது சாத்தியமில்லாவிடினும், அவைகளுள் 1, 2, 3, 4, 5, 7, 9, 10 இந்த இலக்கமிட்டவைகளை (நமது கல்வி யிலாகா அதிகாரி

களின் உதவிகொண்டு) நமது பள்ளிக்கூடங்களில் சிறிது சிறிதாக நாளடைவில் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில் எவ்வித இடைஞ்சலாவது, அசௌகரியங்களாவது இருக்க நியாயமில்லை.

முதலாவது: **பிள்ளைகளின் நிறை, உயரம் இவைகளை அடிக்கடி அளத்தல்**:—சிறு குழந்தைகளது தேக ஆரோக்கிய நிலையை சரிவரக் குறித்துக் காட்டவல்ல உபாயம் வருஷத்துக்கு இருமுறை உயரத்தையும், மாதமொருமுறை நிறையையும் அளத்தலேயாம். உயரத்துக்கேற்ற பருமனும் நிறையும் இருத்தல் அவசியம். படிக்கும் ஒவ்வொரு சிறு குழந்தையினது உயரம் நிறைக் குறிப்புகளை அவர்களைக் கொண்டே ஓர் அட்டையில் எழுதி சுவற்றில் மாட்டவைக்கச் செய்வது, அக்குறிப்புகளை ஒருவர்க்கொருவர் பார்த்துப் பேசிக்கொள்வதினால் ஏற்படும் போட்டியும், அக்குறிப்புக்களை குழந்தைகளின் பெற்றோர்கட்கு மாத அபிவிருத்தி யறிக்கைப் பத்திரத்தில் எழுதியனுப்புவதனால் ஏற்படும் மனக்கிளர்ச்சியும், ஆரோக்கிய அபிவிருத்திக்குச் சிறந்த தூண்டு கோல்களாம்.

நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர்களின் உயரம், பருமன், நிறை இவைகள் மாகாணத்திற்கும் மாகாணம் வேறுபடக் கூடியதாயிருப்பதால், பிரதி மாகாணத்திற்குமே பொருத்தமான பிரமாண அளவுத் திட்டத்தை முதலில் ஏற்படுத்தவேண்டும். அவ்வளவு திட்டம் ஒன்று இல்லாத வரையில் பள்ளிக்கூடங்களில் எடுக்கப்படும் அளவு நிறைகளை எத்துடன் ஒப்பிட்டு அதிகம் குறைவு எனபதை யறிவது? வயதுக்கேற்ற வளர்ச்சி உயரம் நிறை குன்றிய சிறுவர் சிறுமிகளை கவனித்து சரியான திட்ட அளவு நிறைகளை யடையும்படி செய்ய, பள்ளிக்கூட அதிகாரிகளும், பெற்றோர்களும், இன்னும் ஸ்வேச்சா சேவகம் செய்யும் சங்கத்தவர்களும் ஒத்துழைத்தல் வெகு அவசியம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் உயரம், நிறை இவைகளைச்சரிவர அளந்து குறித்து வைப்பதற்கான அளவு நிறைக்கோல்கள் கட்டாய உபகரணங்களாகக் கருதப்பட வேண்டும்.

(2) இடைவேளை (மத்தியான்ன) உணவு உண்ணல்.

நமது நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களிலெல்லாம் இடைவேளைச் சாப்பாட்டிற்காக நல்ல வெயில் நேரத்தில் ஒரு மணி ஓய்வு நேரம். மாணவ மாணவிகளனைவரும் மத்தியான போஜன மருந்துவதற்காக விடுகிறார்கள். இந்த நேரத்தில் சிலர் வீடுசென்று திரும்புவார்கள், பலர், தாம் காலையில் கொணர்ந்த கட்டுச் சாதத்தை பள்ளிக்கூடத்து முற்றங்களிலோ, சிற்றுண்டி யுபக்கிரகங்களிலோ, அவசரம் அவசரமாய் விழுங்கிவிட்டு வெய்யிலில் குதித்து விளையாடி வருவதையும் நாம் பார்க்கிறோம். இந்த ஒருமணி நேரத்தில் மாணவர்கட்கும், உபாத்திமாருக்கும் எவ்வித சந்திப்பும் இருப்பதேயில்லை

ஐக்கிய நாடுகளின் பள்ளிக்கூடங்களி லெல்லாம் இவ்விடைவேளை விடுமுறை நேரம் ஓர் பெரிய விசேஷ சம்பவம். பிரதிதினம் நடந்தேறும் இச்சம்பவத்தின காரணமாக பள்ளிக்கூடத்தில் படிக்கும்

குழந்தைகட்கு சுகாதார வாழ்க்கையைப்பற்றி பழக்க வழக்கங்கள் போதிக்கப்படுகின்றன. இளம்பருவத்தில் சுகாதார முறைகளை அனுஷ்டானமூலம் கற்பிக்கவல்ல உயர்ந்த அமிசம் இதுவே. இந்த ஒருமணி நேரத்தில் சிறுபிராயமுள்ள இளைஞர்கள் நாளடைவில் கற்றுக்கொள்ளும் பழக்க வழக்கங்களாவன :—

(1) சாப்பிட உட்காருவதற்கு முன் கைகளை நன்றாகக் கழுவுதல்.

(2) ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமான போஜன பாத்திரங்களையும் நீர் அருந்தும் கோப்பைகளையும் கழுவித் துடைத்து உபயோகிக்கப் பழகுதல்.

(3) தரையில் விழுந்துவிட்ட உணவுத் துண்டுகளைப் பொறுக்கித் தின்னாமல் இருத்தல்.

(4) பக்கத்திலிருக்கும் குழந்தையின் இலையிலிருந்து எதையும் எடுத்துத் தின்னாதிருத்தல்.

(5) உணவை மெதுவாகவும், பற்களால் நன்றாக மென்றும் உட்கொள்ளுதல்.

(6) சுத்தமான ஒற்றாடை (கைக்குட்டை)யை கட்டாயமாக கை, முகம் துடைக்க உபயோகித்தல்.

(7) ஒழுங்காக தவறாமல் தினம் பால்குடித்தல்.

(8) மற்ற குழந்தைகளோடு சண்டையிடாமல், சகோதரத்துவம் கொண்டாடவும், ஏகோபித்து ஒத்துழைக்கவும் கற்றுக்கொள்ளுதல்.

(9) தங்கள் தங்கள் போஜன பாத்திரங்களை எடுத்து போய்க்கழுவி அவைகளை வைப்பதற்கென்று திட்டஞ் செய்யப்பட்டுள்ள அலமாரிகளில் வைத்தல்.

(10) சாப்பிட்ட இடங்களிலும், மேஜைகள் ஆசனப் பலகைகள் மீதும் உணவுத் துண்டுகளை இறைக்காமலிருக்கவும், இறைந்திருந்தால் அப்புறப்படுத்திவிடவும் கற்றுக்கொள்ளுதல். ஈக்கள் மொய்க்காமல் உணவை உட்கொள்ளுதல்.

குழந்தைகளகூட உபாத்தியாயரும் சேர்ந்து சாப்பிடுவதில் குழந்தைகளுக்குப் பேரானந்தம். இவ்விதம், நன்மதியும், நல்வழியும் புகட்டி குழந்தைகளை ஆரோக்கியமார்க்கத்தில் நடக்கச் செய்வதில் உபாத்திமார்கட்கு அளவிலாத் திருப்தி. இந்த ஒருமணி நேரத்தில் கால் மணிக்குமேல் ஆகாரப் பொருள்களைப்பற்றிய விசேஷ குணங்களை லலிதமாயும் மனதில் ஆழ்ந்து பதியும்படியாயும் கதைபோல சுவாரச்யத்துடன் குழந்தைகளுக்கு சொல்லிவைக்கிறார்கள்.

இடைவேளைச் சாப்பாட்டுக்கு வழியில்லாக் குழந்தைகளுக்கு இட்டலி சாம்பார் சரபரா செய்யும் ஒரு நூதன ஏற்பாடு சென்னை நகர விசாரணை சங்கத்து அதிகாரிகள் திட்டம் செய்து சில வருஷங்களாக

நடந்து வருகிறது. ஆனால் எல்லாக்குழந்தைகளும் இதில் சேர்க்கப்படவில்லை. தவிரவும் மேலே கண்ட விதப்படி உபாத்தியாயர்கள் போஜனமுறைகள், போஜனபதார்த்த குண குணங்கள், மற்றும் சுகாதார விதிகள் இவைகளை இந்த இடைவேளை போஜன நேரத்தில் அனுஷ்டான வழியில் புகட்டுவதில்லை.

இடைவேளைச் சிற்றுண்டி அல்லது ஆகாரம் எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் கிண்டர்கார்டன் பள்ளிக்கூடங்களிலும் எல்லாக் குழந்தைகட்கும் கட்டாய முறையில் சரபரா செய்து, உபாத்திமார்கள் போஜனபந்தியில் தலைமைவகித்து, சுகாதார முறைகளைப் போதிக்கும்படி செய்தால் நமது நாட்டுக்கல்வி சீர்திருந்த முறைகளில் முதன்மையானதும் அவசரமுமான அமிசம் என்பது எனது திடமான அபிப்பிராயம். இச் சீர்திருத்தத்தை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அமுலுக்குக் கொண்டுவருவது நிரம்ப பணச்செலவுக்கு ஆகும் என்ற ஆக்ஷேபனைக்குப் பதிலும் கீழே தருகிறேன்.

(1) முதலில் பரீக்ஷார்த்தமாக இம்முறைகளை குறித்த பத்து, இருபது பள்ளிக்கூடங்களில் அமுலுக்கு கொண்டுவந்து அம்முறையில் குழந்தைகள், உபாத்தியாயர்கள், பெற்றோர்கள் காட்டும் ஆர்வம், ஆதரம் இவைகளை சாஸ்திரீக முறையில் கவனமாய் குறித்துவைத்து மற்றைய பள்ளிக்கூடங்களுக்குத் தெரியவைத்தல்.

(2) இம்முறையை யனுஷ்டிப்பதால், குழந்தைகளின் ஆரோக்கிய நிலை, சுகாதாரப் பழக்கங்கள் மனோதிடம், நகரபாலன விஞ்ஞானக் கல்வி, இவை நாளடவில் பெருகி நாட்டின் ஆண்மை உயர்வடையும்! இவ்வுயர்வை ரூபாய் அணா பைசாவில் விலைமதிக்க முடியுமா? இப்பெருமுயற்சியில் பணச்செலவை பொருட்படுத்தாது காரியசித்தி பெறுதல் கல்வி யதிகாரிகளின் கடமையல்லவா?

(3) ஒவ்வொரு குழந்தைக்கும் இடைவேளை போஜனம் சரபரா செய்வதிலும், பால் பண்ணையும்கூட நடத்துவதிலும் ஏற்படக்கூடிய செலவில் ஒரு பகுதியையாவது, (சர்வ ஏழைகள் தவிற) நடுத்தர ஜீவனம் உள்ள பெற்றோர்களும், பணக்கார பெற்றோர்களும் வெகு சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள முன்வருவார்கள். (சர்வ ஏழைகளின் குழந்தைகட்குத்தான் இனமாக இப்பொழுது இடைவேளை போஜனம் சென்னையில் நடந்து வருகிறதே) நடுத்தர அந்தஸ்துள்ள குடும்பங்களின் குழந்தைகளுக்கும், பணக்கார வீட்டுக் குழந்தைகளுக்கும் வீட்டி விருந்து கொடுக்கும் உணவின் கிரயத்தைப் பள்ளிகூட அதிகாரிகளிடம் கொடுக்க பெற்றோர்கள் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் காலை நேரங்களில் அவசரம் அவசரமாகச் சமையல் செய்து சாப்பாடு போடுவதுடன் இடைவேளைச் சிற்றுண்டியும் கட்டி கொடுக்கிற சிரமம் குறைவதில் ரொம்ப திருப்தியடைவார்கள். ஆனால் பள்ளிக்கூடங்களில் கொடுக்கப்பெறும் உணவு, பால் முதலியவை பரிசுத்தமானதாகவும், தேக சவுக்கியத்திற்கும், உடல் வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனையை மட்டும் எதிர்பார்ப்பார்கள். இது நியாயந்தானே!

சுகப்பிரசவம்

மெடிகோ

உலகம் சலியாது ஓடிக்கொண்டேயிருக்கிறது. பெண் வர்க்கம் இந்த சுழற்சி நின்றுவிடாமல் உதவ ஒவ்வொரு கணமும் புது சிருஷ்டிகளை ஈன்றுகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு விநாடியும் பல குழந்தைகள் பிறக்கின்றன. தாய் தன் இனிய துன்பம் நீங்கி இன்பம் மாத்திரம் எஞ்சியதாக எண்ணிக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறாள். பல பெண்களுக்கு பிரசவத்தோடு துன்பம் நீங்கியபாடில்லை. அவர்கள் பொறுமையின் சோதனைகாலம் அதற்குள் முடிவடைந்து விடவில்லை. அவயம் பிரசவத்தின் போது கிழிந்திருக்கலாம். அதற்காகத் தையல் போடவேண்டியிருக்கலாம். அல்லது பிரசவகாலத்தில் போதுமான ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளப்படாததால் ஜன்னி உண்டாகலாம்.

பிரசவ வேதனையை சகிக்கிறார்கள்

பெண்மக்கள் இந்த துன்பத்தைத் தொன்று தொட்டு அனுபவித்து வந்திருக்கிறார்கள். அதில் இன்பத்தையும் அனுபவித்திருக்கிறார்கள். அதற்காக எவ்வளவோ தவங்கிடக்கிறார்கள். அந்த விவரிக்க முடியாத உபத்திரவத்தைப் பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள். அந்த அனுபவத்தை ஆனந்த உணர்ச்சியாக மனித மனப்பாண்பு மாற்றி விடுகிறது. ஆனால் அதே நகச்சுத்து வரட்டும். அவள் உபத்திரவம் பிரசவ வேதனைக்குச் சமானமானதா? இல்லை. ஆனாலும் அந்த நகச்சுத்துக் கட்டியை வைத்தியர் கீறி விடுவதற்கு குளோரோபாரம் கொடுக்காவிட்டாலும் அந்த இடத்திற்காவது உணர்ச்சியில்லாமல் செய்த பிறகுதான் நெருங்க முடியும்.

மனிதப் பிறவிக்கும் ஏனைய ஜீவராசிகளுக்கும் வித்தியாசம். அவைகளுக்குப் பிரசவவேதனை உண்டாவதில்லையா? மனிதச் சிசுவைவிட பலமடங்கு பெரிய குழந்தைகளை மிருகங்கள் பெற்றெடுக்கின்றனவே!

அவைகள் மானிடப் பெண்களைப்போல் கதறுகிற தில்லையே! ஏன்?

பீதியடைவது கூடவே கூடாது

மானிடப் பெண் ஆறறிவுப் படைத்தவள். அவள் காதுகள் அவள் பெண்ணாய்ப் பிறந்தது முதல் பிள்ளைப்பேறு ஓர் துன்பம் நிறைந்த அனுபவம் என்று தொளைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அதை அவள் அவ்வாறே கருதவும் ஆரம்பிக்கிருள். அந்த கருத்திற் கேற்ப அவள் உடல்நிலையும் மாறுகிறது. மற்ற ஜீவ ராசிகளுக்கு இந்த அறிவில்லை. அதனல் அவைகட்கு பிரசவத்திற்கும் மலப்போக்கிற்கும் வித்தியாசம் ஏற்படுவதில்லை.

பிரசவ காலத்திற்கு வெகு நாட்களுக்கு முன்னுலிருந்து, ஏன் கர்ப்பம் தரித்ததிலிருந்தே என்று சொல்லலாம். பெண்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். பிரசவத்திற்கும் மற்ற இயற்கை அலுவல்களுக்கும் சிறிதுகூட வித்தியாசமில்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். கர்ப்பத்திலுள்ள சிசுவின் வளர்ச்சியை எப்படி அவர்களால் மாற்ற முடியாதோ அவ்வாறே அது வெளியேறுவதும் ஒரு இயற்கை அலுவல்தான் என்று மனதைத் திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். கர்ப்பஸ்திரீ எதிரில் எவரும் மற்றப் பெண்கள் பிரசவத்திற்காக பட்ட சிரமங்களை வர்ணிக்கவேக்கூடாது. இப்படி முதலில் மனோபாவத்தை திருத்தியமைத்துக்கொண்டு பிறகு தினசரி 5 நிமிஷ நேரமாவது சவாசனம் அப்பியாசம் செய்து வரவேண்டும். அதாவது சமதரையில் விரிப்பின் மீது படுத்து எல்லா உருப்புக்களையும் தளர்த்திவிடுதல். அவயவங்களை ஒவ்வொன்ருக ஓய்வெடுத்துக்கொள்ளவிட வேண்டும். மனதை நிலைநிறுத்தி ஒவ்வொன்றும் பூர்ணமாய் தளர்ந்திருக்கிறதா என்றும் பரிசோதித்தறிந்து கொள்ளவேண்டும். பிறகு பிரசவ காலத்தில் இதே சூழ்ச்சியைக் கையாளலாம். பிரசவ வேதனையில் முக்கால் பாகத்துக்குக் காரணம் அவயங்களும் உருப்புக

ளும் ஒத்துழையாததுதான். எல்லா அவயவங்களும் தளர்ந்திருந்தால் சிசு வெளியேறுவதில் சிரமமேயிராது.

சுலபமாகச் செய்யலாம்

இது சுலபமான சாதனமானபோதிலும் இதற்குப் பயிற்சி வேண்டும். பிரசவத்தின்போது அருகிலிருப்பவர்கள் புத்திசாலிகளாக இருந்தால் தாய்க்கு உதவி செய்வதில் அவளுக்கு வேதனையில்லாமல் செய்யலாம். தலையிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு அவயவமாக தளர்த்திக்கொண்டே வந்து உடல் முழுதும் பிரசவத்திற்கு தயாராக இருக்கச் செய்யலாம்.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் முதன்முதல் பிரசவ வேதனையைக் குறைக்க மயக்க மருந்து உபயோகிக்கப்பட்டது. மயக்கம் தெளிந்ததும் தாயாருக்குத் தனது குழந்தையைத் தெரிந்துகொள்வதே கஷ்டமாயிருந்தது. பிரசவம் அவ்வளவு சுகமாக ஏற்பட்டுவிட்டது.

மயக்க மருந்து தேவையில்லை

அரசாங்க வைத்தியசாலைகளில் வேறு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்படும் பெண்மக்கள் மயக்க மருந்தின்றி சிகிச்சையளிக்கப்பட்டால் அதைக் கண்டிக்க உலகமே திரண்டுவிடும். உதாரணமாக ஒரு கர்ப்ப ஸ்திரீக்கு பல்வலி காரணமாக பற்களை அகற்றவேண்டியிருந்தால், நோய் தெரியாமலிருக்க மருந்து உபயோகிக்கப்படவேண்டாம் என்று எவராவது சொல்ல முன்வந்தால் அவருக்கு மூளை சிகிச்சைக்கு உடனே ஏற்பாடாகிவிடும். ஆனால் அதைவிடப் பன்மடங்கு அதிக வேதனையைக் கொடுக்கும் பிரசவத்திற்கு ஏன் பாதையைக் குறைக்கவோ மறைக்கவோ மருந்துகள் கையாளப் படுவதில்லை.

நான் அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்றிருந்தபோது ஒருவர் கால் நகம் எடுக்கப்பட வேண்டுமென்று சத்திர சிகிச்சைக்காக வந்திருந்தார். அவருக்கு சிகிச்சையளிக்க முன்வந்த வைத்தியர் மயக்க மருந்தில்லாம

லேயே சிகிச்சையை ஆரம்பித்தார். "ஏனைய்யா நான் வரியா கொடுக்கவில்லை? ஆறு மாதத்திற்கு ஒருமுறை நூறும் ஐம்பதும் அழுகிறேனே. எனக்கு இந்த உபத்திரவத்தை மறைக்க மயக்க மருந்து பெற்றுக்கொள்ளக்கூட உரிமையில்லையா? இதோ பார் நான் வைத்தியசாலையை விட்டுப் போனதும் வரிகொடா இயக்கம் ஆரம்பிக்கப் போகிறேன்" என்று இரைந்தார்.

வாயில்லாப்பூச்சிகளான இந்தியப் பெண்களுக்கு பிரசவகாலத்தில் ஏன் இந்த வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்று கேட்க வாய் வந்துவிடப் போகிறதா?

வேதனையைக் குறைப்பதில் பட்சபாதம் காட்டக் கூடாது

பிரசவவேதனையைக் குறைத்துக் கொள்ளும் உரிமை பணக்காரர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக இருந்துவிடலாகாது. ஒரு நாட்டின் க்ஷேமத்திற்குக் குழந்தைகள் இன்றியமையாதவை என்றால் அந்தக் குழந்தைகளைப் பெறுகிறவர்கள் ஏழையாயிருந்தாலென்ன பணக்காரர்களாக இருந்தாலென்ன? அவளுக்கு நாடு கடமைப்பட்டிருக்கும் வரையில் அவள் வேதனையைக் குறைப்பதில் அசிரத்தையாக இருக்கமுடியாது.

விக்டோரியா மகாராணியின் எட்டாவது திருக்குமரன் லியோபால்ட் இளவரசன் பிறந்தபோது அரசிக்கு டாக்டர் ஜான்ஸ்கோ என்பார் குளோரோபாரம் கொடுத்து சுகப்பிரசவத்திற்கு அடிகோலினர். அதன் பிறகு அவரது கடைக் குழந்தை பியாட்ரிஸ் இளவரசி பிறந்தபொழுதும் அவருக்கு குளோரோபாரம் கொடுக்கப்பட்டது. இயற்கையில் மகாராணிக்கும் மடிப்பிச்சையெடுப்பவளுக்கும் வித்தியாசம் ஏது? இந்த சலுகை எல்லாப் பெண்மணிகளுக்கும் கிடைக்காவிட்டாலும் அவர்கள் வேதனையைக் குறைக்கவாவது மருத்துவப் பெண்களுக்கு பயிற்சியளிக்கப்படலாமல்லவா?

நிலவொளி

ஆ. கிருஷ்ணன், பச்சயப்பன் கல்லூரி

நம் கூட்டாளியான பாட்டாளி, தோளெல்லாம் வலிக்க நாளெல்லாம் பாடுபட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து, பின் களைத்து வீடு அடைவான். தன் இல்லத்தில் உள்ளதை இன்பமுடன் உண்பான். பின் நிலவொளியிலே நிம்மதியாகப் படுத்துறங்குவான். இயற்கை யொளியிலே இன்பம் பருகுவான். குந்தியழ குடிசையில்லா குடிமக்கட்கும், படுத்துறங்கப் பாயில்லா பாட்டாளிக்கும், செயற்கை விளக்கில்லா நம் செம்மல்கட்கும், இயற்கை ஒளி, தண்ணொளி பொருந்திய நிலவொளி தரும் இன்பம் இணையற்றது.

பணத்தைக் கொட்டியளந்து பரவசமடையும் பணக்காரன் மாடமாளிகைக்குள்ளே பல செயற்கை விளக்குகள் அமைத்துச் சிங்காரம் செய்து அதைக் கண்டு ஆனந்திக்கிருன். அதே சமயத்தில் காசைக்கூடக் கண்ணால் பார்க்க முடியாத கடும் உழைப்பாளிகள், இருக்க இல்லமில்லா நம் ஏழைச் சகோதரர்கள், செயற்கை விளக்கில்லா நம் செம்மல்கள் அவ்வியற்கை யொளியிலே படுத்து இன்பமடைவார்கள். செல்வந்தன் தன் மாளிகையில் சிங்காரம் செய்தமைத்த செயற்கையொளியில் காணும் இன்பத்தைவிட நம் பரம ஏழைகள் இயற்கையொளியில் காணும் இன்பம் இணையற்றது. அச்செல்வந்தர்கள்கூட தன் மாளிகையில் அமைத்த செயற்கை விளக்கை விரும்புகின்றுர்களில்லை. இயற்கை யொளியிலே இன்பம்பெற விரும்புகிருர்கள். காரணம் நம் இயற்கையன்னையின் இன்பத் தாலாட்டு.

வழிநெடுக நடந்தே செல்ல வேண்டின் மக்கள் நிலவொளியை விரும்புகிருர்கள். களைப்பின்றி சந்தோஷத்துடன் நடக்கிருர்கள். அந்நிலவொளியிலே அவர்கள் அகமகிழ்ந்து ஆனந்தமுடன் பேசி தன் இருப்பிடத்தை அடைகிருர்கள். இந்நிலவொளி இல்லாமல் இருந்தால் அவர்கள் அவ்வளவு தூரம் சலிப்பின்றி வெகுதூரம் செல்ல முடியுமா? உழவர்களை

எடுத்துக்கொள்ளுங்கள். நிலவொளியிலே ஆனந்தமாக நிலத்தை உழுவார்கள். களைப்பின்றிக் கழனியைப் பண்படுத்து வார்கள். கதிர்கள் அறுவடைக்கு ஆயத்தமானவுடன் பகல வனின் ஒளிக்குப் பயந்து, நிலவொளியிலே அறுவடை செய் வார்கள்.

தமிழர்கள் இவைகளை எல்லாம் சிந்தித்துதான் பெரும் பாலும் விழாக்கள் நடத்தலை பௌர்ணமி தினத்தில் வைத்துக் கொள்கிறார்கள். செயற்கை யொளியிலிருந்து விழா இன்பம் அனுபவித்தலைக் காட்டிலும், இயற்கை யொளியில் இன்பம் பருகி விழாவின் சிறப்பைக் கண்டால் எவ்வளவு சிறந்தது என்பதை அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும்.

குழந்தைகளை எடுத்துக் கொள்ளுங்கள். தன் தாயின் இடுப்பிலே அமர்ந்து ஆனந்தமுடன் நிலவைப்பார்த்து இன்ப மடையும். தாய் உணவை ஊட்டுவாள். குழந்தை ஊட்டிக் கொள்ள மறுக்கும். அப்போது அவ்வன்புத் தாய் நிலவைக் காட்டி குழந்தையின் மனதை நிம்மதிப்படுத்தி நிதானமாக உணவை ஊட்டுவாள்.

உலகமட்கட்கு இவ்வளவு இன்பமூட்டும் சந்திரன் தன் னிடத்திலிருக்கும் களங்கத்தை நீக்கிக்கொள்ள எள்ளள வேனும் முயற்சி எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லையே.

என்னே விந்தை!

நமது நாட்டின் நாகரீக மேம்பாடு அதியற்புத மான உன்னத நிலையை யடைந்திருந்தது. அந் நாகரீகம் திடம் நிறைந்து பகுத்தறிவு மிகுந்து விளங் கியதுடன் ரஸஜ்ஞானம், ஆத்மார்த்தம் இரண்டும் ததும்பி நின்றது. அக்காலத்து இந்திய நாடுதான் நமது சரித்திரத்திலே புண்ணியம் பெருகிய நன்னாடு என்பது பெரியோர் பலரது துணிபு.

கேள்வி—பதில்

சித்திரக்குள்ளி.

ராதை, பிருந்தாவனம், மாம்பலம்.

கேள்வி : எனக்கு வயது 11. நான் ரொம்ப குள்ளம். வகுப்பில் எல்லாரும் என்னை சித்திரக்குள்ளி என்று பரிஹாசம் செய்கிறார்கள். எனக்கு உயரமாக வழி கூறவும்.

பதில் : உயரம் அநேகமாக பெற்றோரைப் பொருத்திருக்கிறது. கால்ஸியம் சேர்ந்துள்ள மருந்துகளைச் சாப்பிடுவதுடன் பிரதிதினமும் காலையில் கேழ்வரகு மால்ட் கஞ்சியும், வாதுமைப் பருப்பு, திராட்சை போன்ற வைடமின் சத்துள்ள ஆகாரங்களை சாப்பிடுவதாலும், உடம்பிற்கு உரம் ஏற்பட்டு உயர ஏது உண்டாகும். நின்ற இடத்திலேயே ஐந்து நிமிஷ நேரம் ஓடப் பழகுவதால் சில குழந்தைகளின் உயரம் விரைவில் அதிகரித்திருக்கிறது. நல்ல டாக்டரைக் கண்டு சில சுரப்பிகள் சத்துக்கள் சேர்ந்த (glandular products) மருந்துகள் சாப்பிட்டுப் பார்க்கலாம்.

நெட்டை ஒடித்தல்

சுசிலா, மதுங்கா, பம்பாய்.

கேள்வி : என் 10 வயதுப் பெண் எங்கிருந்தோ நெட்டை ஒடிக்கும் கெட்ட பழக்கத்தைக் கற்றுக் கொண்டுவிட்டாள். எப்பொழுது பார்த்தாலும் 'படக்கு, படக்கு' என்று விரல்களை ஒடித்துக் கொண்டிருப்பது அருவருப்பாக இருக்கிறது. அதனால் விரல்களுக்கு கெடுதி உண்டாகுமோ என்றுகூட பயப்படுகிறேன். இந்தப் பழக்கத்தை எப்படி மாற்றலாம்.

பதில் : இந்தப் பழக்கத்தினால் விரல்களுக்குக் கெடுதி நேரிடும் என்று நான் நம்பவில்லை. ஆனால் நான்கு பேருடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது "படக்கு, படக்கெ"ன்று நெட்டை யொடிக்கும் பழக்கம் அருவருப்பாகத்தான் இருக்கும்.

இதை மாற்றுவது சுலபம்தான். ஒரு ஸ்கிப்பிங் கயிறு, அல்லது கைகளுக்கு ஓயாத வேலை கொடுக்கும் விளையாட்டு [கழச்சிக்காய், சோழி ஆட்டம்] விரைவில் குணம் காட்டும். குழந்தையின் கரங்களுக்கு சுருசுருப்பான வேலை சதாயிருந்தால் பழக்கம் உடனே மறைந்து விடும்.

"அப்பாவைப் போலிருக்கிறது"

கமலம், போடிநாயக்கனூர்.

கேள்வி: எங்கள் மன்னி சென்னையிலிருந்து என் தங்கை சீமந்தத்துக்கு வந்திருக்கிருள். அவள் குழந்தை ராமுவும் என் குழந்தை மணியும் ஒரே வாரத்தில் பிறந்தவை. இரண்டும் இரண்டு வயதுக் குழந்தைகள். ராமுவால் மன்னிக்கு துளிகூட கஷ்டமில்லை. தன் பாட்டுக்கு விளையாடிக் கொண்டும், சிரித்துக்கொண்டும் இருக்கிருன். மணிக்கு வேற்று முகம் ஜாஸ்தி. அலர ஆரம்பித்தால் ஓயமாட்டான். என் கணவர் நான்தான் மணியைக் கெடுத்துவிட்டேன் என்று வைது கொண்டே யிருக்கிருர். இதற்கு என்ன செய்யட்டும்?

பதில்: முழுத்தவறும் உன்மேலில்லை. குழந்தைகளுக்கு "வேற்றுமுகம்" ஏற்படுவதற்கு தாயார் அநேகமாக பொறுப்பாளிதான். தன் குழந்தையை வேறெவரும் தொடவிடாத தாயார் குழந்தையை ஓரளவுக்குக் கெடுத்துவிடுகிருள். ஆனால் குழந்தைகள் பல குணங்களை பெற்ருேர்களிடமிருந்து பிறவியிலேயே அடைகிருர்கள். மணி தன் பிடிவாதக் குணத்தை தன் தகப்பனரிடமிருந்து அடைந்திருக்கலாம். அவன் வளர்ப்பில் சற்று ஜாக்கிரதையாக இருந்து, பிடிவாத குணத்தை நல்ல வழியில் செல்ல பழக்கிவிட்டீர்களானல் மணி ஒரு திலகமாக விளங்குவான். உமது கணவர் வீட்டிலில்லாதபொழுது அவன் அலரலைச் சகித்துக்கொண்டு அவனை பிறரிடம் பழகவிடுங்கள். உமது கணவரிடம் இதைக் குறித்து பெருத்த விவாதம் நடத்தாமலிருந்தால் சச்சரவு இல்லாமல் தடுக்கலாம். அவர் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டு "சரி அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிடுங்கள். கோடையிடி மறைந்துவிடும். அமைதி நிலவும்.

பசியும் ருசியும்

(அன்னம்)

அன்னம்: ராமேஸ்வரியா? வாம்மா. நோன்பு நூற்ற சிரமம். படுத்துக் கொண்டிருக்கிறேன். நீ நோன்பு நூற்றை யோல்லியோ?

ராம்மஸ்வரி: நோன்பு ஆகிவிட்டது மாமி. சீமையிலிருந்து ஒரு வெள்ளைக்காரர் தன் குடும்பத்துடன் நம் வீட்டில் வந்து இறங்கி இருக்கிறார். அம்மா அவர்களை எப்படி உபசரிக்கிறதென்று பயந்து கொண்டிருக்கிறாள். தங்களிடமிருந்து அவர்களுக்கு சாப்பாடு செய்யும் முறைகள் சிலவற்றை தெரிந்துகொண்டு போகலாமென்று வந்தேன்.

அன்னம்: பேஷாகச் சொல்லுகிறேன். ஆனால் ஒன்று, அவர்களுக்குக் காரமே உதவாது. நமது குடியானவ ஜனங்கள் எப்படி கேழ்வரகு உணவைப் பிரதானமாகக் கொண்டுள்ளார்களோ அதேமாதிரி வெள்ளைக்காரர்கள் கோதுமையைச் சேர்த்துக்கொள்கிறார்கள். இந்த அரிசி பைத்தியம் பிடித்தலைவது நம் குடும்பங்கள்தான்.

ராமேஸ்வரி: அப்படியென்றால் 'பேகரி'யிலிருந்து ரொட்டியும், பிஸ்கோத்தும் வாங்கி வைத்துவிட்டால் போதுமா?

அன்னம்: நம் சாதத்தை உட்செலுத்த குழம்பென்றும், ரஸமென்றும் கரி திநுசுகளோடு சாப்பிடுவதைப் போல்தான் அவர்களுக்கும் பல திநுசுகள் செய்யவேண்டும். அவர்கள் சாப்பாட்டிற்கு விதவிதமான ஜாம்களும், ஸூப்புகளும், கரிகளும் சலாடுகளும் தயார் செய்து கொள்ளுவார்கள்.

ராமேஸ்வரி: இன்று மத்தியானத்திற்கு என்ன சமையல் செய்யலாம் மாமி.

அன்னம்: உருளைக் கிழங்குகள் 12, ரொட்டித் துண்டுகள், உப்பு, மிளகுபொடி. கிழங்குகளை நன்றாக அலம்பி வேக வைத்துக்கொள். தோல் உரித்தப் பிறகு அனல் கிட்ட மூடிவைத்தால் புஷ்பமாக உதிர்ந்துவிடும். கடாயில் நெய் விட்டுக் கடுகுதாளித்து கிழங்கையும், ரொட்டித் துண்டுகளையும் போட்டுக் கிளறவும். உப்பு, மிளகு பொடியையும் தூவவும். இரண்டு தினங்களுக்குத்தானே இருக்கப் போகிறார்கள். பொரித்த சமையலாகவே சமைத்து அவர்களைக் குஷிப்படுத்தி "இது எங்கள் வழக்கம். எப்படி இருக்கிறது பாருங்

கள்'' என்று சொல்லிக்கொண்டே மிளகாக்காரம் சேர்க்காமலேயே மிளகு காரம் கொஞ்சமாகச் சேர்த்து சமையல் விதங்களை செய்யச் சொல்லு. நம் நாட்டு சமையல் முறைகளில்தான் ரகங்கள் பல உள்ளனவே.

ராமேஸ்வரி: இன்று எங்கம்மாவுக்கும் எனக்கும் காரடைக்குத் துவரம்பருப்பு போடுவதா அல்லது காராமணிப் போடுவதா? என்ற சர்ச்சை ஏற்பட்டுவிட்டது. நீங்கள் என்ன மாமி போட்டேள்?

அன்னம்: காராமணி உபயோகிப்பதால்தான் அதற்கு காரடை என்ற பெயர் வந்ததென்று நினைக்கிறேன். அரிசியைக் களைந்து, பொன்போல வருத்து உடைத்துவைத்துக் கொண்டேன். தண்ணீர் நன்ருகக் கொதித்ததும் வெல்லத்தைப் போட்டேன். வேக வைத்திருந்த செகப்புக் காராமணியையும் போட்டு உடைத்து வைத்துள்ள அரிசி மாவையுங் கொட்டிக் கிளறி வெந்ததும் இறக்கிவைத்து மூடிவிட்டேன். அடைகளாகத் தட்டி வேகவைத்தேன். இப்படித்தானே அம்மாவும் செய்தாள்.

ராமேஸ்வரி: ஆமாம் மாமி. கடுகு, மிளகாய், கருகப்பிலை, பெருங்காயம் முதலியவைகளை வெடிக்க விட்டுக் கொண்டு தண்ணீர்விட்டாள். உப்பு சேர்த்து நன்ருகத் தண்ணீர் கொதித்ததும் வெந்த துவரம்பருப்பையும் சேர்த்து மாவைக் கொட்டிக் கிளறி, வடைகளாக தட்டி இட்டிலி சுடுவதைப்போல் வேகவைத்து எடுத்தாள்.

அன்னம்: அதெல்லாம் சரிதான். நான் செய்திருப்பதை இரண்டு தின்றுவிட்டுப் போ. வா உள்ளே.

ராமேஸ்வரி: மாமி மறந்துவிட்டேனே வீட்டிலே அம்மா வடுமாங்காய் வாங்கி வைத்திருக்கிருள்.

அன்னம். வடுமாங்காய்களை பால்போக நன்ருகத் தேய்த்து அலம்பச் சொல்லு. மஞ்சள் பொடியும் வௌக்கெண்ணெய்யுமாகக் கலந்து மாங்காய்களின்மேல் தடவவும். வேண்டிய உப்பைக் கலந்து குலுக்கி வைத்துவிடவும். கடுகும், மிளகாயுமாக மெஷினுக்குக் கொடுத்து அரைத்து அந்த பொடியையும் கலந்து, குலுக்கி, காய்களை அமுக்கி வைத்து, பாத்திரத்தின் வாயை காற்றுப்போகாமல் துணி போட்டு கட்டி மூடிவிடவும்.

ராமேஸ்வரி: தண்ணீர் விடவேண்டாமா?

அன்னம்: வேண்டாம். தானே மாங்காய் தண்ணீர் விட்டுக்கொள்ளும்.

காரடையான் நோன்பு

"ஓரடையும் நூற்றேன். ஒரு கணமும் என் கணவனை விட்டுப் பிரியாதிருக்க வேண்டும்" என்று அன்று சாவித்திரி தேவி காலன் வாயிலிருந்து தன் கணவன் சத்தியவானை மீட்டு விட்டாளாம். அந்நிகழ்ச்சி மாசியும் பங்குனியும் கூடும் நேரத்தில் நிகழ்ந்த சம்பவமாகையால் அதை நினைவூட்ட தென் னாட்டுப் பெண்மணிகளால் விரதமாகக் கொண்டாடப்படுகிறது. எப்பொழுது மாதம் ஆரம்பிக்கிறதோ அந்நேரத்தில் செய் தால் தான் புண்ணியங்கிட்டும் என்பது பெரியோரின் வாக்கு. மாசிமாதம் முடியும் தருவாயில் நூற்றால் 'மாசி நோன்பு பாசி படரும்' என்று எங்கள் பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

விரதங்கள், சந்தி, தர்ப்பணங்கள் எல்லாம் நமது கடமை களை உணர்த்தத்தான் ஏற்பட்டுள்ளன. குடும்பத்தினர் க்ஷேமத்துடனும் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ வேண்டுமென்ற எண்ணத்துடன் தான் பல விரதங்களைப் பெண்களுக்காக வகுத்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

தருமம் செய்வதில் ஒவ்வொரு நாளும் விரதநாள்தான். ஒவ்வொரு நாளும் முடியாவிட்டால் வாரத்திற்கொருமுறை, அதுவும் முடியாவிட்டால் மாதத்திற் கொருமுறையாகிலும் ஆண்டவனுக்குப் படைத்து நம்மைவிட தாழ்ந்தோருக்குக் கொடுத்து உதவுதல் வேண்டும். நாம் சாப்பிட்டு மிஞ்சியதை எளியோனுக்கு இடுவதைக் காட்டிலும் நாம் சாப்பிடுவதி லிருந்து ஏழைகளுடன் பகிர்ந்து உண்பதைத்தான் சரியான தருமமெனக் கூறலாம்.

குங்குமம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துகொண்டு வருவதால் சித்திரை வருஷப் பிறப்பன்று ஆறு மாதங்களாகின்றன. சித்திரைத் திலகம் பெருத்துவிடும்.

பெண்கள் பார்லிமெண்ட்

பிரசன்னமாயிருக்கும் அங்கத்தினர்கள்: ஸ்ரீமதிகள் லலிதா சுப்ரமணியம், கமலா தாமோதரம், ஜானகி துரைசாமி அய்யங்கார், மனோரமா நாயுடு, ஜாஸ்மின் மிஸ்டிரி, கதிஜா பேகம், காமேஸ்வரி, நளினி, விசாலாக்ஷி.

விசாலாக்ஷி: நமது கவியாசியின் மறைவுக்காக நம் வருத்தைத் தெரிவித்துக் கொள்ள இரண்டு நிமிஷங்கள் எழுந்திருந்து நின்று அம்மையாரின் ஆத்மா நிம்மதியடைவதற்காகப் பிரார்த்திப்போம்.

[சரோஜினிதேவியாரின் மறைவுக்காக அனுதாபம் தெரிவித்து மரியாதைக்காக பெண்கள் பார்லிமெண்ட் அடுத்த மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டது]

சிறுவர்களே!

வருஷப் பிறப்பை முன்னிட்டு குழந்தைகளுக்காக குங்குமம் காரியாலயத்தார் பரிசு திட்டம் ஒன்று வகுத்திருக்கிறார்கள்.

கதைகள் விடுகதைகள், கணக்கு, விஞ்ஞானம் எதைப் பற்றியாகிலும் எழுதியனுப்புங்கள். 12 வயதிற்குள் உள்ளவர்களுக்குத்தான் இந்த பரிசுப் போட்டியில் பங்குண்டு.

Printed by T.V. Ramanath at Ramanath Press, 188 Royapettah High Road, Madras 14. Edited and Published by S. Visalaksh Murali," Pachayappa's Hostel Road, Madras 10.